1979 அக்டோபர் 30]

(3) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. இரா. முத்தையா : (தொடர்ச்சி) பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தின் மீது கண்டனம் தெரிவிக்கிற தீர்மானம் ஒன்றை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கொடுத்துள்ள அந்தத் தீர்மானத்தை எதிர்த்து நேற்றையதினம் நான் தெரிவித்த கருத்துக்களுடைய தொடர்ச்சியாகச் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

பொதுவாக கண்டனத்தீர்மானத்தில் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியது பிற்பட்டோர் சலுகையில் இந்த அரசாங்கம் பெரிதும் பாதகம் செய்து விட்டது. பிற்பட்டோருடைய நலனை முழுமையாக இந்த அரசாங்கம் காப்பாற்றத் தவறிவிட்டது என்பதற்காக ஒரே ஒரு ஆணையை மட்டும் எடுத்துக் கூறி, அந்த ஆணையின் காரணமாக பிற்பட்டோரில் எத்தனையோ பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் போல் ஒரு தோணியை இங்கே உண்டாக்க முயற்சித்தார்கள்.

உண்மை நிலைமை என்னவென்றால், நான் பிரதிநிதியாக இருக்கக்கூடிய என்னுடைய சேடப்பட்டி தொகுதி போன்ற முழுமையும் கிராமங்கள் நிறைந்திருக்கின்ற அந்தப் பகுதிகளில், பெரும்பான்மையாக பிற்பட்டோர் வாழக்கூடிய பகுதிகளில் இந்தச் சட்டத்தை அவர்கள் மனமுவந்து வரவேற்கிறார்கள். அங்கே உள்ள ஏழை எளியவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாகும். இவ்வளவு காலமும் வாய்ப்புக் கிடைக்காமல் இருந்தவர்கள், இவ்வளவு காலமாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு கீழே உள்ளவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட, ஏழை எளியவர்கள்கூட இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகு வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். நான் கண்கூடாகக் கண்ட 2, 3 நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய பகுதியிலே உள்ள சாத்தூர் பகுதியிலே செல்வராஜ் என்பவர், இரண்டு ஆண்டுக்காலமாக பொறியியல் கல்லூரியில் சேருவதற்கு முயற்சி செய்தும் கிடைக்காமல் இருந்தது. சாதாரணமாக, கூலி வேலை செய்து, நாளொன்றுக்கு 2, 3 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத நிலைமையிலிருந்த அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்த ஆணை வந்ததற்குப் பிறகு

[திரு. இரா. முத்தையா] [1979 அக்டோபர் 30

அந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். காரணம் அவர் பெற்றிருக்கிற மதிப்பு எண் 84 என்று சொன்னால் இதுவரையிலும் அவர்கள் சொன்னார்களே 9 ஆயிரம் சம்பளம் வாங்குகிறவர்களின் பிள்ளைகள் 85 அல்லது 86 மார்க் வாங்கியிருப்பார்கள் என்றால் அவர்களுக்கு இந்த இடம் போய்க் கொண்டிருந்தது என்று சொன்னார்கள். இன்றைக்கு 84 மார்க் வாங்கி உள்ள பையனுக்கு எந்தவிதமான ஆதரவும் இல்லாது எந்தவிதமான துணையும் இல்லாது ஏங்கிக்கொண்டிருக்கின்ற அந்த பையனுக்கு போய்ச் சேரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, குறிப்பிட்ட வருமான வரம்பிற்குக் கீழே இருக்கிறவர்கள் எந்தவிதமான நிரந்தரமான வருவாயும் இல்லாமல் வாழ்கிற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஆணையைப் பெரிதும் வரவேற்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டினேன். பேராசிரியர் அவர்கள் சில எடுத்துக்காட்டுகளையெல்லாம் சொன்னார்கள். 8,800 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் பெறுகிறார்கள் என்றால் 9,000 ரூபாய்க்கு மேலே 1 ரூபாய் அதிகமாகப் பெறக்கூடியவர்கூட அவர் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் பெற முடியவில்லை என்று சொன்னார்கள். இது போன்று அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயும், இந்த ஆணை வருகிற வரையிலேயும் கூட கல்வி சலுகைகள், உதவித் தொகைகள் பெறுவதிலேகூட 2,400 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்கள் பெறமுடியாத நிலைமை—2,600 ரூபாய் பெற்றால்கூட அவர்களுக்கு சலுகை கிடையாது என்ற நிலைமை—இருக்கத் தான் செய்தது. இப்படி ஒரு ரூபாய் மேலே அல்லது கீழே போய் இருக்கின்ற நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, இந்தச் சட்டத்தைப் பாருங்கள், எந்த அளவிற்கு பிற்பட்டோரை பாதித்து விட்டது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

பிற்பட்ட வகுப்பினரை பாதித்தது என்றால், இதுவரையிலும் கொடுக்கப்பட்டு வந்த 31 விழுக்காட்டிலே 2 விழுக்காடு குறைந்து விட்டது, இந்த ஆண்டு 29 விழுக்காடுதான் போகிறது, இந்த ஆணையின் காரணமாக, இந்த இரண்டு விழுக்காடு முன்னேறிய சமுதாயத்திற்குச் சென்று விட்டது என்று கோடிட்டுக் காட்டியிருந்தால் அந்த ஆணை வாபஸ் பெறப்பட வேண்டும், அந்த ஆணை தவறு என்பதை நானும் கூட ஏற்றுக் கொள்ளலாம்.

அந்த வகையிலே யாரும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இரண்டு பேர் வேலை பார்த்தால் 9,000 ரூபாய்க்கு மேல் வந்து விடுமே என்று கணவன், மனைவி ஆகிய இரண்டு பேரும் ஆசிரியர்களாக வேலை பார்த்தால் 9,000 ரூபாய்க்கு மேல் வந்து விடுமே என்ற அக்கறையோடு அந்த இரண்டு பேர் வேலை பார்க்கும்

1979 அக்டோபர் 30] [திரு. இரா. முத்தையா]

குடும்பத்திற்காகப் பேசினார்களேதவிர, இரண்டு ரூபாய்கூட சம்பாதிக்க முடியாமல் இலட்சக்கணக்கான குடும்பங்கள் இந்த நாட்டிலே வாடி வருந்துகிறதே அந்தக் குடும்பங்களைப் பற்றிக் கவலைப்பட்டதாகக் கூடத் தெரியவில்லை. இன்றைக்கு இந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏன் வந்தது? கடந்த காலத்தில் மலர்க்கிரீடம் சூட்டிய சமுதாயத்தையெல்லாம் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்த்து, ஏறக்குறைய 146 சமுதாயத்தைப் பிற்பட்டோர் இனம் என்று பிற்பட்டோருடைய இனத்தை உயர்த்தியதற்குப் பிறகுதான், உண்மையிலேயே அந்தப் பின்தங்கிய சமுதாயத்திலேயும் கூட வறுமையும் வாட்டமுமே தங்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு நிர்க்கதியாகத் தள்ளிவிடப்பட்ட பிறகுதான் எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், இன்றைக்கு இந்த ஆணையைப் போட்டார்கள். மலர்க்கிரீடம் சூட்டியது அந்தக் காலத்தில் ஒரு வரம்பாக, ஒரு இலக்கணமாக இருந்தது என்றால், இந்தக் காலத்தில் அவனை வாட்டுகின்ற வறுமைதான் நாம் அவனுக்குச் செய்ய வேண்டிய சலுகையின் எல்லைக் கோடாக இருக்க வேண்டும் என்று முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இதை அவர்கள் எதிர்த்து, அதனால் இந்த அரசாங்கத்தைக் கண்டிக்கிறோம் என்று சொன்னார்கள்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய பேராசிரியர் அவர்கள் ஆகட்டும் அல்லது நேற்று பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் ஆகட்டும் அல்லது ஏனைய நண்பர்கள் ஆகட்டும் எல்லோரும் சொன்னது, இந்த அரசாங்கம் எவ்வளவு பெரிய ஜனநாயக விரோதம் ஆனது தெரியுமா, இந்த அரசாங்கம் எந்த அளவிற்கு ஜனநாயகத்தின் குரல் வளையை நெறித்து விட்டது பார்த்தீர்களா என்று சொல்லி, இந்த நாட்டில் உள்ள பஞ்சாயத்துக்களைக் கலைத்து விட்டார்களே என்று மெத்த வருத்தத்தோடு பேசினார்கள். அவர்களைப் பார்த்து நான் கேட்க ஆசைப்படுகிறேன், ஜனநாயகத்தினுடைய குரல் வளையை நெறிக்கிற செயல்தான் பஞ்சாயத்துக்களைக் கலைத்த செயல் என்று சொன்னால், அன்றைக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியினர்தானே இதை ஆரம்பித்து வைத்தவர்கள். அன்றைக்கு ஜனாதிபதி ஆட்சியை இங்கே பிரகடனப்படுத்தியதற்குப் பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்தையும் கலைத்தார்களே, அது ஜனநாயகத்தைக் காப்பாற்றிய செயலா? நான் வாதத்திற்காக இதைக் கேட்கிறேன். நகராட்சி மன்றங்களைக் கலைத்தார்களே, அது ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற செயலா? பேராசிரியர் அவர்களுடைய கட்சி மதுரை மாநகராட்சியினுடைய காலக் கெடுவை நீட்டித்துத் தர மாட்டோம், அது தனி அதிகாரியின் கீழ்தான் இயங்கும் என்று மதுரை மாநகராட்சியின் நிர்வாகத்தை முடக்கச் செய்தது ஜனநாயகத்தினுடைய

[திரு. இரா. முத்தையா] [1979 அக்டோபர் 30

குரல் வளையை நெறித்தார்கள் என்று சொல்ல முடியாதா ? அன்றைக்கு நீங்கள் செய்த அத்தனை செயல்களின் மொத்த உருவமாகத்தான் இன்றைக்குத் தேங்கிக் கிடக்கிறதே என்று சொல்லி, விரைவிலே தேர்தல் நடத்த வேண்டும் என்ற முனைப்பான காரியத்தை செய்து, ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய பதவிக் காலத்தை—ஏறக்குறைய ஒன்பதாண்டுக் காலம் அவர்கள் ஆளுகை செய்த பிறகு, அவர்களுக்குக் காலக் கெடுவை நீட்டித்துத் தர முடியாது என்று இந்த அரசாங்கம் முடித்து வைத்திருக்கிறது. பஞ்சாயத்துக்களைக் கலைத்தது மட்டும் ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிக்கிற காரியம் என்று வந்தால் அன்றைக்கு மதுரை மாநகராட்சியினுடைய நிர்வாகத்தை முடித்து வைத்தது ஜனநாயகத்தினுடைய குரல் வளையை நெறிக்கிற காரியம் இல்லையா ? ஊராட்சி ஒன்றியங்களையும், நகராட்சி மன்றங்களையும் கலைத்தது ஜனநாயகத்தினுடைய குரல் வளையை நெறிக்கிற காரியம் இல்லையா ? இன்றைக்கு என்னென்ன குற்றச்சாட்டுக்களை இந்த அரசாங்கத்தின் மீது சொல்கிறார்களோ அதே குற்றச்சாட்டுக்களை இன்றைக்கு உங்கள் மீது நாங்களும் திருப்பிச் சொல்ல முடியும் என்ற அளவிற்குத்தான் உங்களுடைய கடந்த கால செயல் முறைகள் இருந்து வந்திருக்கின்றனவே தவிர வேறு எந்த வகையிலும் இரண்டு கட்சிகளையும் சேர்ந்த நீங்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றியிருக்கிறீர்கள் என்றுதான் உங்களைப் பார்த்து நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள், மதுரை மாநகராட்சிக்கு மட்டும் தேர்தல் நடத்தினார்கள், ஆனால் சென்னைக்கு ஏன் நடத்தவில்லை என்கின்ற ஒரு செய்தியை இங்கே கேட்டிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி நிர்வாகத்தை நீங்கள் கலைக்கின்ற நேரத்தில் நீங்கள் சொன்னது அவர்களுக்கு இருந்த கால அளவு முடிந்து விட்டது, மீண்டும் எக்ஸ்டென்ஷன் கொடுக்க வில்லை என்று சொல்லித்தான் அந்த நிர்வாகத்தை முடித்து வைத்தீர்கள். ஆனால் இன்றைக்கு சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் நீங்கள் அந்த நிர்வாகத்தைக் கலைத்த நேரத்தில் சில குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்லி கலைத்திருந்தீர்கள்.

(முற்பகல் 9—40)

அந்தக் குற்றச்சாட்டுகளுடைய முடிவு தெரிகிற வரையிலேயும் அந்தத் தேர்தலை எப்படி நடத்துவது என்று கருதித்தான் எந்தக் குற்றச்சாட்டையும் நீங்களே சொல்லாமல் முடக்கி வைத்த மதுரை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தி அங்கே ஜனநாயகத்தைப் பூத்துக் குலுங்கச் செய்திருக்கிறார் எங்க

1979 அக்டோபர் 30] [திரு. இரா. முத்தையா]

ஞடைய புரட்சித் தலைவர் அவர்கள். ஆக, எந்த வகையிலே நீங்கள் எந்தெந்தக் காரியங்களைச் சொன்னாலும் கூட இந்த அரசாங்கம் தவறு செய்து விட்டது என்பதை எந்த ஒரு கால கட்டத்திலேயும் நிரூபிக்க முடியாத அளவுக்கு உங்களுடைய செயல் முறைகள் இருந்து வந்திருக்கின்றன என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்துச் சொன்னார்கள், இன்றைக்கு நாட்டிலே ஒரு சில பகுதிகளிலே நடந்து வரக்கூடிய காவல் துறையினர் போராட்டத்தைச் சுட்டிக் காட்டி எவ்வளவு பெரிய கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லி இரண்டு கட்சிக்காரர்களும் மெத்த ஆதங்கத்தோடு உங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னீர்கள். ஆனால், வருத்தப்படுகிறீர்கள், நீங்கள்தான் தூண்டிவிட்டீர்கள் என்று சொல்லுகிறபொழுது. சில நேரத்தில் சில உண்மைகளைச் சொல்லும்போது கோபப்படுகிறீர்கள், ஆவேசப்படுகிறீர்கள், ஆத்திரப்படுகிறீர்கள். ஆனால், ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் 22-ம் தேதி மதுரை மாவட்டத்தில் பேசுகிறபொழுது ஒரு கருத்தைக் குறிப்பிடுகிறார். காவல் துறையினருடைய போராட்டத்தின் காரணமாக எங்கும் எந்த விதமான அசம்பாவிதமும் நடந்துவிடவில்லை. பொதுவாக, அமைதி தவழ்கிறது என்கிற கருத்தைக் குறிப்பிட்டார்கள். அது பொதுவாக நாட்டினுடைய நிலைமை. அந்த நிலவரத்தைச் சொன்னவுடன் 24-ம் தேதி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், சென்னையிலே பேசுகிறார்கள், முதலமைச்சரவர்கள், ''நாட்டிலே அமைதி தவழ்கிறது'' என்று சொல்கிறார். எங்கும் அசம்பாவிதம் நடக்கவில்லை என்று பெருமிதப்படுகிறார். எங்கும் அசம்பாவிதம் நடக்கவே இல்லையா ? கோயம்புத்தூரில் ஒரு ஊரில் 8 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்களே அது அசம்பாவிதமாகத் தெரியவில்லையா? இன்னும் அங்கிங்கெனாதபடி அசம்பாவிதங்கள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. அத்தனையும் முதலமைச்சர் மறைக்கப் பார்க்கிறார் என்ற கருத்தைச் சொல்லி 'அசம்பாவிதம் நடந்துகொண்டுதானிருக்கிறது' என்ற ஒரு கருத்தைக் குறிப்பிடுகிறார். 24-ம் தேதி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசுகிறார்கள். 25-ம் தேதி நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இராமநாதபுரம் நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆயுதம் தாங்கிய ஒரு 100 பேர் கொண்ட கூட்டத்தைத் திரட்டிக் கொண்டு—இங்கேயிருக்கிற இராமநாதபுரம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் 26-ம் தேதி சட்டமன்றத்திலே கலந்துகொள்வதற்காக, 25-ம் தேதி இரவே இராமநாதபுரத்திலேயிருந்து புறப்பட்டு சென்னை வருகிறார்—இரவோடு இரவாக 100 பேர்

[திரு. இரா. முத்தையா] [1979 அக்டோபர் 30

கொண்ட ஆயுதம் தாங்கிய கும்பல், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் இங்கே கடமையாற்ற வந்த நேரத்தில், அங்கே அவருடைய வீட்டைத் தாக்குகிறார்கள். இராமநாதபுரம் நகரத்தினுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் திரு.பூமிநாதனை தாக்கி அவர் மண்டையோட்டை பிளக்கச் செய்து, அவர் இன்றைக்கு ஆபத்தான நிலைமையிலே ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

அது மட்டுமல்ல, அந்த நகரத்திலே உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கொடிகளைப் பார்க்கிற இடத்தில் எல்லாம் வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழு உறுப்பினர் ஒருவர் தங்கியிருந்த விடுதி தாக்கப்படுகிறது. என்ன காரணம்? இதற்கு முன்னோ, அன்று காலையிலோ, அதற்கு முதல் நாளே ஏதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அந்த ஊரில் ஏதாவது தகராறு இருந்ததா, சண்டை சச்சரவுகள் இருந்ததா? வேறு ஏதாவது அடிப்படை காரணங்களாலே அவர்களுக்குள்ளே தகராறு இருந்ததா? எதுவும் இல்லை. அமைதியாக இருந்த ஒரு ஊரில் திட்டமிட்டு, அன்றைக்கு இரவே இப்படிப்பட்டதொரு பயங்கரமான சூழ்நிலையை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். இந்த நேரத்திலேதான் நான் ஒன்றை ஒப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள், அசம்பாவிதம் நடந்து கொண்டுதானிருக்கிறது என்று அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கங்கே அசம்பாவிதத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இதுதான் அந்த நிகழ்ச்சி காட்டுகிற உண்மையே தவிர, எப்படியாவது இந்த நாட்டில் ஒரு அமைதியில்லாத சூழ்நிலையை ஏற்படுத்திவிட வேண்டும், ஒரு ஆரவாரமான சூழ்நிலையை ஏற்படுத்திவிட வேண்டுமென்று எண்ணுகிற திட்டமிட்ட செயலில் விளைவுதான் இந்தப் பின்னணி என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு சட்டமில்லை, ஒழுங்கில்லை என்று பேசுகிற கட்சிக்காரர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். நேற்றைய முன்தினம் கூட எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் வடசென்னையைச் சேர்ந்த திரு. தமிழ்வாணன் என்பவர், கட்சி அமைப்பாளர், மாண்புமிகு புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் மன்றத் தலைவர் வெட்டிக் கொலை செய்யப்படுகிறார். இப்படிப்பட்ட நேரத்தில் அருமை நண்பர்களே பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உங்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கொலை வெறி பிடித்த இயக்கம் போல ஒரு பெரும் தட்டத்தை தோற்றுவிக்கும் ஒரு பின்னணிதான் இதுவே தவிர வேறு என்ன பொருள்?

1979 அக்டோபர் 30] [திரு. இரா. முத்தையா]

இத்தனையும் செய்து விட்டு சட்டமன்றத்திலே அவர்கள் இந்த சர்க்காரைக் கண்டிக்கும் அந்தக் காரியத்தையும் செய்கிறார்கள். மக்கள் பாராட்டுகிற, மெச்சுகிற எந்தக் காரியத்தையும் இந்த சர்க்கார் செய்யவில்லை என்கிறார்கள்.

கிராமப் பகுதிகளில் எல்லாம் மின்சாரம் வழங்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறதே இந்த அரசு, அது பாராட்டப் படவேண்டிய ஒரு அம்சம் இல்லையா?

என்னுடைய பகுதியிலே, அதைப்போன்ற கிராமப்புறப் பகுதிகளிலே பேருந்து என்றாலே என்ன என்று பார்ப்பதற்கு 5, 6 மைல்கள் நடந்து சென்றுதான் பார்க்க வேண்டுமென்கிற நிலையை மாற்றி எல்லாப் பகுதிகளிலும் இன்று பேருந்துகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு அப்படி திட்டங்களையெல்லாம் போட்டு மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோமே, அது பாராட்டப்படவேண்டிய அம்சம் இல்லையா?

சாலைகளே இல்லாத இடங்களில் எல்லாம் இன்றைக்கு சாலைகள் போட்டுக் கொடுக்க திட்டங்கள் போடப்பட்டு செயல்படுத்தப்படுகிறதே, அது பாராட்டக்கூடிய அம்சம் இல்லையா?

இன்னின்னாருக்கு இவ்வளவு நிலம் சொந்தம் என்று சொல்ல முடியாத நிலைமையில், யார் யாருக்கு எவ்வளவு, எங்கே சொந்தம் என்று தெரியாமல் இருந்த நிலைமையை மாற்றி இந்த அரசு எல்லா நிலங்களையும் முழுமையாக சர்வே செய்து, நிலங்களைப் பிரித்து யார் யாருக்கு எவ்வளவு சொந்தம் என்று வரையறுத்திருக்கிறது. மிகுதியாக உபரி நிலங்களை எடுத்து நிலமில்லாத ஏழைகளுக்குக் கொடுக்க முடியுமா என்று கண்டு பிடிக்கிற அளவிற்குக் காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. அவையெல்லாம் பாராட்டப்படவேண்டிய திட்டங்கள் இல்லையா?

வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் மூலம் இன்றைக்கு ஏரி, குளங்கள் வெட்டப்படுகின்றன. சாலைகள் போடப்படு கின்றன. சாலை இல்லாத கிராமங்களைப் பக்கத்திலே உள்ள நெடுஞ்சாலைகளோடு இணைக்கிற வேலைகள் நடைபெறு கின்றன. இது பாராட்டப்பட வேண்டிய அம்சம் இல்லையா?

அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராஜர், காயிதே மில்லத் இஸ்மாயில் இவர்

[திரு. இரா. முத்தையா] [1979 அக்டோபர் 30

களுக்கு எல்லாம் அரசாங்கத்தின் சார்பிலே பிறந்தநாள் விழாக்கள் கொண்டாடுகிறோம். புரட்சி கவி பாரதி, பாரதிதாசன் இவர்களுக்கு எல்லாம் அரசாங்கமே விழா நடத்துவது என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறோமே, அது பாராட்டப் படவேண்டிய ஒரு காரியம் இல்லையா?

பாரட்டுகிற காரியங்கள் இவையெல்லாம் இருக்கிறது என்பதைக் கூட சுட்டிக்காட்ட மனம் இல்லையென்று சொன்னால் உண்மையிலேயே நாம் வருத்தப்படத்தான் வேண்டியிருக்கிறது.

நகைச்சுவையோடு பேராசிரியர் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு நிதியமைச்சரும் பெருந்தன்மையோடு சொன்னார்கள், மீண்டும் தேர்தல் வந்தாலும் கூட பேராசிரியர் இந்த மன்றத்திற்கு வருவார் என்று சொன்னார்கள். பேராசிரியர் அவர்களும், ஆமாம் திரும்பவும் வருவேன். ஆனால் இடம்மாறி அமர்வேன் என்று சொன்னார்கள். பேராசிரியர் இடம் மாறி அமர்வார்களானால் நாங்கள் உண்மையிலேயே வரவேற்கிறோம். ஆனால் அவர்கள் நினைப்பதைப் போல அந்தக் கட்சி இந்தப் பக்கமும் இந்தக் கட்சி அந்தப் பக்கமும் போய்விடும் என்று மட்டும் கருதுவார்களானால் அது கனவுலகத்திலே வேண்டுமானால் நடக்கலாமே தவிர உண்மையிலேயே வருங்காலத்தில் நடந்து விடாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களை நாட்டு மக்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அரசாங்கத்தை இன்றைக்கு நாட்டு மக்கள் நல்ல அரசாங்கம் என்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்கார் மீது நீங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறீர்களே, அது உண்மையிலேயே கண்டனத் தீர்மானமாக அமையமுடியாது. கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தவர்களைதான் மக்களுடைய கண்டனத்திற்கு உரியவர்களாக பொதுமக்களால் கருதப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்து, இந்தக் கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு தன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே ஒரு பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். கடந்த 24 ஆம் தேதி நான் இராமநாதபுரத்திலே இருந்து புறப்பட்டு சட்ட மன்றத்திற்கு வந்து விட்டேன். 25 ஆம் தேதி இரவு 9 மணிக்கு சுமார் 100 பேர்கள் கொண்ட ஒரு கும்பல் ஆயுதங்கள் கொண்டு என்னுடைய வீட்டை இராமநாதபுரத்திலே இருக்கும் என்டைய வீட்டைக் கடுமை

1979 அக்டோபர் 30] [திரு. து. இராமசாமி]

யாகத் தாக்கி இருக்கிறார்கள். வீட்டிலே இருந்த பெண்களும், குழந்தைகளும் அலறி அடித்துக் கொண்டு பக்கத்து வீட்டிலே புகுந்திருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்புக் கொடுத்திருக் கிறார்கள்.

அதற்குப் பிறகு ஊரிலே உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகளை அறுத்து, கொடிக் கம்பங்களை வெட்டி வீழ்த்தி இருக்கிறார்கள்.....

(முற்பகல் 9.50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமசாமி அவர்கள் சொல்வது பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் அல்ல—சொல்ல விரும்புவதை அவர்கள் முறைப்படுத்திச் சொன்னால், நடவடிக்கை எடுப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. உறுப்பினர் என்ற முறையில் அவர்கள் இந்தச் சட்டமன்றத் திற்கு வருகிறபோது ஏற்பட்ட கஷ்டத்தை மட்டும் எடுத்துச் சொன்னால், அது நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதற்காகதான் அவர்களைப் பேச அனுமதித் தேன். அத்தோடு அவர்கள் நின்று இருக்க வேண்டும். ஆனால் அரசியல் கட்சிகள் கொடிகள் பற்றிய பிரச்சினைக்குள் போகிறார்கள். மற்ற பிரச்சனைகள் என்றால் எழுதிக் கொடுத்தால் கவனிக்கப் பெறும். இங்கே அவற்றை நான் அனுமதிப்பதற்கு இல்லை. உட்கார வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நான் மாயவரம் பெரியார் ராமசாமி தெருவில் 33 ஆவது எண்ணுள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டில் பின்புறம் 10 கான்ஸ் டேபிள்கள்—காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள், அந்தப் பகுதியில் போய் வரக்கூடியவர்களை ரிட்டிக் கொண்டு வருகிறார்கள். நான் கூட அந்தப் பகுதுக்குச் செல்ல முடியவில்லை. வீட்டிற்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. இதற்கு தாங்கள் அவையிலே தான் என்னால் பாதுகாப்பு தரமுடியும் என்று சொல்லிவிடக்கூடாது. நாங்கள் வீட்டில் ஊரில் இருந்தாலும் பாதுகாப்பு தர முடியும் என்று சொல்லிவிடக்கூடாது. நாங்கள் வீட்டில் ஊரில் இருந்தாலும் பாதுகாப்பு தர ஏற்பாடு செய்யுங்கள். இன்னொரு நிலையைக் கொண்டு வந்து போடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள் .. .. ..

[1979 அக்டோபர் 30

திரு. க. சுப்பு : இங்கே எதிர்க் கட்சி சார்பிலும், பொது மக்கள் சார்பிலும் மிரட்டப்படுகிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இப்போது தெரிகிறது, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்று, இதற்குப் பிறகும், முதலமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்ன கருத்து வேறு. அவர் மறுபடியும் பேச ஆரம்பித்தால், பிரச்சினை வேறு விதமாகத் திரும்பும். அந்தப் பிரச்சினையைப் பேச வேண்டாம். திரு. என். கிட்டப்பா, 10,15 காவல் துறையினர் வீட்டைக் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : நான் சொல்ல வந்தது, ஆளுங் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து, திரு. சுப்பு, அவர்கள் ஒன்றை உணர வேண்டும். அவர் சொன்னது வேறு.

திரு. என். கிட்டப்பா : நான் சொல்ல வந்தது என் வீட்டைச் சுற்றி போலீஸ்காரர்கள் சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது அல்ல. என் வீட்டிற்குப் பின்னாலே நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். நான் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறவன். நான் வழக்குக்குள்ளே போக விரும்பவில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேரவை தலைவரிடத்தில் எழுத்து மூலமாக அதனை எழுதிக் கொடுத்தால் நான் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : நான் தான் அவையிலேயே சொல்லியிருக்கிறேனே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். கிட்டப்பா அவர்கள் நான் சொல்வதைக் கேட்டால் நல்லது. திரு. இராம சாமி அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறபோது அவர்களது வீடு தாக்கப்பெற்றதாகச் சொன்னார்கள். அவர்களுடைய பாதுகாப்புக்கு அது உறுப்பினருடைய இல்லமாக இருந்தாலும் சரி, அவருக்கே ஆனாலும் சரி பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே அதை எழுப்ப அனுமதித்தேன். பிறகு, இரண்டாவது பிரச்னையை அவர் எழுப்பியபோதுதான்; அவரை தடுத்து விட்டேன். உடகள் பிரச்னை பற்றியும், அப்படி இருக்குமானால், உறனே என் கவனத்திற்கு எழுத்து மூலமாகக் கொடுங்கள் என்று சொன்னேன்.

1979 அக்டோபர் 30]

திரு. என். கிட்டப்பா : நான் தங்களுடைய மேலான கவனத்திற்குத்தான் அதைக்கொண்டு வந்தேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் அவைக்கு வருவதற்கு முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். நான் என் வீட்டிற்கே போக முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து எழுத்து மூலமாகத் தாருங்கள். என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம் (உட்கார்ந்து கொண்டு) : சபாநாயகர் ஆதரவு இருந்தால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. கனம் உறுப்பினர் அதை மறந்து உட்கார்ந்து கொண்டு பேசுகிறார்கள்.

* திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களால் அவர் சார்பாகவும், ஏனைய கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருந்த கண்டனத் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையிலும் முன்மொழிந்து பேசிய அவர்களுடைய பேச்சுக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, வழி மொழிந்து பேசுகையில் ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன் வைக்க முன் வந்துள்ளேன்.

கண்டனத் தீர்மானம் இங்கே பல்வேறு கோணங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 3, 4 தினங்கள் இந்தத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த 3, 4 தினங்களுக்கு பொதுப் பணத்திலே இருந்து நாம் செலவழிக்கிறோம். அந்த உணர்வு எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களுக்கு உண்டு. ஆளும்கட்சியில் இருப்பவர்களுக்கு அந்த உணர்வு இருக்கிறதா என்பதை அவர்கள்தான் சொல்ல வேண்டும். தீர்மானத்தைக் கொண்டுவந்து விவாதிக்கும்போது இந்த ஆட்சியினுடைய நடைமுறைகள் செம்மைப்பட வேண்டும். குறைகள் அகற்றப்பட வேண்டும் ; நாட்டுக்கு நிறைவுகள் பெருக வேண்டும்; நலிவுகள் அகற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கண்டனத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன. அரசியல் காரணங்களும் அதிலே வந்துவிடுகின்றன என்பது உண்மை அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் எல்லாம் எப்போர்ப்பட்டவர்கள் என்று ஆளும்கட்சித் தரப்பில் இருந்து பேசுகின்ற பேச்சுக்களைக் கேட்கும் போது, ஆளுகின்ற பொறுப்பிலே உள்ளவர்களுக்கு அறிவுரை

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 அக்டோபர் 30

கூறுவது அல்லது வேண்டுகோள் விடுப்பது விழலுக்கு இறைத்த நீராகும் என்ற நிலையைத்தான் நாம் காணமுடிகிறது. அது மிகவும் வருந்தத்தக்க ஒன்று.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் எல்லாம் எப்போர்பட்டவர்கள் என்று நேற்றையதினம் ஆளுங்கட்சி தரப்பி பிலேயிருந்து ஒருவர் பேசும்போது சொன்னார். அதை மீண்டும் நான் குறிப்பிட விரும்பவில்லை. ஏனென்றால் சபைக் குறிப்பி லிருந்து அதை நீக்கிவிட்டீர்கள். ஆகையால் அதை விட்டு விடுகிறேன்.

மக்கள் பணத்திலேயிருந்து செலவழித்து, 4 நாட்கள் இந்த சபை இந்தத் தீர்மானத்திற்காக நடைபெறுகிறது. அமைச்சர் பெருமக்கள் எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டும் : இதற்கு முன்னால் இருந்தவர்கள் மீது என்ன குறைபாடு இருந்தது, அவைகளை எப்படி அகற்ற வேண்டுமென்று பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அவையிலே கருத்துக்களை எடுத்து வைக்கும்போது இந்த அவையிலே இந்த ஆட்சியினுடைய நாயகராக யார் இருக்கிறாரோ அவர், இந்த அவையிலே இல்லாமல், கண்டனத் தீர்மானத்தை விவாதிக்கும்போதுகூட இந்த அவைக்கு அவர் வருவதில்லை என்று சொன்னால் ஜனநாயகத்தை இந்த ஆட்சியில் இருக்கிற அமைச்சர்களை நான் விட்டுவிடுகிறேன்.— இந்த ஆட்சிக்கு நாயகராக இருக்கிறவர் எவ்வளவு தூரம் மதிக்கிறார் என்பதை நாட்டு மக்கள் இன்றைக்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை, இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு பல் வேறு காரணங்கள் இருந்தாலும் சட்டமன்றம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரையில் ஒரு மணி நேரம்கூட இந்த அவையிலே என்ன கருத்தைச் சொல்கிறார்கள் என்று கேட்க மனம் இல்லாமல் அவர் உதாசீனம் செய்கிறார் என்பதைப் பார்க்கும்போது இதைவிட இந்த ஆட்சியைக் கண்டிப்பதற்கு வேறு ஒரு காரணம் இருக்க முடியாது. இந்த உதாசீனப் போக்கை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த அவைக் கூட்டத்தைக் கூட்டுவதிலேகூட இந்த அரசு மெத்த உதாசீனம் காட்டுகிறது. பொதுவாக இந்த அவை பட்ஜெட் தொடர் என்று ஒரு கூட்டம் நடந்தது. அடுத்து மான்சூன் செஷன் என்று ஒரு தொடர் கூட்டத்தை நடத்தும். அதற்கு அடுத்து வின்டர் செஷன் என்று ஒரு செஷனை நடத்தும். ஆனால் இன்றைக்கு பட்ஜெட் தொடர் கூட்டம் முடிந்த பிறகு மான்சூன் செஷன் என்னவாயிற்று என்று தெரியவில்லை. பருவ மழை தவறினால் நாட்டுக்குக் கேடு என்று சொல்வார்கள். மான்சூன் செஷன் தவறினால் நாட்டுக்கு என்ன கேடு ஏற்படும் என்று அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

1979 அக்டோபர் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

விண்டர் செஷன் எவ்வாறு இருக்கிறது ? கடந்த ஆண்டு கூட்டப்படவில்லை. ஒரேயடியாக பட்ஜெட் செஷன் எனறு கூட்டினார்கள். இப்படி பல்லாண்டு, பல்லாண்டு காலமாகப் மிகப் பெரிய ஜனநாயக வித்தகர்கள் இந்த அவைக்கு அளித்த மரபுகளை, நல்ல பாரம்பரியத்தை, ஜனநாயக நெறிமுறைகளை இந்த அரசு அழித்துக் கொண்டு வருகிறது என்ற குற்றச் சாட்டை முதல் கண்டனமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.00[

இந்த அரசுக்கு சட்டசபையைச் சந்திக்கக்கூடிய திராணி இல்லை, சட்டசபையைக் கூட்ட வேண்டுமென்ற தெம்பு இல்லை. சட்டசபையைக் கூட்டினால் நாம் இடைக்காலத்தில் நடந்து கொண்டோமே அவைகளுக்கெல்லாம் நம்மிடத்தில் என்ன பதில் இருக்கிறது என்ற தயக்கத்தின் காரணமாக, அச்சத்தின் காரணமாக, பயத்தின் காரணமாக சட்டசபையைக் கூட்டுவதற்கே தயங்குகின்ற ஒரு ஆட்சியை, ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கிற ஆட்சியாக இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியை கண்டிக்கக்கூடாதா? இந்த ஆட்சிக்கும் ஒரு கண்டனத் தீர்மானமா என்று கேட்கக் கூடிய வர்கள் இருக்கிறார்களே அவர்களைப் பார்த்துத்தான் எனக்கு சிரிப்பாய் வருகிறது. அவர்களும் கூட என்னோடு சேர்ந்து இப்போது சிரிக்கிறார்கள். இன்னொன்று, சட்டசபை நடக்கும் போது இந்த அமைச்சரவைக்கு இருக்கிற அதிகாரம்

The sovereign authority, the excutive authority that emanate, is Only from the eternal permanent constitutional source of this House.

இந்த அரசுக்கு இருக்கிற அதிகாரங்கள் சட்டசபையிலிருந்து இந்த அரசுக்கு அமைந்த ஒன்று. சட்டசபை கூட்டப்படும் போது அமைச்சர் பெருமக்கள் வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக் கொள்ளக்கூடாது. முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தால் கூட அந்த நிகழ்ச்சிகளைத் தள்ளிப் போட வேண்டும். அதுதான் மரபு. ஏனென்றால் இது மக்கள் பிரதிநிதித்துவ சபை. இந்தச் சட்டசபைக்கு மரியாதை கொடுக்க மாட்டேன் என்று ஒரு முதல் அமைச்சர் சொன்னால் அந்த முதல் அமைச்சருக்கு மக்கள் எப்படி மரியாதை கொடுப்பார்கள். மக்கள் பிரதிநிதித்துவ சபை எப்படி மரியாதை கொடுக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. லத்தீப் அவர்கள் வேகமாகப் பேசும்போது, இந்த அவைக்கு மரியாதை தரமாட்டேன் என்று முதல் அமைச்சர் சொன்னார் என்று ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். எப்போது சொன்னார் ?

[1979 அக்டோபர் 30

திரு. சி. ஆறுமுகம் : 'சொன்னால்' என்று தான் சொன்னார்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : 'ல்' க்கும் 'ன்' க்கும் வித்தியாசம் தெரியாமல் பேசினால் எப்படி?

திரு. எம். ஏ. லத்தீப் : சொன்னால் என்றுதான் சொன்னேன். எனக்கு மொழியில், வித்தியாசம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மக்களின் மனோபாவத்தைப் புரிந்து கொண்டு பேசக் கூடியவன் நான். எது சட்டசபை, எது மக்கள் சபை, எதை எதை எப்படி எப்படிப் பேச வேண்டும், எந்தெந்த முறையில் பேச வேண்டும், எந்தெந்த வேலைகளை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று வித்தியாசம் தெரியாதவர் எல்லாம் இன்று முதல் அமைச்சராக இருக்கும்போது என் மொழி ஞானத்தில் என்ன வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சியின் மீது நான் சொல்கிற முதல் குற்றச்சாட்டு, இந்தச் சட்டசபையின் அடிப்படையை தகர்த்தெறிய, இந்தச் சட்டசபையின் உரிமைகளை தகர்த்தெறிய இந்த ஆட்சி முனைந்து செயல்பட்டு வருகிறது. என்பது என் முதல் குற்றச்சாட்டு, அது மட்டும் அல்ல. அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்யாமல் உரிமைகளை மட்டும் நினைத்துக்கொண்டு, அமைச்சர்களுக்குள்ள அதிகாரங்களை மட்டும் நினைத்துக் கொண்டிருக்கிற ஒரு அதிகார போதை, அதிகார மமதை பிடித்த ஒருவருடைய தலைமையில் இந்த ஆட்சி இயங்கிக் கொண்டிருப்பது இந்த நாட்டுக்கு ஏற்பட்ட ஒரு மாபெரும் சோதனை, வேதனை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்கள் வேகமாகப் பேசலாம், ஆனால் வார்த்தைகள் கடுமையாக இருப்பது நல்லதல்ல. தயவுசெய்து மமதை என்பது போன்ற வார்த்தைகளைப் பயன் படுத்தாமல் இருப்பது நல்லது.

திரு. சி. ஆறுமுகம் : திரு. ஜெயமணி அவர்கள் பேசும்போது சொனன வார்த்தைகளை மட்டும் எப்படி அனுமதித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பேசும்போது நான் இல்லாமலிருந்திருக்கலாம். இதுவே உங்களுடைய பதட்ட நிலையைக் காட்டுகிறது. உட்காருங்கள். திரு. லத்தீப் அவர்களுக்குப் பேசுகிற உரிமை உண்டு. நான் இல்லை என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட வார்த்தைகளை பேசாமல் தவிர்க்கலாம் என்றுதான் சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தங்களது அறிவுரையை ஏற்றுக் கொள்கிறேன். நேற்றைய தினம் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பேசும்போது ஒரு உறுப்பினர் கண்டனத் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்களை— *** என்று குறிப்பிட்டார்கள்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னவுடன இரண்டையும் எடுத்திருக்கிறேன் அதை மறந்து விட்டுப் பேசுகிறீர்கள். எடுத்துவிட்ட வார்த்தைகளை மறுபடியும் பயன்படுத்துவது தவறு. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இரண்டையும் நீக்கியிருக்கிறேன். * *

–என்று கூட்டாக, மொத்தமாகச் சொன்னார்கள். தனிப்பட்ட வர்களைப் பார்த்து, 'மமதை' என்று வார்த்தையைப் பயன் படுத்திச் சொல்லவேண்டிய அவசியமல்ல. நான் அப்படித்தான் சொல்வேன் என்றால் நான் அதற்குக் குறுக்கே நிற்கத் தயாரா யில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆகவே, இந்த நாட்டில் இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்கள், முன்னால் யார் யாராலோ வர்ணிக்கப் பட்ட சொல் இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட் சித் தலைவர்களையும், உறுப்பினர்களையும் பார்த்துச் சொல் வதற்கு பயன்படுமானால், அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் தான், தாழ்த்தப்பட்டவர் களை யார் யாராலோ எந்த வார்த்தைகளால் வர்ணிக்கப் பட்டதோ, அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான். ஆனால் நாங்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும், தமிழ் சமுதாயத்திற்காக, தமிழ் இனத்தை பாது காப்பதற்காக, தமிழுக்காக, தமிழ் சமுதாயத்தினுடைய மானம், மரியாதையைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் இங்கே இருக்கி றோம் என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்த ஆட்சியைப் பற்றி கண்டனம் என்று சொல்லும்போது கண்டனம் எங்கே ஆரம்பித்தது, இங்கேயா ஆரம்பித்திருக் கிறது. வெளியே ஆரம்பித்து விட்டதே. சாதாரண தெருக் களிலே, சுவர்களிலே, அங்கங்கேயுள்ள அங்காடிகளிலே கண்டனம் தெரிவிக்கப்பட்டு, பத்திரிகைகளில் எல்லாம் சுட்டிக்காட்டப்பட்டு பத்திரிகைகளில் எல்லாம் குத்திக்காட்டுகின்ற முறையில் எழுதப்பட்டு இருப்பதையெல்லாம் நீங்கள் எல்லாம் படித்து பார்க்க முடியவில்லையா ? இந்த நாட்டு மக்கள் எப்படி அனுபவித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? மக்களுடைய இதய துடிப்புகளை உணர்ந்து பார்க்க முடிய வில்லையா? இவைகளை எல்லாம் நீங்கள் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்....

(ஆளும் கட்சி தரப்பிலிருந்து சிறிது சப்தம் வந்தது....)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 அக்டோபர் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்....

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த அரசின் தலைமைச் செயலாளராக இருந்தவர் ராயப்பா அவர்கள் அவர் சில கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசைப்பற்றி. எதிர்க்கட்சித் தலைவர்களை விட்டுவிடலாம், இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சிக்காரர்களை விட்டுவிடலாம். இந்த அரசின் ஆட்சிப் பொறுப்பில் பல்லாண்டு காலம் இருந்தவர், அவரை சாட்சிக்கு அழைத்த ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவரை சாட்சிக்கு அழைத்தது எல்லாம் நினைவில் இருக்கிறது. பல தடவை சாட்சிக்கு அழைத்தவர் ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள். அவர் கட்சியைச் சார்ந்தவர் அல்ல, அவர் சொல்லுகிறார், இந்த நாட்டுக்கு அவர்கள் சொல்லுவது, ஒரு காரியத்தை இவர்கள் செய்ய வேண்டும். இன்று நாடு எங்கே போய்க்கொண்டிருகின்றது. முதலமைச்சர் அவர்கள் இதைப் பார்த்து விட்டு ஒரு நல்ல காரியம் செய்யவேண்டும். முதலமைச்சர் அவர்களே நீங்கள் ராஜிநாமா செய்துவிட்டு உங்கள் தொழிலுக்குத் திரும்பிப் போங்கள், இல்லாவிட்டால் இந்த நாடு குட்டிச்சுவராகி விடும். நிர்வாக சீர்கேடு அதிகம், நிர்வாக தலையீடு அதிகம், ஜனநாயகம் என்பது குழிதோண்டி புதைக்கப்படுகிறது. அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களால் எந்தக் காரியத்தைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று, ராயப்பா சொன்னார்கள். ஏன் இவ்வளவு தூரம் சொல்லுகிறார்? அமைச்சர் பெரு மக்கள் இருக்கிறார்கள், அமைச்சர்கள் என்பவர்கள், கான்ஸ்டிட்யூஷன்படி —அரசியல் சட்டத்தின் படி—சில குறிப்பிட்ட அதிகாரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்....

They are individually privileged and they are collectively also privileged. That team is led by a particular person who has the additional responsibility and privilege. But the individual ministers have individual responsibility and privilege. That privilege is being restrained, that privilege is jeopardised by the most undemocratic attitude of the Hon'ble Chief Minister.

என்கின்ற அளவுக்கு நம்முடைய ராயப்பா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால் இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் .. .. ..

1979 அக்டோபர் 30]

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ராயப்பாவைப் பற்றி சொல்லுகிறார்கள். ராயப்பா என்ன தமிழகத்தின் அத்தாரிட்டியா?

திரு. எம். ஏ. லத்தீப் : ராயப்பாவுக்காக நான் வக்காலத்து வாங்கவும் இல்லை. ராயப்பா பெரிய அத்தாரிட்டி என்றும் நான் சொல்ல வில்லை. தமிழகத்தில் சீப்-செக்ரட்டரியாக பலகாலம் பணியாற்றியிருக்கிறார்.....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் சீப்-செக்ரட்டரியாக இருந்தவர் வேறு ஒரு பதவிக்கு அனுப்பப் பட்டாரே, அந்த ராயப்பாவா?

திரு. மு. கருணாநிதி : அதே ராயப்பா தான், நீங்கள் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்த அதே ராயப்பா தான்.

(முற்பகல் 10—10)

திரு. எம். ஏ. லத்தீப் : நீங்கள் சாட்சிக்கு அழைத்த அதே ராயப்பா தான். உங்களுடைய சாட்சிதான், இன்றைக்கு உங்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறார்..

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்: முக்கியமான பிரச்சனை இருக்குமானால், அதிலே விளக்கம் தேவைப்படுமானால், எழுந்திருந்து கேட்கலாமே தவிர, எல்லோரும்..(குறுக்கீடு)

திரு. சி. ஆறுமுகம் : நாங்கள் யாரும் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பக்கத்திலேயும் எழுந்திருந்தார்கள், 3 பேர்கள் எழுந்திருந்தார்கள். நான் எல்லோரையும் தான் கேட்டுக் கொள்கிறேன். நான் இந்தப் பக்கம் பார்க்கவில்லை என்பதால் அப்படிப் பொருள் அல்ல. அவையிலுள்ள எல்லோரையும் தான் நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். ஒரு உறுப்பினர் பேசும்போது, குறுக்கிடாமல் இருக்கும்படி

கேட்டுக்கொள்கிறேன். நான் முடிவெடுக்க வேண்டும். ஆறுமுகம், உட்காருங்கள். கட்சிக்கு கட்டுப்பட்டு பணியாற்றுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : எங்கள் கட்சிக்கு கட்டுப்பட்டுத்தான் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்துப் பேச வேண்டும். முதலில் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும். பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியின் சார்பாக நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். எந்த நேரத்திலேயும் சத்தம் போட மாட்டார்கள். அமைதியாக இருப்பார்கள். இதேபோன்ற உறுதிமொழியை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உங்களுக்கு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளும்கட்சிப் பகுதியிலே இனிமேல் ஒலி யெழுப்ப மாட்டார்கள் என்று அவை முன்னவர் அளித்த உறுதிமொழியை ஏற்று, அதே உறுதி மொழியை நானும் அவருக்கு அளிக்கிறேன். எதிர்க் கட்சியிலே, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப் பினர்கள் தயவுசெய்து அமைதியாக இருக்க வேண்டுமென்று நான் அவர்களை யெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில், நேற்றும் நடைபெற்றிருக் கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகள் பரிமாறப்பட்டிருக்கின்றது. ஆனால், அப்போது யாரும் குறுக்கிடவில்லை. ஆனால், மாண்பு மிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது பதிலளிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், குறுக்கிடாமல் இருக்கவேண்டும், அவைத்

1979 அக்டோபர் 30] [திரு. மு. கருணாநிதி]

தலைவர் அவர்கள் யோசனையையும், அவை முன்னவர் அவர்கள் சொன்னதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். எதிர்க் கட்சியின் சார்பாக நானும் அந்த உறுதியை அளிக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆகவே, இந்தத் தீர்மானத்தின் வாயி லாக ஆளும் பொறுப்பிலே இருப்பவர்கள் சிந்திக்க வேண்டும். தம்மையும் சிந்தித்துக் கொள்ள வேண்டும். தேவையிருப்பின் யாருக்கும் தெரியாமல் தம்மையே நிந்தித்துக் கொள்ளவும் வேண்டும். அதன்வாயிலாக தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். தவறுகள் இருப்பின் நிறைவோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் வாயிலாக, இந்த அவையின் நேரத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணமில்லை. அப்படிப் பேசுவது ஜனநாயகத்துக்கு ஏற்புடையது அல்ல. ஆளும் கட்சியிலே இருப்பவர்களை பற்றி அனாவசியமாக குறைகளைச் சொல்லவேண்டுமென்ற காழ்ப்புணர்ச்சியோ, நோக்கமோ எனக்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஆளும்கட்சியிலே இருப்ப வர்கள் அத்தனை உறுப்பினர்களும், அமைச்சர் அவையிலே இருப்பவர்களும் இருவரைத் தவிர மற்ற யார் மீதும் குறைகள் இல்லை. ஆகவே, எனக்கு இருக்கின்ற குறைகள் எல்லாம் இந்த ஆட்சியிலேஏற்படுகின்றதவறுகள் எல்லாம், தேக்கங்கள் எல்லாம், கோப்புகள் எல்லாம் நகராமல் இருப்பதற்கு சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை முதல் அமைச்சர் அவர்கள் தான், இந்த ஆட்சியினுடைய குறைகளுக்குக் காரணம் என்பது என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயம் ஆகும். அதைச் சொல்வது என்னுடைய கடமை, என்னுடைய உரிமை. அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன்.

பிற்பட்டோரைப் பற்றி இங்கே சொன்னார்கள். அண்மையில் வடார்க்காடு திருப்பத்தூரில் ஒரு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்னையன் அவர்களும், கைத்தறித் துணி அமைச்சர் மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்களும், நம்முடைய மாநில திட்டக் கமிஷனுடைய துணைத் தலைவர் கோவை செழியன் அவர்களும் கலந்துகொண்டிருக்கிறார் கள். அரசு அண்மையில் பிறப்பித்துள்ள ஆணையின் வாயிலாக பிற் பட்டோருக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப் பற்றி, பிற்பட்டோர் நலன் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அந்த மாநாட்டில் ஆய்வு செய்திருப்பதோடு, இந்த ஆணையினால் பிற்பட்டோருடைய நலன் முன்னேற்றம் பாதிக் கப்படும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அண்மையில் சென்னையில் ஒரு மாநாடு நடை பெற்றிருக்கிறது. அந்த மாநாட்டில் இந்தத் தமிழ்நாட்டி னுடைய பல தலைவர்கள் இந்த அவையில் இருக்கிற ஒரு சில

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 அக்டோபர் 30

தலைவர்கள் உட்பட கலந்து கொண்டு பிற்பட்டோர் நலன் இன்றைக்கு எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றி தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருப்பதோடு முறையான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அரசு அது பற்றி சிந்திக்க வேண்டும்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பது முக்கியமல்ல. வாழையடி வாழையாக நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றிய பெருந் தலைவர்கள் இந்த நாட்டில் ஒரு பெரும்பான்மையான சமுதாயத்தினருக்கு, பிரிவினருக்கு ஏற்பட்ட பாதகங்களுக்கு என்னென்ன காரணங்கள் என்பதையெல்லாம் ஆய்வு செய்த பிறகு 60, 70 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் தோன்றிய தமிழ்ச் சமுதாய இயக்கங்கள், பெருந்தலைவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தமிழ்ச் சமுதாயத்திற்கு இன்னும் பல காலத்திற்குத் தேவை என்ற அடிப்படையில்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் போராட்டம் நடத்தினார்கள்.

அதிலே தலைதூக்கி விளங்கியவர் இன்று நீங்கள் யாருக்காக நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றீர்களோ அந்த தந்தை பெரியார் அவர்கள்தான். நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதற்கு மகிழ்ச்சி. ஆனால் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா வாயிலாக தந்தை பெரியாரின் கொள்கைகள் ஆழமாக விவாதிக்கப்பட அந்த விழா பயன்பட்டிருக்குமானால் மெத்த மகிழ்ச்சியோடு வரவேற்றிருப்பேன். அதிலே கலந்து கொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் —அவர்கள் எப்போது வேண்டுமானாலும் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பொதுக் கூட்டங்களில் பேசும்போது கூறுகிறார். கூட்டங்களில் மக்கள் கூடுகிறார்கள், அதை யாரும் மறுக்கவில்லை. கூட்டங்களுக்குப் போக முடியாவிட்டால் பத்திரிகை நிருபர்களை அழைத்தால் பத்திரிகை நிருபர்கள் வருவார்கள், அவர்களிடம் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டு விழாக் கூட்டத்திலும் தந்தை பெரியாரைவிட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரைப் பற்றித்தான் அவர்கள் அதிகமாகப் பேசியதாகத் தெரிகிறது. கலைஞரைத் தாக்குவதற்கு சர்க்கார் பணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டார். பெரியாரின் ஆழமான கருத்துக்களை நாட்டு மக்களின் எண்ணங்களில் ஆழமாக பதியவைக்க அந்தக் கூட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்பதுதான் வருத்தம்.

பெரியார் அவர்களும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தியாகம் செய்த பெருந் தலைவர்களும் எந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்த

1979 அக்டோபர் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

நாட்டில் நிலைநாட்டப்பட வேண்டுமென்று அதை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார்களோ அதற்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஒரு ஆணையைப் பிறப்பித்திருப்பது மெத்த வருந்தத்தக்கது.

இதிலே ஒரு ரி-அசெஸ்மெண்ட் செய்ய வேண்டாமா? சட்டநாதன் குழுவில் சொல்லப்பட்டிருப்பது போல் ஒரு குழுவை நியமனம் செய்து அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் அரசு முடிவுகளைச் செய்திருக்குமானால் அதனுடைய உள்நோக்கத்தை யாரும் சந்தேகித்திருக்க மாட்டார்கள். அதற்கு மாறாக ஒரு ஆணையைப் பிறப்பித்து இந்த நாட்டில் இருக்கக்கூடிய பிற்பட்ட சமுதாய மக்களுக்கு ஒரு ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ற குற்றச்சாட்டை இந்த அவையில் எடுத்து வைக்க விரும்புகிறேன். அதற்கு மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் அவருடைய உள்ளம் என்ன சொல்லுகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. ஜெபமணி அவர்கள் சொன்னார்கள்.

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

என்று சொன்னார்கள். நான் அதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை நான் ஆதரிக்கிறேன். அவரவர்கள் தங்களுடைய உள்ளத்தைச் சந்தித்துக் கொள்ள வேண்டும். நான் என்னுடைய உள்ளத்தைச் சந்தித்துக் கொள்ள வேண்டும்.

[முற்பகல் 10—20]

நாம் ஒவ்வொருவரும் தம் தம்முடைய உள்ளங்களைச் சந்தித்துக் கொள்ள வேண்டும். அரசியல் என்பது ஒரு மாதிரியாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, யாரும் எப்படியும் பேசலாம். என்னை உள்ளிட்டுச் சொல்கிறேன். இங்கே இருக்கின்ற சீனியர்கள், ஆளுந் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எதிரிலே இருப்பவர்கள் பேசும் பொழுது குறிப்பாகத் தலைவர்கள், என்னைக்கூட நான் தலைவர் என்று சொல்லவில்லை, இந்தப்பக்கமாக இருந்தாலும் அந்தப்பக்கமாக இருந்தாலும் தலைவர்கள் பேசும் பொழுது எழுந்து பேசுவது, நையாண்டி செய்வது, கேலி செய்வது எல்லாம் நம்மை நாமே மதித்துக்கொள்கிறோம் என்பதற்கு இலக்கணம் வகுக்காது. இதுவும் ஒரு நீதி மன்றம் தான். மக்கள் மன்றத்திலே நாம் கருத்துக்களை எடுத்து வைக்கிறோம். கருத்துக்களைச் சொல்கிற

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 அக்டோபர் 30

போது, யாரும் விரோதிகள் என்ற அடிப்படையில் தவறான கருத்துக்களை பரிமாறிக் கொள்வது நமக்கு அழகானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இங்கே இருப்பவர்களுடைய மெஜாரிடியினரின் நிலைமை அரசாங்க ஆணை பிற்பட்ட சமுதாயத்திற்கு மிகுந்த கேட்டினை விளைவிக்கும் என்பதுதான். அதை எல்லோரும் உணர்வார்கள். எனக்குத் தெரியும். சிலர் இன்றைக்குச் சொல்லலாம், நாளைக்குச் சொல்லலாம், சிலர் இன்றைக்குச் சொல்லாமல் இருக்கலாம், நாளைக்குச் சொல்லலாம். சிலபேர்கள் சொல்ல நினைத்தாலும் வெளியே சொல்ல முடியாத நிலைமையிலே இருக்கலாம் என்ற நிலைமை தான் இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்து, அரிசனங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். ஒருகாலத்திலே கலைஞர் அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த சத்தியவாணிமுத்து அவர்கள் ராஜினாமா செய்யும் அளவிற்கு ஒரு விவகாரம் வளர்ந்தது. அது இன்றைய சீனியர்களுக்கு நன்றாகத்தெரியும். அவர்களுக்கு அன்றைக்கு ராஜினாமா செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அரிசனங்களுக்குப் போதிய அளவிற்கு அங்கோரமும் போதிய அளவிற்கு உதவியும் செய்யப்படுகிறது, அப்படிக் கிடைக்கின்ற உதவியில் தொய்வு ஏற்படுகிற வகையிலே அரசின் நடவடிக்கைகள் இருந்தன என்ற காரணத்தை திருமதி சத்தியவாணிமுத்து அப்போது சுட்டிக் காட்டினார். சத்தியவாணிமுத்து அவர்கள் அமைச்சராக இருக்கும் போது எவ்வளவு செலவழிக்கப்பட்டதோ அதிலே பாதி கூட அரிசனங்கள் நலனுக்காக இப்போது செலவழிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அந்த மெலிந்த நலிந்த பிரிவினர் உயர்வு பெற வேண்டும், சம அந்தஸ்து பெற்றாக வேண்டும் என்று அங்கீகாரம் அளிக்கப்படுகிற உணர்வு கூட இந்த ஆட்சிக்கு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கு இவ்வளவு செலவழித்த போதும் சத்தியவாணி முத்து ராஜினாமா செய்தார். ஆனால் இப்போது அரிசனத்துறை அமைச்சராக இருக்கிற திரு. செளந்தர பாண்டியன் அவர்கள் வாய்மூடி மௌனியாக இருக்கிறார்கள். என்ன காரணம்? ஒரு அரிசனப் பிரதிநிதி தன்னுடைய சமுதாயத்திற்காகக் கூட செயல் பட , அதை எடுத்துச் சொல்ல முடியாத நிலைமையிலேயே அமைச்சரவையிலே இருக்கிறார் என்று சொன்னால் அந்த அமைச்சரின் சூழ்நிலை என்ன?

முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஒருவர் மந்திரி சபையிலே இருக்கிறார். ஒரு அமைச்சர் முஸ்லிம்களுடைய பிரதிநிதியாக அமைச்சரவையில் முஸ்லீம்களுக்காகத்தான் இருக்கிறேன் என்று அவர் சொல்லிக் கொள்கிறாரோ இல்லையோ அந்த உணர்வு கூட இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதுதான் எனக்கு வேதனையைத் தருகிறது. மாண்புமிகு

1979 அக்டோபர் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

திரு. ராஜாமுகமது அவர்கள் பெரிய சீனியர், அறிவாளி, அனுபவஸ்தர், அவர் இல்லாவிட்டால் மந்திரிசபையே நடக்காது என்பதற்காகவா அமைச்சரவையிலே அவருக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்? எதற்காக இடம் கொடுத்தார்கள்? There must be a representation to the minority, the Muslims. அதனாலேதானே. அப்படியில்லையென்றால் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லுங்கள், கதை முடிந்துவிட்டது. எதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். இல்லைக்கு நாட்டிலே அவ்வளவு பெரிய பிரச்சினை இருக்கிறது. இன்றைக்கு அந்த சமுதாயம் எத்தனையோ சோதனையிலே வேதனையிலே இருந்து கொண்டிருக்கிறது. நேற்றுப் பேசிய திரு.சமரசம் அவர்கள் பாலக்காட்டிலே, பேரணாம்பட்டிலே, நடந்தது என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த நாட்டிலே இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 24 வகுப்புக் கலவரங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதன் காரணமாக சிறுபான்மையோர்களுக்கு இழப்பு, 17 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அமைச்சரவையிலே முஸ்லீம் பிரதிநிதி என்று சொல்லப்படுகிற திரு.ராஜாமுகமது ஏன் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பது தான் இன்றைக்குச் சமுதாயம் கேட்கக்கூடிய கேள்வியாகும்.

டாக்டர் சமரசம் அவர்கள் சொன்னார்கள், இது இந்து முஸ்லீம் கலவரம் அல்ல என்று. அது உண்மை. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்து முஸ்லீம் கலவரம் நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்படுவது இல்லை. ஏனெனில் இங்கே இருப்பவர்கள் அராபிய தேசத்திலிருந்து வந்தவர்கள் அல்ல, இங்கே பேசிக்கொண்டிருக்கின்ற லத்தீப் எங்கேயோ உள்ள அராபிய தேசத்திலிருந்து இங்கே இறக்குமதி செய்யப்பட்டவன் அல்ல இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன், பாண்டிய சேர, சோழ வம்சத்திலே வந்தவன், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவன் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன், தமிழ்த்தாயின் மகன், தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவன். மதம் மாறிவிட்டேன் என்ற காரணத்தைக் காட்டி என்னை யாராவது அன்னியன் என்று சொல்ல முடியுமா? என்னை அன்னியன் என்று சொல்லக்கூடியவர்கள்தான் அன்னியர்களாக இருக்க முடியும். ஏனென்றால் என்னுடைய சகோதரன் என்னை அன்னியன் என்று சொல்ல மாட்டான். நான் தமிழ் மண்ணில் பிறந்தவன், தமிழ்நாட்டின் முஸ்லீம், இந்திய நாட்டிலுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் முஸ்லீம் என்ற முறையில் செயல் படுகிறவன்.

மாண்புமிகு சமரசம் ஒரு உண்மையைச் சொன்னார்கள், அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அடுத்த இடத்தில் அவர்கள் சொன்னதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்றால்—அவர்களுக்கு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 அக்டோபர் 30

இருக்கின்ற பொறுப்பை நான் உணர்கிறேன். அவர்கள் கொஞ்சம் மாற்றிச் சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன? மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசும் பொழுது ஒரு கருத்தைச் சொன்னதற்கு அவர்கள் மறுத்துச் சொன்னார்கள். அவர்கள் மறுத்துச் சொல்வதற்கு உரிமை உண்டு, அதை நான் தடை செய்யவில்லை. ஆனால் உண்மை என்ன? யார் அதற்குப் பொறுப்பு? ஆளும்கட்சியைச் சேர்ந்த, மிகப்பெரிய பொறுப்பிலே இருக்கிற மக்கள் பிரதிநிதியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒருவர்தான் பொறுப்பு என்று அங்கே உள்ள மக்கள் அனைவரும் சொல்கிறார்கள். அவர் பாராளுமன்றத்திற்குப் போகிறார், போய் வந்தபிறகு கலவரம் ஏற்படுகிறது, காரணமே அவர்கள்தான் என்று யார் சொல்கிறார்கள் தெரியுமா ? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு ஒரு பெரிய இந்தப் பிரசுரத்தை வெளியிட்டு அவர்மீது குற்றம் சாட்டுகிறது. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களிடத்தில் கொடுக்கப்படுகிறது. இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

டாக்டர் கே. சமரசம் : பாயிண்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, நான் அந்த மாவட்ட அமைதிக் கமிட்டியின் உறுப்பினர். விசாரணையில் சாட்சியம் அளித்தவர்கள். ஆளுங்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ பொறுப்பு அல்ல என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, யார் மீதும் குற்றம் சொல்லவில்லை. யாரோ, எங்கோ கொடுத்த நோட்டீசை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் பேசுவது மிகமிக இழுக்கு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அவர்கள் வேகமாகப் பேசுகிறார்கள், பரவாயில்லை. நான் அவரைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் 9–55–க்கு ஆரம்பித்தீர்கள். கிட்டத்தட்ட அரை மணி நேரம் எடுத்துக் கொண்டீர்கள். இன்னும் ஐந்து நிமிஷம் கொடுக்கிறேன், அதற்குள் பேசிவிடுங்கள். இன்னும் மற்றவர்கள் பேசுவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : அவர்களெல்லாம் 45 நிமிஷ நேரம் பேசியிருக்கிறார்கள்.

1979 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் சில உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அவர்களுக்குப் பத்து, பத்து நிமிஷம் கொடுக்க வேண்டும். எனவே, நீங்கள் 10-30-க்குள் முடித்து விடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இதிலேயே நேரம் ஆகிறது. நான் இந்தச் சட்டமன்ற உறுப்பினரைப்பற்றிச் சொல்லவில்லை. சட்ட மன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரைப்பற்றித்தான் சொல்கிறேனே தவிர, அதைக்கூட வெளிப்படையாக நான் சொல்ல விரும்பவில்லை என்றால் என்னுடைய துர்க்கதியைப் பார்த்தீர்களா ? நாங்கள் அடிபட்டவர்கள், அடித்தவனைப் பற்றிச் சொல்ல முடியவில்லை, பார்த்தீர்களா ? நான் இதைப் பற்றிச் சொல்லும்பொழுது அவர்களுக்கு மிகப்பெரிய கோபம் வருகிறது. என்ன செய்வது? அவர்களோடு வாழ வேண்டியிருக்கிறது. அதற்காக இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதை நான் நம்முடைய மாண்புமிகு பேரவைத்தலைவர்களுக்கு—முன்னவர் அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன். அவர்களே இதைப் பார்த்துக் கொள்ளட்டும். அவர்களுடைய நோட்டீஸ் ஒன்று இருக்கிறது. யாருடைய நோட்டீஸ்? சம்பந்தப்பட்டவர்களுடைய நோட்டீஸ், அதற்குப் பதில் நோட்டீஸ் இருக்கிறது, அதையும் கொடுக்கிறேன். நான் இந்த விவகாரத்தை நீட்டிக்க விரும்பவில்லை. குற்றச்சாட்டு இருக்கிறது, மாண்புமிகு முதல் அமைச்சரவர்களிடம் போலீஸ் துறை இருக்கிறது, அவர்கள் கலவரத்தைத் தூண்டிவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய கெடுமதியாளன் அல்ல நான். கலவரம் நடைபெற்றது குறித்து அவர் மகிழ்ச்சி அடைகிறார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் பொறுப்புள்ள முதலமைச்சரவர்கள் பெரும் கலவரம் நடைபெற்ற அந்த இடத்தைச் சென்று பார்க்கக்கூடாதா ? அங்கே இருக்கும் மக்களுக்கு ஆறுதல் சொல்லக்கூடாதா ? வெள்ளம், புயல், தீ விபத்து ஏற்பட்டால் அந்த இடங்களைச் சென்று பார்க்கிறீர்களே, அதைப்பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம், ஆனால் பெரும் கலவரம் பேராணம்பட்டில் நடந்திருக்கிறது, சேலையூரில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. பாலக்கோட்டிலே கலவரம் ஏற்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் முதலமைச்சரவர்கள் சென்று பார்க்கவில்லையே என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஏன் அவர்கள் அங்கெல்லாம் சென்று பார்க்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 35 நிமிடங்கள் ஆகிவிட்டது.

[1979 அக்டோபர் 30

திரு. எம். ஏ. லத்தீப் : அதுதான் குற்றச்சாட்டே தவிர வேறல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, இந்த ஆட்சி ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை வளர்த்து வருகிறது, ஆர். எஸ்.எஸ். இயக்கத்திற்கு மானசீகமான ஆதரவைக் கொடுத்து வருகிறது, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் ஆசிரியராக இருக்கக் கூடிய பாலா சாஹேப் தேவரஸ் அவர்கள் உணர்வு பெறும் அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் அந்தச் சமூக விரோத இயக்கம், வகுப்புத் துவேஷத்தைத் தூண்டும் இயக்கத்தை இந்த நாட்டிலே வளர விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு முழுப்பொறுப் பையும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல ஆசைப் படுகிறேன். (மணியடிக்கப்பட்டது). இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுகிறேன், இன்னும் 3 பாய்ண்ட்டுகள் தான்.

[முற்பகல் 10–30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 35 நிமிடம் கொடுத்து விட்டேன். உட்காருங்கள். அடுத்து திரு மார்க்கபந்து.

திரு. எம். ஏ. லத்தீப் : 3 பாயின்ட்டுகள் தான், 3 நிமிடத்தில் கன்க்லுஷனைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 30 நிமிடம் வேண்டும் என்று சொன்னீர்கள், 35 நிமிடம் கொடுத்து விட் டேன். அதை நீங்கள் பாராட்ட வேண்டும். மற்ற கட்சிக் காரர்கள் ஒத்துழைப்பதைப் போல் நீங்கள் ஒத்துழைப்பதே இல்லை. அடுத்து திரு. மார்க்கபந்து.

திரு. எம். ஏ. லத்தீப் : 3 நிமிடங்கள் போதும், கனக்குலூட் செய்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். தாங்கள் எப்போதுமே நான் சொல்வது போல முடிப்பதில்லை. உங்களுக்கு 35 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். அடுத்து, திரு. மார்க்கபந்து.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இன்று ஆளும்கட்சிக்கு எதிராகக் கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை பலர் வழிமொழிந்தும் சிலர் ஆட்சே பித்தும் இங்கே பேசியிருக்கிறார்கள்.

1979 அக்டோபர் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

(மாண்புமிகு பேரவைத துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, கொடுக்கப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தைப் பார்க்கிற பொழுது நடைமுறையிலே ஏற்பட்டிருக்கிற சில நிர்வாகங்களைப் பற்றியும் அன்றாடம் ஏற்படுகின்ற நிலவரங்களைப் பற்றியும் இங்கே தந்திருக்கிறார்கள். குறிப்பாக, ஒரு கண்டனத் தீர்மானம் என்று வருகின்றபொழுது அது அரசாங்கத்தினுடைய கொள்கைகளைக் கண்டிக்கிற வகையிலேயிருந்து, அந்தக் கொள்கையாலே ஒரு அரசாங்கம் தோற்றுவிடுகின்ற ஒரு நிலையை உருவாக்கி, அதனால் அரசாங்கம் கவிழ்கின்ற ஒரு நிலையை உருவாக்குவதுதான். இது போன்ற நிலைமைகளின், இதுபோன்ற கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வருவதுதான் சரியான நிலைமை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இங்கே குறிப்பிட்டப் பட்டிருக்கிற தீர்மானங்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக்கூடிய தீர்மானங்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், கண்டனத்திற்குரிய தீர்மானங்களா என்று பார்க்கின்ற நேரத்தில் அதை அவ்வளவு சரியானதாக, பொருத்தமானதாக நான் கருதவில்லை. ஆகையினாலே, இப்பொழுது இருக்கிற தீர்மானங்களில், பல்வேறு பிரச்னைகளைப் பற்றி, குறிப்பாக பின்தங்கியோருடைய பிரச்னையைப் பற்றி அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற ஒரு உத்தரவை இன்று கண்டித்திருக்கிறார்கள். அந்த உத்தரவைக் கண்டித்து முதன் முதலாக உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக நான் அறிக்கை விட்டேன். அதிலே இருக்கிற சில உண்மைகளை, நாம் எதிர்க்கட்சி என்றோ, ஆளுங்கட்சி என்றோ, ஒரு தரப்பாக நாம் இருக்கின்றோம் எனபதை மறந்துவிட்டு எந்த ஒரு உயர் நோக்கத்திற்காக பின்தங்கிய சமுதாய மக்களுக்குப் பாதுகாப்புகள் தரப்பட வேண்டுமென்பதற்காகத் தந்தை பெரியார் அவர்கள் முதற்கொண்டு, பல அரசியல் தலைவர்களும் இதைக் கொண்டு வந்தார்களோ, அந்த நோக்கம் நிறைவேற முடியாமல் இருக்கிறபொழுது, அதிலே மறு பரிசீலனை செய்யவேண்டுமென்ற கருத்திலே ஒத்த கருத்துடையவன் நான். அதை ஒட்டித்தான் நாங்கள் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக ஒரு கோரிக்கையை தமிழக அரசிற்கு விட்டோம்.

இது பின் தங்கிய சமுதாய மக்களுடைய முக்கியமான பிரச்சனையாக இருக்கிற காரணத்தால், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் போராடிப் பெற்றிருக்கிற உரிமையாக இருக்கிற காரணத்தாலே அதைப் பல்வேறு பின் தங்கிய சமுதாயத்தினுடைய தலைவர்களை அழைத்து அவர்களுடைய ஒட்டுமொத்தமான கருத்துக்களைக் கேட்டு அதனுடைய அடிப்படையிலே அதை சரிசெய்ய வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் வெளியிட்டேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 அக்டோபர் 30

பின்தங்கியவர்களுக்குரிய உரிமையைப் பெறுவதற்கு அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற வருமான வரம்பை ரூ. 9000 லிருந்து உயர்த்தி ரூ. 15,000–மாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை விடுத்தோம்.

பின்தங்கிய சமுதாயத்திலேயே மிகவும் பின் தங்கியவர்கள் என்று அரசாங்கத்தாலே அறிவிக்கப்பட்ட சமுதாயங்கள் 39 இருக்கின்றன. பின்தங்கிய சமுதாயத்தினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 31 விழுக்காடு இடங்களில் பெரும்பகுதியை, பின் தங்கிய வகுப்பினரிலேயே முன்னேறிய ஒருசில சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அனுபவிக்கிறார்கள். இந்த மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை. எனவே இந்த மிகப்பின்தங்கிய வகுப்பினருக்கு அரசாங்கம் 15% தனியாக ஒதுக்கித் தரவேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையையும் அரசாங்கத்திற்குத் தெரிவித்தோம்.

இதனுடைய அடிப்படையிலேதான் இராஜாஜீ ஹாலில் நடைபெற்ற பின்தங்கியோர் சமுதாயக் கூட்டத்திற்கு வந்திருந்த பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் பேசுகிறபோது மிகப்பின்தங்கிய சமுதாயத்தினருக்காக தனியான சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று ஒத்துக்கொண்டார்கள். இரண்டு நாட்களுக்கு முன் சட்ட சபையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களுக்காக தனி ஒதுக்கீடு செய்வது குறித்துப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது இந்த அரசு என்று சொன்னார். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் முக்கியமான பிரச்சனை இதுதான். அந்த மக்களுக்கு உண்மையான பிரதிநிதித்துவமும், உண்மையான உரிமையும் கிடைக்கச் செய்வதில் அரசாங்கம் முக்கியமான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று என்னுடைய கருத்தை இணைத்துக் கொள்கிறேன்.

வருமான வரம்பை ரூ. 9,000 என்று நிர்ணயித்து முதல் ஜெனரேஷன் அந்த வாய்ப்பை இழந்துவிட்டால் அந்த சமுதாயத்திற்கே முற்றுப் புள்ளி வைத்ததாக ஆகிவிடும். எனவே வருமான வரம்பை ரூ. 15,000 ஆக உயர்த்த வேண்டும் அந்தக் கருத்தையும் கூட மற்ற எல்லா சமுதாயத் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து அரசு முடிவுசெய்ய வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 அக்டோபர் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

அரசாங்கம் இந்தத் திட்டத்தை உருவாக்கியபோது இந்தச் சட்டத்தின் பலன் உண்மையிலேயே யார் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்கு அதன் பலன் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் உருவாக்கி யிருக்கிறார்கள்.

ஒன்றைச் சொன்னால் மற்றவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அரசியல் நிர்ணய சட்டம் 42 ஆவது அமெண்ட் மெனடில்கூட பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வில்லை. இன்றைக்குப் பத்திரிக்கையிலே வெளிவந்திருக்கிறது. மத்தியிலே இருக்கிற பிரதமர் அவர்கள் பின் தங்கிய சமுதாயத் தைச் சேர்ந்த மக்களுக்கு 25% ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த வகையிலே நாங்கள் கேட்டுக் கொள்வது மத்திய அரசாங்கத்திலே யார் பிரதமராக வரவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவர்களிடம் இருந்து இத்தகைய ஒரு உறுதிமொழியை நீங்கள் பெறமுடி யுமா ? காரணம் மத்தியில் பின்தங்கிய வகுப்பினர் யாரும் வருவது கிடையாது. எமர்ஜென்ஸி சூலில் இருந்தபோதுதான் பின் தங்கிய சமுதாயத்திற்கு வயது வரம்பை குறைத்து இருக்கி றார்கள். நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த நிலையிலே இருப்பவர்கள் மீண்டும் பிரதமர் பொறுப்பிலே வரவேண்டும் என்று பேசுகிறார்கள். வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டி ருக்கிறார்கள். ஆசைப்படுகிறார்கள். அவர்கள் வரவேண் டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் திரு. சரண் சிங் அவர்கள் அறிவித்த அந்த 25 சதவீதம் ஒதுக்கீடு தரு கிறோம் என்று இவர்கள் யார் பிரதமராக வரவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களிடம் இருந்து பெற்றுத் தர முடியுமா?

அடுத்தபடியாக போலீஸாருடைய போராட்டம் இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய துறை யிலே இருப்பவர்களே போராட்டம் என்று தெருவிலே வந்து விட்டார்கள்.

(முற்பகல் 10-40.)

எசன்சியல் சர்வீஸ் என்று சொல்லக்கூடிய வகையில் உள்ள ராணுவம், போலீஸ், மின்சாரம் போன்ற துறைகளில் எல்லாம் சங்கம் அமைக்கும் உரிமை வேண்டாம் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். எந்தக் காரணத்திற்காக சங்கம் அமைக் கும் உரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, அந்த உரிமைகள் இன்று வேறு விதமாக பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. நாட் டைக் காக்கவேண்டியவர்கள், மக்களின் உயிர் உடைமை களைப் பாதுகாக்கவேண்டியவர்கள் போராட்டத்தில் ஈடு பட்டதால், எதிர்க்கட்சி உறுப்பினர் கிட்டப்பா ஆனாலும்,

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 அக்டோபர் 30

சரி, ஆளும் கட்சி உறுப்பினர் ராமசாமி ஆனாலும் சரி, அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு இல்லை என்கிற நிலைமைக்கு வந்து விட்டது என்று சொன்னால், இந்த நாட்டைப் பாதுகாப்பது யார்? இப்படிப்பட்ட சக்திகளுக்கு ஊக்கம் தரலாமா?

கட்சி மாச்சர்யங்கள் இன்றி, அரசியலுக்கு அப்பாற்பட்டு, இந்த நாட்டை யார் ஆட்சி செய்தாலும்-எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு ஆளும் கட்சியாக வரலாம் என்பதை மறந்து விடக்கூடாது — எந்த சூழ்நிலை வந்தாலும், அவர்கள் நல்ல முறையில் பணியாற்றி மக்களைக் காப்பாற்ற வேண்டும். அந்த நிலைமைக்கு இல்லாமல், ஒரு சக்தியை வளரவிட்டுவிட்டால், பின்னாலே அதை அழிக்க முடியாது. அந்த நிலைமைக்கு அதனை வளரவிடக் கூடாது. அந்த முறையில் இன்று போலீஸ் துறைச் சார்ந்தவர்கள் சங்கம் அமைக்கும் உரிமை கொடுக்கப்பட்டதன் காரணமாக சில நாட்களில் நாட்டில் எழுந்து விட்ட நிகழ்ச்சிகளை நாம் கண்டுவிட்டோம். இந்த நிலைமை வளர்ந்து விட்டால், அதைப் பின்னர் கட்டுப்படுத்துகிறவர்கள் யார், கட்டுப்படுத்துகிற சக்தியை இழந்து விட்டு இருக்கும் நிலைமை நாட்டிற்கு மிகவும் ஆபத்தானது. ஆகவே, போலீஸ் துறையினருக்கு சங்கம் அமைக்கும் உரிமை மறுக்கப்பட வேண்டும் என்கிற என்னுடைய கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இப்போது எல்லாம் போராட்டங்கள் என்கிற முறையில் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற ஒவ்வொரு போராட்டத்தின் பின்னணியையும் பார்க்கிற நேரத்தில், ஒவ்வொரு போராட்டத்திலும் எங்களுக்கு சம்பள உயர்வு வேண்டும், எங்களுக்குப் பஞ்சப்படி உயர்வு வேண்டும் என்கிற கோரிக்கைகள்தான் பிரதானமாக இருக்கின்றன. தமிழகத்தின் ஜனத்தொகை 4½ கோடி மக்கள். அதில் அரசாங்க ஊழியர்கள் 7 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த 7 இலட்சம் பேர் வாங்கும் சம்பளம் போதவில்லை. மேலும் எங்களுக்கு சம்பள உயர்வு ரூ. 10, ரூ. 20 வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்படி எடுத்ததற்கெல்லாம் போராட்டங்கள். அது அரசாங்க ஊழியர்களாக இருந்தாலும் சரி, எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அடுத்தடுத்து போராட்டங்களை நடத்தி, கோரிக்கைகளை வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். இதற்கு ஏதேனும் ஒரு முடிவு கட்டியாக வேண்டாமா? இன்று 500 ரூ. 600 ரூ. சம்பளம் வாங்கக் கூடியவர்கள் எங்களுக்கு மேலும் ரூ. 10, 15 வேண்டும் என்று கேட்கிறார்கள்.

அந்தப் பணத்தை அவர்கள் மேற்கொண்டு சினிமாவிற்குப் போவதற்குப் படன்படுத்தலாம். சோப்பு சீப்பு வாங்க பயன்படுத்தலாம். அவர்களுக்கு மேலும் தேவைப்படுகிற லக்

1979 அக்டோபர் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

சரி பொருள்களை வாங்க உபயோகிக்கலாம். மேலும் அவர்களுடைய நிலைமைகளை உயர்த்திக்கொள்ள பயன் படுத்திக்கொள்ளலாம். எனவே பசித்த வயிற்றுக்குச் சோறு போடுவதற்கு அந்தச் சம்பள உயர்வு பயன்படாது. ஆனால் கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கு ஒரு வேளை சாப்பாடு கூட இல்லாமல் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டாமா ? போராட்டம் நடத்துகிற அரசாங்க ஊழியர்கள் எந்த நேரத்திலும் போராட்டம் என்பதை விட்டு விட்டு, இவர்களைப் பற்றியும் சிந்திக்கிற அளவிற்கு அவர் கள் தங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, என். ஜி. ஓ.க்கள் போராட்டம் பற்றி நான் குறிப் பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கோபித்துக்கொள் ளக் கூடாது. காரணம், என். ஜி. ஓ.க்கள் போராட்டம் எந்த நேரத்தில் வெடிக்குமோ என்று நாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு அரசாங்கம் 10 ரூ. அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறது. நாளைக்கு இது போதாது, மேலும் 15 ரூ. வேண்டும் என்று அவர்கள் நடத்தக்கூடும். இப்படி ஒரு ஆர்கனைசு செக்டார் எதற்கெடுத்தாலும் போராட்டம் நடத்துகிறோம் என்று சொன்னால், அனைத்துப் பிரிவினரும் அரசாங்கத்திற்கு விரோதமாக இப்படிச் செய்யக் கூடாது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும், எதிர்க்கட்சி களும் அதற்கு ஆதரவாக இல்லாமல், ஆர்கனைசுடி செக்டார் இப்படி போராட்டங்கள் நடத்தினால், சாதாரண மக்கள் நிலை என்னவாகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். ஆகவே, நான் கேட்டுக்கொள்கிறேன், சாதாரண மக்களின் நலன் பாது காக்கப்பட வேண்டும் என்பதற்காக அனைத்துப் பிரிவினரும் ஒருங்கிணைய வேண்டும். அதை விடுத்து எல்லா விதத்திலும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் போராட்டங்கள் நடத்துங்கள் என்று எல்லா சங்கப் போராட்டங்களையும் ஆதரித்துக்கொண்டு போனால், அது முடியாது. இந்த ஆண்டு இந்தப் போராட் டத்தோடு நிறுத்துங்கள். அடுத்த ஆண்டு மற்ற கோரிக்கை களுக்காக போராட்டங்கள் நடத்தலாம் என்று ஒரு வரைமுறை வைத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் ஊக்கம் அளிக்கிற விதத்தில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொள்வோம். தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளே யாரும் மறுப்பதற்குத் தயாராக இல்லை. உழைக்கின்ற தொழிலாளர்

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 அக்டோபர் 30

களுக்கு உரிமைகள் வேண்டும். உழைப்பவனுக்கு ஏற்ற ஊதியம் கிடைத்தாக வேண்டும். அதை மறுக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் வளர்ந்து வருகின்ற வளர்ச்சியை பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்ற வகையிலே (Subversive activities) ஈடுபட்டு தடுக்கின்ற முறை சரியல்ல.

உழைக்கின்றவர்களுக்கு உரிமை வேண்டும். ஆனால் அதே நேரத்தில் இல்லிகல் ஸ்டிரைக் செய்வது கண்டிக்கத்தக்கது. ஸ்டிரைக் செய்ய வேண்டுமானால் சட்டப்படி 15 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதன்படி முறையாக ஒரு ஸ்டிரைக்கை நடத்தினால் எல்லோருக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது; நாட்டின் பொருளாதாரத்திற்கும் நல்லது; அனைவருக்கும் நல்லது. அதைப் பொருட்படுத்தாமல், எங்களுக்கு ஒரு சக்தி இருக்கிறது, எங்களுக்கு ஒரு படை இருக்கிறது, அதை வைத்து ஸ்டிரைக் ஆரம்பிக்கிறோம் என்று வரும்போது அதற்கு நாம் ஆதரவு தருகிறோம் என்றால், அது இந்த நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்கிவிடும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக இன்றைக்கு ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்று ஆசிரியர்கள்தான் அன்றாடம் மறியலில் ஈடுபட்டு, அவர்கள் கைதுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தரப்பிலே இருக்கிற ஆசிரியர்கள் கூட்டணி அரசின் அறிவிப்பை வரவேற்கிறது: மற்றொரு ஆசிரியர் கூட்டணி அதை மறுக்கிறது. இருக்கின்ற சிக்கல் என்னவென்றால், இந்த அரசாங்கம் கிராமப்புறத்தில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் நகர்ப்புறத்தில் இருக்கின்ற ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல வீட்டுவாடகைப் படியை அறிவித்திருக்கிறது. அதன் பிரகாரம் எல்லோருக்கும் செய்தாக வேண்டுமென்ற ஒரு பிடிவாத எண்ணத்தோடு போராட்டம் நடத்துகிறார்கள் ஒரு பகுதியினர்; போராட்டம் தேவையில்லை என்று சொல்கிறார்கள் இன்னொரு பிரிவினர். இதற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அரசியல் காரணமாக, நாங்கள் இதை ஆதரிக்கவில்லை என்று சொல்லுகின்ற நிலை நாட்டுக்கு ஒத்து வராது. ஆகையால் எந்தத் தரப்பினர் போராட்டத்தை நடத்தினாலும் அதில் இருக்கிற நியாயத்தை உணர்ந்து அதன்படி நடந்துகொள்வது தான் நல்லது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் சமுதாயத்திற்கு ஒருசில வார்த்தைகளை பேசவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறேன். சென்றமுறை இந்த

1979 அக்டோபர் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

சட்டசபையிலே மாண்புமிகு ஆறுமுகம் அவர்களும் நானும் ஒரு சில கருத்துக்களை எடுத்து வைத்தோம். வன்னியர் சமுதாயத்திற்கு உயர்நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லை; அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டோம். ஏறத்தாழ 115 ஆண்டு காலமாகிவிட்டது தமிழ்நாட்டில் உயர் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டு, பல்வேறு சமுதாயத்தினருக்கு அங்கே பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நாங்கள் பல்லாண்டு காலமாக ஒரு கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம்; போராட்டம் நடத்தினோம். இந்த சமுதாய மக்களுக்கு ஏதாவது செய்யுங்கள்; உயர்நீதி மன்றத்தில் பிரதிநிதித்துவம் கொடுங்கள் என்று சொன்னோம். அதற்கிணங்க, இந்த அரசு இங்கிருந்து ஒருவரை ரெக்கமெண்ட் செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. அங்கே யாருடைய தலையீட்டாலோ அவருடைய பெயர் நீக்கப்பட்டு, வேறு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒருமுறை இந்த அரசாங்கம் ரெக்கமெண்ட் செய்ததோடு நின்றுவிடாமல் மேலும் ரெக்கமெண்ட் செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்; ரெக்கமெண்ட் செய்ததை இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் நீதிபதியாக வருவதற்கு தொடர்ந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்கு பிரச்சனை. மதுவிலக்குப் பிரச்சனையை எடுத்துக்கொள்ளும்போது நாட்டிலே மக்கள் அழிந்துவிடக் கூடாது; அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்று சட்டம் போடுகிறோம். ஆனால் அந்தச் சட்டத்தை மீறுகின்றவர்கள் யார் என்று பார்த்தால் அந்தத் துறையைச் சேர்ந்தவர்களே சட்டத்தை மீறுகின்றார்கள். அதன் காரணமாக இன்றைக்கு ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லும்போது, அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல், அவர்கள் மீது பொய் வழக்குகளைப் போடுகிறார்கள். இந்தக் குறைபாட்டை போக்குவதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு லேபரட்டரி ஆரம்பிக்கப்பட வேண்டும்; அந்த வழக்குகள் எல்லாம் சீக்கிரமாக பைசல் செய்யப்பட வேண்டும்.

[முற்பகல் 10—50]

பொய் வழக்குகள் போட்டார்கள் என்று சொன்னால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எங்களது பரிந்துரைகளை எல்லாம் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டாக வேண்டும். காரணம், இதன்மூலம் சாதாரண மக்கள் பழி வாங்கப்படுகிறார்கள்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 அக்டோபர் 30

அடுத்தபடியாக, கூட்டுறவு லோன்கள் வசூல் செய்வது பற்றி. லோன் வசூலில் கெடுபிடிகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இன்று இரண்டாயிரம் ரூபாய் அல்லது பத்தாயிரம் ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று சொன்னால் அந்த விவசாயிகள் குடும்பத்தில் நுழைந்து அங்கிருக்கிற உண்ணுகிற சாமான்களை எல்லாம், விதிவிலக்கு செய்யப்பட்டுள்ள பொருள்களைக் கூட ஜப்தி செய்து அவமதிப்புக்கு உள்ளாக்கப்படுகிற நிலைமையில் கெடுபிடிகள் அதிகமாக இருக்கின்றன. நான் தெரிந்து கொண்ட வகையில், கேட்கிற வகையில், ஏராளமான கடன்கள் வசூலிக்க வேண்டிய நிலைமை இருக்கிறபோது அவைகளை எல்லாம், விவசாயிகள் சங்கம் என்ற பெயரில் சங்கங்களை வைத்துக்கொண்டிருக்கிற இடங்களில் ஜப்தி நடைபெறுவதில்லை. ஆனால் அப்படிப்பட்ட சங்கங்கள் இல்லாத இடங்களில் ஜப்திகள் நடைபெறுகின்றன. அதனால் அங்குள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அரசாங்கம் இதில் அக்கறை எடுத்துக்கொண்டு எந்தெந்த வசூல்கள் செய்யப்படவேண்டுமோ அவற்றை முறையாக எடுத்துக்கொள்ள வேண்டும். மக்களை அவமானப்படுத்துவது என்ற நிலையை விட்டுவிடவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நானும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் தான். விவசாயிகளுக்கு இருக்கிற பிரச்சினைகளை, சாதாரண விவசாயிகளுக்கு இருக்கிற பிரச்னையை நிச்சயமாக தீர்த்தாக வேண்டும். அதே நேரத்தில் இரண்டு மூன்று ஆண்டுகளாக மின்சாரக் கட்டணம் கட்டாதவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது பம்ப் செட்களின் ப்யூஸ் எடுக்கப்படவில்லை. ஆனால் மாதாமாதம் மின்சாரக் கட்டணம் கட்டுகிறவர்களின் பம்ப் செட்களின் சர்வீஸ் கனெக்ஷன்ஸ் எடுக்கப்படுகின்றன. இப்படி ஆர்கனைஸ்ட் போர்ஸ் என்று சொல்லப்படுகிற வகையில் விவசாயக் சங்கங்கள் என்ற பெயரால் சங்கங்கள் வைத்து நடத்துகிறவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமை இருக்கிறது. பெரிய விவசாயிகள் தாங்கள் வாங்கியுள்ள லோன்களை, ஏராளமான கடன்களை செலுத்தாதமுறையில் தங்களுக்கு ஒரு சக்தி இருக்கிறது என்ற முறையில் அதை தடுத்து நிறுத்துகிற முறையில் ஈடுபட்டு இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன், இதற்கு ஏதாவது ஒரு முடிவு கண்டாக வேண்டும். இப்பிரச்னைகளுக்கு ஒரு முடிவு கண்டால்தான் மேற்கொண்டு நிர்வாக இயந்திரம் சிறப்பாக இயங்க முடியும். எல்லாத் துறைகளிலும் நிர்வாக இயந்திரம் முடக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். குறிப்பாக சட்டசபை உறுப்பினர்கள் என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வட ஆர்க்காடு மாவட்டத்தில் டி.டி.ஸி. கூட்டத்தில் நான் சொன்னேன். மக்களிட மிருந்து மனுக்கள் வாங்கி வருகிறோம், அதை அதிகாரிகளிடம் தருகிறோம். அதிகாரிகள் அவற்றின்

1979 அக்டோபர் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்பதைப் பற்றி எங்களுக்கு திருப்பி பதில்கள் வருவதில்லை. அதன் விளைவாக நாங்கள் மறுபடியும் மக்களைச் சந்திக்கிறபோது சொல்கிறார்கள், இரண்டாவது அல்லது மூன்றாம் முறையாகச் செல்கிறபோது சொல்கிறார்கள், முதலில் கொடுத்த மனுக்களின் நிலமை என்னவாயிற்று, அவற்றிற்கு இதுவரையில் பதில் இல்லை, அப்படியிருக்க பின் நீ எதற்காக வருகிறாய் என்று கேட்கிறார்கள் என்பதையும் சொன்னேன். சட்டசபை உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், பொது மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தருகிற மனுக்கள் மீது, நாங்கள் அவர்கள் பிரச்னைகளை அணுகி அவற்றிற்கு தீர்வு காணவேண்டுமென்று கேட்கும் போது அவற்றிற்கு தீர்வு காணவில்லை என்று சொன்னால் நான் சட்டசபை உறுப்பினராக இருந்தபோதிலும் என்னுடைய தொகுதி மககள் அனைவரையும் அழைத்துக்கொண்டு அங்குள்ள கலக்டர் அபீஸ் முன்னால் மறியல் செய்யவேண்டிய நிலைக்கு எங்களை ஆளாக்கிவிடாதீர்கள் என்று வேண்டுகோளை விடுத்தோம். இதை எங்கள் அடி மனத்திலிருந்து வருகிற வேதனை என்று கருதிக்கொள்ள வேண்டும். கொடுக்கிற மனுக்களை பரிசீலனை செய்தாக வேண்டும். அவை என்னவாயிற்று என்பதைப்பற்றி அதிகாரிகளும் அரசும் தகுந்த கவனம் செலுத்தவேண்டும். கண்டனம் தெரிவிக்கிறபோது அதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் அவற்றை அணுகவேண்டும். இப்படி பல்வேறு பிரச்னைகளைப் பார்க்கிறபோது அரசாங்கத்தினிடம் சில காரியங்களைச் சொல்கிறோம் என்று சொன்னால் அதற்குரிய பரிகாரங்களை நாம் காண வேண்டும் என்ற முறையில்தான் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால் அது வேறு, இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தக் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்படுமானால் அது சரியான காரணமாக இருக்க முடியாது. நிர்வாக இயந்திரம் சரியான முறையில் நடக்கமுடியாத அளவிற்கு, ஆட்சியாளர்கள் தங்கள் பணிகளை ஒழுங்காக செய்யமுடியாத அளவிற்கு எதிர்க்கட்சித் தரப்பில் இருக்கிறவர்கள்—நான் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை— தூண்டுகோலாக இருக்கிறார்கள் என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. தங்கள் சக்தியை இந்த நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுவதில் செலவிட வேண்டும். அப்படியல்லாது எல்லாவிதமான சக்திகளையும் தூண்டிவிட்டு அரசுக்கு எதிராக, அரசாங்க இயந்திரத்தை நடக்க விடாமல் செய்வது என்பது எதிர்க்கட்சிக்கு அழகல்லயென்று சொல்லி இந்த நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதற்காக நாம் பணியாற்ற வேண்டும் என்ற, என் கருத்தைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

[1979 அக்டோபர் 30

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கண்டனத் தீர்மானம் அவசியம்தானா என்று ஆளுங்கட்சிக்காரர்கள் கேட்டார்கள். கண்டனத் தீர்மானங்கள் ஜனநாயகத்தில் மிகவும் முக்கியமானது. காரணம், மாடு ஒழுங்கான பாதையில் செல்ல வேண்டும், அதற்கு மூக்கணாங்கயிறு வேண்டும். சண்டிமாடுபோல் இருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒழுங்கான பாதையில் செல்வதற்கு கண்டனத் தீர்மானம் என்கின்ற மூக்கணாங்கயிறு அவசியம். அது மட்டுமல்ல, முதலமைச்சர் அவர்களே, இதே மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பதில் சொல்லும் போது, நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவைகள் எல்லாம் அவசியமானவைதான், ஆளும் கட்சி ஒழுங்காக நடைபெறுவதற்கு இது அவசியம்தான், ஆகவே இதை வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். முதல்வர் அவர்களே இப்படி ஒப்புக்கொண்ட பிறகு, ஆளும் கட்சிக்காரர்கள், இப்போது கண்டன தீர்மானத்திற்கு என்ன அவசியம் என்ற கேள்வியை கேட்பது அர்த்தமற்றது.

இரண்டாவது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டு காலம் உருண்டோடி விட்டது. இந்த அரசுக்கு நிலையான கொள்கை இருக்கிறதா என்று எங்கள் கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் கேட்டார்கள். அதன் அடிப்படையில் சில கேள்விகளை. உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். உதாரணமாக மதுவிலக்குக் கொள்கையை எடுத்துக் கொண்டால் நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு விழாவில், ம. பொ. சி. அவர்களுடைய புத்தக வெளியீட்டு விழாவில், புத்தகத்தை வெளியிடுகின்ற நேரத்தில் சொல்லுகிறார்.... ''ம. பொ. சி. எழுதிய 'மகாத்மாவும் மதுவிலக்கும்' என்ற புத்தகத்தில் ம. பொ. சி. யின் தகப்பனார் குடித்துவிட்டு அவரது டனைவியை அடிக்கும் பகுதியை முதல்வர் புரட்சித் தலைவர் படித்தபோது உணர்ச்சி மேலீட்டால் விம்மி விம்மிக் கண்ணீர் விட்டு பேச முடியாமல் தவித்தார்.''

என்று இவர்களது அதிகாரபூர்வமான 'அண்ணா' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இன்றைக்கு மதுவிலக்குக் கொள்கையில் சர்க்கார் என்ன கொள்கையை கொண்டிருக்கிறது? கள்ளச் சாராயத்தை கண்டுபிடிப்பதற்கு நாய்ப்படையை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். இன்னும் நாய்ப்படை அமைக்கப்பட்டதாக தெரியவில்லை. நாய்ப்படை இல்லாவிட்டாலும் பேய்ப்படையாவது அமைக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. மதுவிலக்கு சம்பந்தமாக குற்றம் செய்கின்றவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதற்காக கடுமையான

1979 அக்டோபர் 30] [திரு. அ. ரகுமான்கான்]

சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பின்னால் இப்போது அச் சட்டம் திருத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற் கான சட்டம் கொண்டு வந்தபோது எங்கள் பேராசிரியர் அவர் களும், கலைஞர் அவர்களும் இப்படிப்பட்டச் சட்டம் தேவை யில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். அப்போது முதல் வர் என்ன சொன்னார், திருடன் கையில் பெட்டிச்சாவியை எப்படி கொடுப்பது, இதில் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதை எப்படி கேட்பது என்று கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு இச்சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொல்கிறார் கள். மறுபரிசீலனை செய்வது என்றால், எந்தெந்த பிரிவுகள் மறுபரிசீலனை செய்யப்படும் என்பதும் தெரியவில்லை. குடிக் கலாம், ஆனால் குடித்துவிட்டு கலாட்டா செய்தால் போலீஸ் கைது செய்யும். இப்படி ஒரு சட்டத்தை அமல்படுத்தப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். எப்படி அமல்படுத்தப் போகிறீர்கள் ? ஒருவேளை மதுவிலக்குக் கொள்கைக்கு விரோத மாக போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. குடிக்க லாம், குடித்துவிட்டு கலாட்டா செய்கின்றவர்களைத் தான் கைது செய்வோம் என்று சொன்னால் எப்படி மது அரக்கனை எப்படி நீங்கள் ஒழிக்கப்போகிறீர்கள் ? வேண்டுமென்றால் இந்த சர்க்காருக்கு மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கையில்லை என்று சொல்லிவிடுங்கள்.

அதுமட்டுமல்ல, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கும், அண்ணா அவர்களின் கொள்கைதான், அண்ணாவின் கொள்கை மதுவிலக்கு, ஆகவே தான் அதில் தீவிரமாக இருக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள், அப்படியென்றால் குதிரைப் பந்தயத்தை ஏன் ஒழிக்கவில்லை ? குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்பது அண்ணாவின் கொள்கைதானே, அதை ஏன் ஒழிக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது? குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக டர்ப் ஏஜென்சியை ஒழிக்க போகிறோம் என்று அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதில் என்ன சொல்லி யிருக்கிறீர்கள்..... The Government have therefore decided that the system should be abolished in the public interest. ஏழை எளிய மக்களை பொதுமக்களை பாதுகாப்பதற்காக என்று சொன்னால் குதிரைப் பந்தயத்தை ஏன் ஒழிக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது ? கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்காக சட்டத்தைக் கொண்டு வந்தார். குதிரைச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்திற்குப் போனார்கள். எங்கள் பக்கம் தீர்ப்பு ஆயிற்று. பின்னால் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். அங்கே இப்போது அந்த வழக்கு பெண்டிங்காக இருக்கிறது. அதை விரைவில் முடிப்பதற்கு பெட்டிஷன் போட்டு டிஸ்போஸல் செய் வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது, எத்தனித மான முயற்சியும் எடுக்கவில்லை? என்ன காரணம் ? நான்

[திரு. அ. ரகுமான்கான்] [1979 அக்டோபர் 30

கேள்விப்படுகிறேன். ரேஸ் கிளப்பின் தலைவராக முத்தையா என்பவர் இருக்கிறார். முதலமைச்சருக்கு மிகவும் வேண்டியவர். உங்களுக்கு தேர்தல் காலத்தில் நிதி திரட்டுவதற்கு, பல லட்சங்கள் புரளுவதற்கு அவரை சென்னை நகரத்திற்கு ஷெரீப்பாக நியமிக்க முயற்சி நடப்பதாக தெரிகிறது. அண்ணாவின் பெயரைச் சொல்லிவிட்டு, அண்ணாவின் கொள்கையை ஏதாவது செயல் படுத்துகிறீர்களா? ஆக உங்களுக்கு எந்தவிதமான நிலையான கொள்கையும் இல்லை. ஒரு கொள்கை இருக்கிறது, அதாவது எந்த கொள்கையும் கிடையாது என்ற கொள்கைமட்டும் இருக்கிறது. இதைவிட நாட்டிலுள்ள மக்கள் எதுவும் சொல்வதற்கில்லை.

அடுத்து உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, இன்றைக்கு சமுதாயத்தில் இருக்கக்கூடிய எல்லாவிதமான மக்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11—00)

விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். ஆடு, கோழி, மாடு இவைகள்கூட மறியல் போராட்டம், ஊர்வலம் எல்லாம் நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லாம் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள்? குழந்தை ஏன் அழுகிறது? பசி வருகிறது, அழுகிறது. அதுமாதிரி, அவர்களும் ஒரு பிரச்னைக்காக போராடுகிறார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இதையெல்லாம் தூண்டிவிடுகிறார் என்று சொல்லுகிறார். இது எப்படி இருக்கிறது தெரியுமா? கணவனை மனைவி சேலை வேண்டுமென்று கேட்டாளாம். கணவன், மக்களைக் கூட்டி, பார்த்தீர்களா, பார்த்தீர்களா என் மனைவி சேலை வேண்டுமென்று கேட்கின்றாள், இதற்கு காரணம் எதிர்வீட்டு ஏகாம்பரம் தான் தூண்டி விட்டிருக்கிறான் என்று சொல்கிறான். அதைப்போல் தான் இருக்கிறது.

அடுத்து, இன்னொன்று, மிக முக்கியமான பிரச்னை. நம் முடைய முதல்வர் அவர்கள் தொழிலாளர்களுக்கு நண்பனாக இருப்பதாகச் சொன்னார்கள். காமராஜ் அவர்கள் காலத்திலே, அண்ணா அவர்கள் காலத்திலே சில காரியங்கள் நடைபெறவில்லை. ஆனால், நம் முதல்வர் அவர்கள் கொத்தனாரை விட்டு கட்டிடத்தைத் திறக்க வைக்கிறார். ஏன் தெரியுமா? கட்டிடத்தைக் கட்டியவருக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார். இதன் அடிப்படையே தவறு. இன்றைக்கு தாலியை பொற்கொல்லர் செய்கிறார். அவரது உழைப்பு

1979 அக்டோபர் 30] [திரு. அ.ரகுமான்கான்]

அதில் இருக்கிறது. அதற்காக இதிலே புரட்சித் தலைவர் அவர்கள் என்ன ஆலோசனை சொல்லப் போகிறார் ? இதெல்லாம் தொழிலாளர்கள் மத்தியிலே நடக்கும் ஒரு அற்புத நாடகம். அப்படி நடித்து வருகிறார். ஆனால், ஒரு சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள். அது தொழிலாளர்களுக்கு விரோதமானது. 'வித்தவுட் வாரண்ட்' இல்லாமல், ஒரு போலீஸ்காரர் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள், வேலைநிறுத்தம் செய்கிறார்கள், அதற்குத் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லி, ஒரு ஆயிரம் ரூபாய் அபராதம், இரண்டு ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை என்று கொடுக்கக் கூடிய ஒரு கடுமையான சட்டத்தை, தொழிலாளர்கள் நண்பர், கொத்தனாரைக் கொண்டு கட்டிடத்தைத் திறக்கக்கூடிய முதல்வர் அவர்கள் ஆட்சியில் இப்படிப்பட்ட சட்டம் நீடிக்கலாமா என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள் போராடுகிறார்கள். இன்று நையினார் தாஸ் என்பவர் உயிரோடு இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்ற அளவிற்கு சந்தேகம் இருக்கிறது. காரணம் மந்திரிமார்களே இன்றைக்கு காணாமல் போகிறார்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலேகூட பார்த்தேன்—அதிலே மத்திய பிரதேச மந்திரியைக் காணோம் என்றிருக்கிறது. அந்த அளவுக்கு மந்திரிகள் காணாமல் போகக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆகையினால், இங்கேகூட அப்பேர்பட்ட நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் இருக்கிறது. எனவே, சட்டமன்ற பிரதிநிதிகள் நையினார் தாசைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் உண்மை நிலவரம் தெரியும். இல்லாவிட்டால் தெரியாது.

அடுத்து, இங்கே ஆளும் கட்சிக்காரர்கள் எந்தவிதமான லஞ்ச ஊழலும் நடைபெறவில்லை. ஆகவேதான் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு இந்த சபையிலே வைக்கவில்லை என்று சொன்னார்கள். தங்கள் மூலமாக அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் ; அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ராஜாராம் என்ற ஒருவர் நம்முடைய மாநிலத்தின் பிரதிநிதியாக தூதுவராக டெல்லியிலே இருக்கிறார். அவருடைய உண்மையான பதவி என்னவென்று கேட்டால், டெபுடி செகரட்டரி. அவருடைய ராங்க் என்ன தெரியுமா ? டெபுடி செகரட்டரி ராங்க். ஆனால், அவர் மந்திரியாக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சபையிலே உள்ளவர்கள் சிலருக்கு தெரியும் ; பலருக்குத் தெரியாது. முதல்வர் அவர்களிடம் அவர் மந்திரிப் பதவி வேண்டுமென்ற ஆசையைத் தெரிவித்தார். நம்முடைய முதல்வர்

[திரு. அ. ரகுமான்கான்] [1979 அக்டோபர் 30

அவர்கள் மந்திரிப் பதவி கொடுக்காமல், டெலிபோன் டைரக்டரியில் அவரை மந்திரியாக்கி இருக்கிறார். ஆனால், அவரது உண்மையான நிலை டெபுடி செக்ரட்டரி. ஆனால் அவரை டெலிபோன் டைரக்டரியில் மந்திரியாக்கி இருக்கிறார்கள். டெலிபோன் டைரக்டரியிலே காபினெட் மந்திரிகள் வரிசையிலே, அதுவும் திருமதி சுப்புலட்சுமி அவர்களுடைய பெயருக்கு கீழ், ராஜாராம், அமைச்சர் என்று போடப்பட்டிருக்கிறது. இது எப்படி வந்தது? ராஜாராம் எப்படி அமைச்சர் ஆனார்? அவர் டெபுடி செகரட்டரி தானே? அந்த அடிப்படையிலே தானே அவர் சம்பளம் வாங்குகிறார். டி. ஏ. வாங்குகிறார். கார் தரப்பட்டிருக்கிறது. வீடு தரப்பட்டிருக்கிறது. ஆகையால் எப்போது அமைச்சர் ஆனார் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அவரை இவ்வளவு கிண்டலுக்கு ஆளாக்கத் தேவையில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருக்கு இந்தப் பதவி தேவை தானா? எத்தனையோ ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள் இவருக்கு இந்தப் பதவியை கொடுத்து, அதற்காகச் சம்பளம், வீடு, கார், பேட்டா போன்றவைகள் கொடுத்து மக்கள் வரிப் பணத்தை வீணாக்கலாமா? முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்கின்ற மாநாட்டிலே இவரும் கலந்து கொள்கிறார். சாதாரண ஒரு டெபுடி செகரட்டரி எப்படி முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டிலே கலந்துகொள்ளலாம். எனவே, அவர் ஒரு அரசியல் வாதியாகத் தானே இருக்கிறாரே தவிர, அரசாங்கத்திலே பணியாற்றக் கூடியவராக அலுவலராக இல்லை. எனவே, அவர் அரசியல்ரீதியாகத் தான் அங்கே செல்கிறார்.

தவிர, அவர் அ.தி.மு.க. டெல்லியிலே ஒரு பருவப் பெண், 18 வயதுப் பெண் என்கிறார். மாலை போடுவதற்கு பருவப் பெண் மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டு போகக்கூடாது; அது முறையல்ல. இது விசித்திரமான ஒரு நிலையாக இருக்கிறது; ஆனால் அவர் பருவப் பெண் என்று சொல்கிறார்.

ஆனால் அப்படிப்பட்ட அரசியல் கருத்தைச் சொல்லலாமா? அரசு அதிகாரியாக இருக்கும்போது எப்படி அரசியல்வாதியாக மாறி அவர் கருத்தைச் சொல்லுகிறார்? அவர் தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். இல்லையென்றால் மக்களுடைய வரிப்பணத்தை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியை வளர்க்க தவறாகப் பயன்படுத்துகிறது என்றுதான் பொருள்.

1979 அக்டோபர் 30] [திரு. அ. ரகுமான்கான்]

அடுத்து, இந்த சர்க்கார் ஊழல் சர்க்கார், ஊழல் செய்யவும் தப்பு செய்யவும் தூண்டுகிறார்கள் என்று உங்கள் கட்சியைச். சேர்ந்தவர்கள் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவ்வாறு கடிதம் எழுதி தன்னுடைய பதவியை இராஜினாமா செய்திருக்கிறார் செல்லையா என்று சொல்லக்கூடிய மதிப்பிற் குரிய ஹவுசிங் போர்டு தலைவர், அவர் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ள வாசகத்தைச் சொல்லுகிறேன்—"அமைச்சர் இராகவானந்தம் ஊழல் செய்வதற்கு என்னைத் தூண்டுகிறார் தவறு செய்யத் தூண்டுகிறார்" என்று கூறியிருக்கிறார். சந்தேகம் இருந்தால்—இந்தச் சர்க்காருக்குச் சவாலாகக் கேட்கி றேன்—அந்தக் கடிதத்தையும் அது சம்பந்தமான கோப்புகளை யும் அவை முன் வைக்கத் தயாரா? உங்கள் கட்சியைச் சேர்ந்த ஹவுசிங் போர்டு சேர்மன் எழுதிய கடிதம் அது.

அப்சல்கான், திண்டுக்கல் டி.எம்.ஓ. 100 ரூபாய் லஞ்சம் வாங்கினார் என்று பொய் வழக்குகள் போட்டார்கள். அவர் சொன்னதைக் கேட்கவில்லை. போலீஸ் வழக்கு போட்டு அவ ரைக் கைது செய்தார்கள். ஊழியர்கள் போராடினார்கள். திரு. திரவியம் தலைமையில் அதைப்பற்றி விசாரிக்க அரசாங்கம் ஒரு கமிஷனைப் போட்டது. கமிஷன் ரிப்போர்ட் கொடுத்து ஆறு மாதமாகிவிட்டது. அந்த ரிப்போர்ட்டில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்—போலீஸ் அதிகாரிகள் பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள். டி.எஸ்.பி.–யையும்கம் பந்தப்பட்ட அதி காரிகளையும் சஸ்பென்ட் செய்ய வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்சல்கானுக்குப் பதவி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அப்சல்கான் ஆறு மாதம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். இன்று அவருக்குப் பதவி கொடுக்க வேண்டுமென்று நினைத்தாலும் பதவி கொடுக்க முடியாது. அந்த அப்சல்கான் உயிரோடு இல்லை. அவர் தற் கொலை செய்து கொண்டார் என்று கேள்விப்படுகிறேன். உங் களுடைய அஜாக்கிரதையினால், வேண்டுமென்றே போட்ட பொய் வழக்கினால் அவர் இன்றைக்கு இந்த உலகத்தை விட்டே போய் விட்டார். நாயுடு கமிஷன் ரிப்போர்ட்டை இங்கே வைத் தீர்கள், அது போன்று திரவியம் கமிஷன் ரிப்போர்ட்டை ஏன் வைக்கவில்லை? என்ன காரணம்? அப்சல்கான் சாவுக்கு இந் தச் சர்க்கார்தான் காரணம். கோவலன் சாவுக்கு காரணமான நெடுஞ்செழியன் கண்ணகியின் கண்ணீரால் மறைந்தான். அப் சல்கான் சாவின் காரணமாக ஏற்பட்டிருக்கிற கண்ணீருக்கு இந்தச் சர்க்கார்தான் பொறுப்பு. அந்தக் கண்ணீரினால் இந்தச் சர்க் கார் தூள் தூளாகும் என்பதுதான் தர்மத்தின் கட்டளை. நியாய த்தின் கட்டளை என்பதை இந்த நேரத்தில் கூறுகிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1979 அக்டோபர் 30

இன்னொரு குற்றச்சாட்டைக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு இருக்கிறதா ? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு அண்டர் செகரடரி—ஹோம் டிப்பார்ட்மென்ட்டில் பணியாற்றுபவர். அவருடைய மனைவி குறளகத்திற்குப் பக்கத்தில் நிற்கிறார். போலீஸ்காரர்கள் அவரை விபசாரி என்று சொல்லி ஒரு விபசாரியை அனுப்பி பிடித்து இழுக்கிறார்கள். மிகப் பெரிய கலாட்டா. நல்ல வேளையாக ஒருவர் தலையிட்டு அந்தப் பெண்ணைக் காப்பாற்றியிருக்கிறார். இதுவரை அந்த போலீஸ் அதிகாரி பேரில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன ? ஹோம் டிப்பார்ட்மென்ட்டிலே, போலீசை நிர்வகிக்கின்ற துறையிலே உள்ள ஹோம் டிப்பார்ட்மென்ட் அண்டர் செகரட்டரியின் மனைவிக்கே இந்த நிலை என்றால் சாதாரணமானவர்கள் நிலை என்ன என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, சட்டம் ஒழுங்கு இந்தச் சர்க்காரில் மிகவும் கெட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. அதைப் போலவே ஊழலே இல்லையென்று சொல்லுகிறார்கள். இந்த சபையில் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் சினிமா படம் எடுக்கிறார். மாண்புமிகு நடிகர் ஜசரிவேலன் சினிமா படம் எடுக்கிறார். முதலமைச்சரின் மெய்க்காப்பாளர் சினிமா படம் எடுக்கிறார். கலைஞரும், மாறனும் அமிர்தமும் எப்படி அன்று சினிமா படம் எடுத்தார்கள். இன்கம் சோர்ஸ் என்ன என்று கேட்டார்கள். இப்போது சினிமா படம் எடுக்கிறவர்களுடைய இன்கம் சோர்ஸை இந்த சபையில் சொல்வார்களானால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர். என்னைப் பற்றிக் குற்றச்சாட்டு சொல்வதால் சொல்ல விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசி முடித்தவுடன் நீங்கள் விளக்கம் சொல்லலாம். அதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

[முற்பகல் 11—10]

திரு. அ. ரகுமான்கான்: அதைப்போலவே துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். * உங்களுக்குத் தெரியும் ஹெல்த் டிபார்ட்மென்ட்டிலே மிகப் பெரிய டைரக்டர். கிங் இன்ஸ்டிட்யூட்டில் இரண்டு ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்யக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் அவர் இலட்சத்திற்கும் அதிகமாக செலவு செய்தார் என்று விஜிலென்ஸ் என்குயரி கமிஷனின் நடவடிக்கையில் இருந்தது. என்ன நடவடிக்கை இதுவரையில் எடுத்திருக்கிறார்கள். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 அக்டோபர் 30] [திரு.அ. ரகுமான்கான்]

அடுத்து, * அவர்கள் டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீஸினுடைய மனைவி. அந்த அம்மையார் ரீஜினல் ஹெல்த் அன்ட் வெல்பேர் டிரெயினிங் சென்டரில் இருக்கிறார் என்று தெரிகிறது. எஸ்.எஸ்.எல்.சி. சர்ட்டிபிகேட்டிலே மார்க்கை திருத்தி தப்பு செய்துவிட்டார்கள். அது முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. முதலமைச்சர் அவர்களுடைய பிரைவேட் செகரட்டரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். திருவனந்தபுரத்து அம்மையார் தவறுகள் செய்ததாக முதலமைச்சரின் கவனத்திற்கு வந்த பிறகும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தேர்தலையொட்டி வோட்டர் லிஸ்ட்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக இராயபுரம் தொகுதியிலே பல வாக்காளர்கள் விடப்பட்டு இருக்கிறார்கள். 50 ஆயிரம் பேர்களுக்கு மேல் விடப்பட்டிருக்கிறார்கள். எப்படி விடப்பட்டது என்று தெரியவில்லை. அதிலே அரசியல் உள்நோக்கம் இருக்குமோ என்று அஞ்சப்படுகிற நிலைமை இருக்கிறது.

இன்னொன்று, தேர்தல் அதிகாரி உத்திரவிட்டிருக்கிறார், யாரையும் எந்த அதிகாரியையும் மாற்றக்கூடாது என்று. அதே நேரத்திலே பல அதிகாரிகள் தேர்தலையொட்டி மாற்றப்பட்டு இருக்கிறார்கள்.

தேர்தல் நேரத்திலே அரசு விளம்பரங்களை கட்சிக்காகப் பயன்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. இருந்தாலும் விளம்பரத்தை விரும்பாத முதலமைச்சர், அவருக்கே உரிய கதாநாயகன் போலிலே பல போஸ்ட்டர்கள் ஒட்டப்பட்டு இன்றைக்கு அரசு விளம்பரங்கள் கட்சி விளம்பரங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நிலைமை இருக்கிறது. ஜனநாயகத்திற்கு விரோதமான முறையிலே இப்படி அரசாங்கம் செய்வது சரியல்ல. அதற்கு அவர்களுடைய பதிலை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னும் பல குற்றச்சாட்டுகளை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் இங்கே என்மீது ஒரு குற்றச்சாட்டை கூட கூறினார்கள் என்று சொல்லலாம், நான்

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் கே. சமரசம்] [1979 அக்டோபர் 30

ஏதோ சினிமாப்படம் எடுப்பதாகச் சொன்னார். திரு. ரகுமான்கான் அவர்கள், எப்போதுமே இல்லாத ஊருக்கு போகாத வழியைக் காட்டுவதிலே வல்லவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் படம் எடுப்பதாக சொல்லுகிறாரே, என்ன படம், எந்தக் கம்பெனி, படத்தின் பெயர் என்ன என்பதையெல்லாம் ஆதாரத்தோடு காட்டுவதற்கு சபையிலே அவர் தயாராக இருக்கிறாரா, அவர்கள் சட்ட மன்றத்திலே அதை நிரூபிக்க முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியை நண்பர் சமரசம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முதலமைச்சருடைய மெய்க்காப்பாளர், படம் எடுக்கிறார் நம்பர் 1. நம்பர் 2, நடிகர் ஜசரிவேலன் இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார் அவர் படம் எடுக்கிறார். அதையொட்டி டாக்டர் சமரசம் படம் எடுக்கிறார் நடிக்கிறார் என்று தகவல் வந்தது, அவர் எதை மறுக்கிறார் ? அதனால்தான் நான் பேசும்போது சொன்னேன், சோர்சஸ் ஆப் இன்கம் என்ன என்பதைச் சொல்வதற்கு அவர் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறாரா ?

டாக்டர் கே. சமரசம் : என் மீது குற்றம் சாட்டினார்கள். நான் கேட்கிறேன். மற்றவர்களைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் எங்கே படம் எடுக்கிறேன், என்ன படம், படத்தின் பெயர் என்ன என்பதை ஆதாரத்தோடு அவர் சொல்வதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறாரா இல்லாவிட்டால் அவருடைய நிலைமை என்ன ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் பேசும்பொழுது சில அதிகாரிகளுடைய பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த சட்டமன்றத்திலே குற்றச் சாட்டுகள் அதிகாரிகள் பெயரைச் சொல்லாமல் சொல்வதுதான் மரபாக இருந்து இருக்கிறது. நான் இருக்கிறபோது அப்படித்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. பதவியைச் சொல்வதைத் தவிர, பெயரைச் சொல்வதில்லை. அதிகாரியின் பெயரை அவர்கள் சொன்னார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே. அமைச்சர் பி.டி. சரஸ்வதி அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்ன நேரத்தில் அந்த அதிகாரியின் பெயர் நடராஜன் என்று சொல்லி அது சபை ரெக்கார்டில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த விஷயத்தில், முதலிலேயே எழுதிக் கொடுத்துவிட்டு, இதைப் பற்றிப் பேசப் போகிறேன் என்று கொடுத்தீர்கள். இங்கேயிருந்து போன

1979 அக்டோபர் 30] *[பேரவைத் துணைத் தலைவர்]*

சர்க்குலரைக் காண்பித்து, அதைப்பற்றிப் பேசப் போகிறேன் என்று சொல்லி அனுமதி வாங்கிப் பேசினீர்கள். ஆகவே அது, வேறு விஷயம். பொதுவாக இருக்கின்ற விதிகளையும், நடை முறைகளையும் பற்றிச் சொல்கிறேன், அது மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு அதையே கடைப்பிடிப்பது தவறு. எனவே, ஏதாவது குறிப்பிட்ட குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமென்றால் முதலில் எழுதிக் கொடுத்துவிட்டுச் சொல்ல வேண்டும், மேலும் அதிகாரிகளின் பெயரைச் சொல்லக் கூடாது, அவர்கள் இருக்கின்ற பொறுப்பை வேண்டுமானால் சொல்லலாம். அதுதான் மரபாக இருந்து வருகிறது. எனவே, அந்த அதிகாரி களின் பெயரை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன், அவர்களு டைய பதவிப் பெயர் இருக்கலாம், அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, நமது ரகுமான்கான் அவர்கள், டாக்டர் சமரசம் அவர்கள் படம் எடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுத்து நண்பர் சமரசம் அவர்கள் ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் கள். எனக்கு வந்த தகவலின்படி பேசுகிறேன் என்று அவர்கள் சொல்வார்கள் என்றால், எங்களுக்குக் கூட பல்வேறு தகவல் கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தகவல்களின் அடிப் படையில் சபை உறுப்பினர்களைப் பற்றி அதைச் சொல்கிறார் கள், இதைச் சொல்கிறார்கள் என்று சொல்ல முடியும். எனவே, அவ்வாறு சொல்வது சபை நடவடிக்கைகளுக்குச் சரியாக இருக்குமா என்று எனக்குத் தாங்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே, பேசுகின்ற பொழுதே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்.

திரு. அ. ரகுமான்கான் : இரண்டு பேரைப் பற்றி ஒத்துக் கொண்டார்களே, அதுவரைக்கும் சந்தோஷம்.

திரு. எஸ். ஆர். இராதா : இரண்டு பேரைப்பற்றிப் பிரச்னை இல்லை. இங்கே இருக்கின்றவரைப் பற்றிச் சொல்லும்பொழுது பகிரங்கமாக ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : அதை நிரூபிக்க முடியுமா என்று நான் கேட்டேன், அதற்குப் பதில் இல்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : ரகுமான்கான் சொல்லி யது போல் நான் படம் எடுக்கவில்லை என்றுஅவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா ?

[1979 அக்டோபர் 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சமரசம் அவர்கள் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கு அவரே எழுந்து இல்லை என்று மறுப்புச் சொல்கிறார், எனவே பிரச்னை இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : '' டாக்டர் சமரசம் அளிக்கும் '' என்று வந்திருக்கிறதே.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. சென்னைமு. அரங்கநாதன்: நான் படம் எடுக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்களா ?

திரு. சி. ஆறுமுகம் : சென்ற வாரம் விளம்பரம் வந்திருக்கிறது. '' டாக்டர் சமரசம் அளிக்கும் '' என்று வந்திருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள், என்னுடைய அனுமதி இல்லாமல் பேசினால் அது சபைக் குறிப்பிலும் வராது, பத்திரிகையிலும் வராது, எனவே உட்காருங்கள்.

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நண்பர் இரகுமான்கான் அவர்களும், நண்பர் ஆறுமுகம் அவர்களும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். வேறு சிலர் படம் எடுக்கிறார்கள், ஜேப்பியார் படம் எடுத்தார் என்று சொன்னார்கள். அது உண்மை. மூன்று, நான்கு கலர்ப் படங்களை எடுத்தார். அதன் சோர்ஸ் என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவாதத்திற்குள் இறங்க நான் விரும்பவில்லை. ஆனால் டாக்டர் சமரசம் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். பத்திரிகையைப் பார்த்துவிட்டு அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். '' டாக்டர் சமரசம் அளிக்கும் '' என்று ஒரு படத்திற்குப் போட்டிருந்ததாகச் சொல்கிறார்கள். '' நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அளிக்கும் '', '' மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அளிக்கும் '' என்றெல்லாம் வருவது மாதிரி வரும்பொழுது, ' அளிக்கும் ' என்பதையே ' தயாரித்தல் ' என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். '' நடிகர் திலகம் '', '' மக்கள் திலகம் '' என்ற அந்த வரிசையிலே நம்முடைய சமரசத் திலகம் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் என்று எண்ணிக் கொள்ள வேண்டும். அவர்கள் படம் எடுக்கிறார்கள் என்று கருதிக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் இனிமேல் படம் எடுக்காமல் இருப்பார் என்று கருத முடியாது.

1979 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசுகின்ற, உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். பேசுகின்ற நேரத்தில் குற்றச்சாட்டுக்களை எழுதிக் கொடுத்து விட்டுப் பேசுவது நல்லது. சட்டமன்ற உறுப்பினர்கள், நான் கேள்விப்பட்டேன், சொல்லப்பட்டது என்று சொல்லி குற்றச் சாட்டுக்களைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். சொல்வதை முதலிலேயே எழுதிக் கொடுத்து விட்டு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11—20)

திரு. எஸ். ஆர். இராதா : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சாமார்த்தியமாகப் பேசுகிற நேரத்தில் டாக்டர் கலைஞர், சமரசம் என்று சொல்லி, அவர் அளிக்கின்ற என்பதற்கு விளக்கம் சொல்கின்ற நேரத்திலே, சபையிலே இல்லாத ஜேப்பியார் படம் எடுக்கிறார், அதற்கு என்ன வருமான வரி, என்ன நிதி ஆதாரம். (குறுக்கீடுகள்) பாய்ன்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்ய எனக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் நான் பேசும் பொழுது, குறுக்கிட்டுச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை யிருக்கிறது. யார் வேண்டுமானாலும் பேசட்டும், அதை நான் வரவேற்கிறேன். ஆனால், கலைஞர் அவர்கள் ஜேப்பியாருக்கு என்ன வருமானம், என்ன வசதி, என்ன வாய்ப்பு என்றெல்லாம் சபையிலே இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுவது என்றால், சபையிலே இல்லாத பலரைப் பற்றி நாங்கள் பேசமுடியும். அப்படி பேசுவது சபைக்குச் சரியா என்று தங்களை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : முதலமைச்சரின் மெய்க்காப்பாளர் படம் எடுக்கிறார் என்று ரகுமான்கான் அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால், முதலமைச்சரின் செக்யூரிடி ஆஃபீசரா, அல்லது வேறு யாராவது படம் எடுத்தார்களா? படம் எடுப்பதே தவறு என்று அவர் கூறுகிறாரா? அப்படிக் கூறினால், எதிர்க்கட்சித் தலைவரின் உறவினர் ''எங்கள் தங்கம்'' படம் எடுத்தாரே, அதுபற்றி என்ன கூறுகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : அதைத்தான் நண்பர் ரகுமான்கான் அவர்கள் இங்கு விளக்கமாகக் குறிப்பிட்டார்கள். கலைத் துறையில் நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போலவே நானும் நீண்ட காலமாக தொடர்பு கொண்டவன். அவருக்கும் தெரியும், என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் களுக்கும் கலைத் துறையிலே எவ்வளவு தொடர்பு உள்ளது

[திரு. மு. கருணாநிதி] [1979 அக்டோபர் 30

என்று. மாறனானாலும், அல்லது அமிர்தமானாலும் 20, 25 ஆண்டுகளாகப் படம் எடுத்தவர்கள். அவர்கள் படம் எடுத்தது பற்றி, முன்பு ஜனாதிபதியிடத்திலே கொடுத்த குற்றச்சாட்டில், கலைத் துறையிலே எந்த அனுபவமும் இல்லாத மாறன், அமிர்தம் போன்றவர்கள் படம் எடுத்தார்கள் என்று எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருக்கிறார். அதைத்தான் ரகுமான்கான் சுட்டிக் காட்டினார். 20, 25 ஆண்டு காலமாக காமிரா மேனாக இருந்த அமிர்தத்தை, கலைத் துறையிலே அனுபவமே இல்லாதவர் படம் எடுக்கிறார் என்ற குற்றச்சாட்டுக் கொடுத்தாரே, இப்பொழுது படம் எடுக்கிறார்களே உங்கள் கட்சியிலே சில பேர், அவர்களெல்லாம் கலைத் துறையிலே எந்த அளவு அனுபவம் உள்ளவர்கள் என்று தான் கேட்டார்களே தவிர, வேறல்ல.

*திரு அ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விழைகின்றேன். இந்தச் சட்டமன்றம் தொடங்குவதற்கு முன்னால் வெளியிலே, பொதுமக்கள் மத்தியிலே ஒரு கருத்து பரவலாக கூறப்பட்டது. ஏதோ இந்த ஆட்சி சட்டசபைக்கூட்டம் தொடங்குவதற்கு முன்னாலேயே கலைத்து விடப்படும், பல உறுப்பினர்கள் ஆளுங்கட்சி வரிசையிலேயிருந்து எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றுவிடுவார்கள். இந்த நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த ஆட்சிக்கு அற்ப ஆயுசுதான் என்று சில பத்திரிகைகளிலே வந்த செய்தியைக் கொண்டு மக்கள் பேசிக் கொண்டார்கள். ஆனால், இங்கே வந்து பார்க்கும் போது ஆளுங்கட்சிக்கு எண்ணிக்கை கூடியதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை. நான் இதைத் குறிப்பிடக் காரணம் 5 ஆண்டுகளுக்கு மக்களால் அனுமதிக்கப்பட்ட ஒரு அரசை இடையிலே இறக்கி விடுவது என்பது ஜனநாயக மரபுக்கு நல்லதல்ல. எடுத்துக்காட்டாகச் சொல்லப்போனால், பெருந் தலைவர் காமராஜர் காலத்திலே ஒரு நிகழ்ச்சி நடந்தது. 1972-லே திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தது. அப்பொழுது தமிழகம் முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்த ஆட்சியை எப்படியாவது கவிழ்த்து விட வேண்டுமென்று எதிர்க் கட்சியிலே இருந்தவர்கள் அதற்காகப் போராட்டம் நடத்த முடிவு எடுத்தபொழுது, அப்பொழுது ஸ்தாபன காங்கிரசிலே இருந்தவர்கள் பெருந்தலைவர் காமராஜரிடத்திலே சென்று இப்பொழுது நல்ல சந்தர்ப்பம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்து விடலாம், ஆட்சிப்பீடத்திலேயிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை இறக்கி விடலாம், நாம் அந்தப் போரட்டத்திலே கலந்து கொள்ளலாம் என்று சொன்ன பொழுது, பெருந்தலைவர் சொன்னது எனக்குப் பசுமையாக

1979 அக்டோபர் 30] [திரு: அ. சுவாமிதாஸ]

நினைவில் இருக்கிறது. 'நீங்கள் என்னடா பேசுகிறீர்கள். ஜனநாயகத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சி நடத்துகிறது.

வாக்கெடுப்பின் மூலம் அமைக்கப்பட்டிருக்கிற ஆட்சியை, அந்த ஆட்சி எப்படி இருந்தாலும், 5 வருடத்திற்குள் கவிழ்க்க முயலக்கூடாது. 5 வருடம் ஆட்சி செய்ய அவர்களுக்கு உரிமை வழங்கவேண்டும். இடையிலே, அந்த ஆட்சியிலே குறுக்கிடக் கூடாது. அப்படிக் குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால் இந்த நாடு எங்கே போய் முடியும். 5 வருடம் அவர்கள் தான் ஆள வேண்டும். தி. மு. க. தான் ஆளவேண்டும். நாம் போரட்டத்திலே இறங்கக் கூடாது. அது தவறான கருத்து. அப்படி ஒரு கருத்து மக்கள் மத்தியிலே இருக்கக்கூடாது. மக்களுக்கு நன்மை செய்யாவிட்டால், ஆட்சி தவறுகள் செய்தால், அவர்களுடைய தவறுகளை மக்கள் மத்தியில் சுட்டிக் காட்டி மீண்டும் வாக்கெடுப்பு வரும்போது மக்களின் நம்பிக்கையைப் பெற்று அதிலேதான் அந்த ஆட்சியை மாற்றவேண்டும். எந்த அரசும் 5 வருடத்திற்கு ஆள அனுமதிக்கப்படவேண்டும். என்று அறிவுரை வழங்கினார்கள்.

ஆகவே அவர்கள் செய்கிற தவறுகளை தவறான காரியங்களை எடுத்துச் சொல்வதிலே தவறு இல்லை. பொதுமக்கள் விரும்பாத காரியங்களை சுட்டிக் காட்டுவது தவறல்ல. ஆனால் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்கக் கூடாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தானாகவே கவிழ்ந்தால் என்ன பண்ணுவது?

திரு. அ. சுவாமிதாஸ் : தானாகவே கவிழ்வது இருக்கட்டும். சரண்சிங் ஆட்சிக்கு ஆதரவு தருகிறோம் என்று சொல்லிவிட்டு உரிய நேரத்திலே ஆதரவு தரமாட்டோம் என்று கைவிட்டு ஆட்சியைக் கவிழச் செய்வது என்பது வேறு.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சரண்சிங் எங்களை ஆதரவு தாருங்கள் என்று கேட்கவே இல்லை. கடைசி வரையிலும் கேட்கவே முடியாது என்று சொல்லிவிட்டார்.

திரு. அ. சுவாமிதாஸ் : ஜனதா ஆட்சி கவிழ்ந்தபோது சரண்சிங் ஆட்சி அமைப்பதற்கு தனக்கு இந்திரா காங்கிரசின் ஆதரவு இருக்கிறது என்று சொல்லி, இந்திரா காங்கிரஸும் ஜனாதிபதியிடம் எழுதிக் கொடுத்து பிறகு ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள். எனவே தான் மக்கள் கேட்கிறார்கள், யாரை நம்புவது என்று. உங்களை எல்லாம் நம்ப முடியாது

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 அக்டோபர் 30

என்று சொல்கிறார்கள். இன்றைக்கு நான் இந்தக் கட்சியில் இருக்கிறேன். நாளைக்கு நான் எந்தக் கட்சியில் இருப்பேனோ? பெரிய தலைவர்கள் எல்லாம் இப்படிப் போகிறபோது உங்கள் நிலை என்னவோ என்று மக்கள் கேட்கிறார்கள். கடற்கரைக் கூட்டத்தில் இந்திரா அம்மா என்ன பேசினார்கள். தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்ததற்கு நான் காரணம் இல்லை என்று சொன்னார்கள். ஒரு கட்சியின் ஆட்சியைக் கவிழ்க்க உறுப்பினர்களை கட்சி மாறும்படி இழுக்கக்கூடாது. இந்த நிலை எல்லாம் இருக்கக்கூடாது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே. பிரச்சனை திசை திரும்பிவிட்டது. நான் ஏற்கனவே அவர் எழுப்பிய பிரச்சனைக்கு இங்கு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இந்த கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது ஏதோ ஆட்சியை கவிழ்ப்பதற்காக இல்லை. அப்படிப்பட்ட நோக்கம் இல்லை என்பதை நான் இந்த மன்றத்திலே மாத்திரம் அல்ல, வெளியிலும், பொதுக் கூட்டத்திலும், நிருபர்களிடத்திலே பேசுகிற நேரத்திலும் தி. மு. க. வின் சார்பாக திட்டவட்டகமாத் தெரிவித்திருக்கிறோம். அவர் சொன்னார் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு சட்டமன்ற உறுப்பினர்களை இழுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எந்த சட்டமன்ற உறுப்பினர்களை நாங்கள் இழுத்து இருக்கிறோம். யார், யார் இழுத்திருக்கிறார்கள் என்று அவர் விளக்கினால் நன்றி.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. ஒரு ஆட்சி 5 ஆண்டுகாலம் இருக்க அனுமதிக்கப்படவேண்டும். ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் நம் கட்சிக்கு வருகிறார் என்று சொன்னால் கூட அவரை அப்படிச் செய்யக் கூடாது என்று தடை செய்ய வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இங்கே இருந்து திரு ப. உ. ச. அவர்கள் அங்கே போனார். அப்பொழுது ஆளும் கட்சிக்கு உறுப்பினர் அந்த ஆலோசனையை வழங்கினாரா?

திரு. அ. சுவாமிதாஸ் : எங்கள் கட்சி உட்படத்தான் சொல்கிறேன். என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நான் இந்தக் கட்சியில் இருந்து அடுத்த கட்சிக்குப் போகிறேன் என்றால், இந்தப் பதவியை ராஜினாமா செய்து விட்டுத்தான் போகவேண்டும்.

1979 அக்டோபர் 30] [திரு. அ. சுவாமிதாஸ்]

[முற்பகல் 11.30]

அப்படி ஒரு மரபு ஏற்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் குறிப்பிட்டேனே தவிர குற்றச்சாட்டு சொல்ல அல்ல. எந்தக் கட்சியில் இருந்தாலும் ஜனநாயகம் வாழவேண்டும் என்ற நல்ல எண்ணம் உள்ளவர்கள் இதை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

திரு. செ. சிவசாமி: மத்தியில் 2/3 மெஜாரிட்டி ஜனதா கட்சிக்கு இருந்தபோது, இப்படி ஒரு சட்டத்தை ஏன் கொண்டு வந்து இருக்கக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது தான் போய்விட்டது. இப்போது அவர் பேசட்டும்.

திரு. அ. சுவாமிதாஸ்: கட்சி மாறிகள் அதை விரும்பவில்லை. அடுத்ததாக, தமிழ் நாட்டு பிரச்சனைக்கு வருவோம்.

இன்றைக்கு தமிழகத்தில் விவசாயிகள் நீண்ட நெடுங் காலமாக பல்வேறு பிரச்சனைகளை முன்வைத்து போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அதில் அரசு தீவிரமாக கவனம் செலுத்தி பல சலுகைகளைக் கொடுத்து இருந்தாலும், முழு மையாக இல்லை. அவர்கள் கடன் பளு குறையவில்லை. அந்தக் கடன்களை முழுமையாக வசூலிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு ஒரு திட்டவட்டமாக கொள்கை வகுக்கவேண்டும் என்று நான் வலியுறுத்திக்கேட்டுக்கொள் கிறேன். அவர்கள் பெற்ற கடனுக்கு இன்று வரையில் வட்டி செலுத்தவேண்டாம், இந்த அரசு அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறது என்று சொல்லி திருப்பிச் செலுத்த வேண்டி யிருக்கும் கடன் தொகையை இன்றுமுதல் கணக்கு எடுத்துக் கொண்டு, தவணை முறையில் 10-20 தவணைகளில் அதைத் திருப்பிக் தரவேண்டும் என்று உத்தரவு போடவேண்டும். இன்று அந்த சலுகை போடாவிட்டாலும், நாளைக்கு நீங்கள் போடத்தான் போகிறீர்கள். ஆகவே, செய்கிற காரியத்தைச் சீக்கிரமாகச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டண பாக்கியை பலர் கட்டவில்லை. அதைக் கூட, அந்த பாக்கியைக்கூட தவணை முறையில் கட்டுவதற்கு உத்தரவு போடலாம்.

மீட்டர் ரென்ட். அது ஒரு கொடுமையான சட்டம். அதை மாற்றி அமைக்க அரசாங்கம் முன்வந்து, அந்த மீட்டர் ரென்ட் வசூலிப்பது இல்லை என்று ஒரு அறிவிப்பு கொடுத்தால், அந்தப்

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 அக்டோபர் 30

பிரச்னைக்கு ஒரு முடிவு காண முடியும். அதற்கான வழிமுறைகளை இந்த அரசு சீக்கிரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, போலீசுக்கு நமது அரசாங்கம் சங்கம் அமைக்க உத்தரவு கொடுத்து இருக்கிறது. அது சரியா, தவறா என்பது பிரச்னை அல்ல. மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றால், யூனிபார்ம் போட்டு வேலை செய்பவர்களுக்கு சங்கம் அமைக்க உரிமை கொடுக்கக்கூடாது. பல நாடுகளில் கொடுக்கவில்லை. நாம் கொடுத்து இருக்கிறோம். கொடுத்ததன் விளைவு, அவர்கள் போராட்டம் ஆரம்பித்து விட்டார்கள். தக்கலையில் முதலில் போராட்டம் ஆரம்பித்தார்கள். அத் தொகுதி உறுப்பினரான என்மீது குற்றம் சுமத்தி போராட்டம் நடத்தியதால் அது குறித்து விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அங்கே தக்கலை காவல் நிலையத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அண்மையில் தான் வந்து அவர் அங்கே பதவி ஏற்றார். பதவி ஏற்ற நாளிலிருந்து அவருடைய வேலை பொய் வழக்கு போடுவது. மக்களிடத்தில் ஒரு பீதியை ஏற்படுத்த வேண்டும் என்று பொய் வழக்கு போடுவதில் அவர் நிபுணர். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகஸ்ட் 25 ஆம் தேதி ஈத்தாவிளை செகில் என்பவரை காலையில் வந்து உங்கள் மீது வாரண்ட் இருக்கிறது என்று சொல்லி அழைத்துச் சென்றிருக்கிறார் காவல் நிலையத்திற்கு. அங்கே விசாரணை செய்தபோது, அவர் மீது வாரண்ட் இல்லை என்று தெரிகிறது. வாரண்ட் இல்லையென்றால் அவரை விட்டு விட வேண்டியது தானே? ஆனால் விட வில்லை. மாலை வரையில் வைத்து இருந்தார்கள். அவருடைய நெருங்கிய உறவினர், இப்படி அநியாயமாகப் பிடித்து வைத்து இருக்கிறார்கள் அவர் ஒரு தவறும் செய்யவில்லை விடுதலை செய்யச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் காவல் நிலையத்திற்குச் சென்று, அந்த எஸ்.ஐ.யிடம் கேட்டுக்கொண்டார்கள். விசாரணையில் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று தெரிந்த பின்னர் அவரை விடுவிக்கவேண்டியது தானே என்று கேட்டுக் கொண்டார்கள். அதை அங்கே யுள்ள இன்ஸ்பெக்டர் அவர்களிடத்திலும் சொன்னார்கள். இன்ஸ் பெக்டர் அவர்களும் எஸ்.ஐ.யிடம் விடுதலை செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். ஆனால் அந்த எஸ்.ஐ. அவரை விடுதலை செய்யவில்லை. அங்கேயே வைத்துக்கொண்டு இரவிலே வருகிற மொபைல் பார்ட்டியினர் சாராய வழக்குப்போட பிடித்து வந்தவர்களோடு இவரையும் சேர்த்து, 22 லிட்டர் சாராயம்

1979 அக்டோபர் 30] [திரு. அ. சுவாமிதாஸ்]

வைத்து இருந்தார் என்று சொல்லி அவர் மீது பொய் வழக்கு போட்டு, ரிமான்ட் வாங்கி, உள்ளே வைத்து விட்டார்கள். அவர் ஒரு ஏழை. ஸ்டேஷனிலேயே இருந்தவரிடத்தில் 22 லிட்டர் சாராயம் எப்படி வந்தது? இப்படி பொய் வழக்குப் போட லாமா? இது நடந்தது ஆகஸ்ட் 25 ஆம் தேதி.

ஆகஸ்ட் 28 ஆம் தேதி மற்றொரு வழக்கு. கக்குறிச்சி என்ற இடத்தில் ஆசிர்வாதம், மரியஇதயம் ஆகிய இருவரை திருட்டு வழக்கு ஒன்றில் விசாரணைக்காக அழைத்துச் சென்றார்கள். விசாரணையில் திருட்டுப்போன பொருள்கள் கிடைத்து விட்டது. அவர்கள் திருடவில்லை. திருடியது இன்னொரு பெண். அந்தப் பெண்ணையும் பிடித்தாகிவிட்டது. திருட்டுப்போன பொருள் களும் கிடைத்து விட்டன. அப்படியிருந்தும் அந்த இரண்டு பேரையும் அவர்கள் விடுதலை செய்யவில்லை. அவர்களை 29 ஆம் தேதி மாலை வரையில் விடுதலை செய்யவில்லை. அதைக் கேள்விப்பட்டு, ஜனதா கட்சியைச் சேர்ந்த நகர துணைத் தலை வர் திரு. வேலாயுதம் பிள்ளை அவர்கள் எஸ்.ஐ.யிடம் சென்று இப்படி அநியாயமாக வைத்து இருக்கிறீர்களே, திருட்டுப்போன பொருள்களும் கிடைத்து விட்டது, விடுதலை செய்யுங்கள் என்று கேட்டு இருக்கிறார். அவரைப் பார்த்து நீங்கள் எப்படி போலீஸ் ஸ்டேஷனுக்கு வரலாம், உங்களைக் கைது செய்து லாக்கப்பில் வைப்பேன் என்று சொல்லி, அவரை அனுப்பிவிட்டு, அந்த இரு வர் மீதும் பொய் வழக்கு சாராயம் வைத்து இருந்ததாகச் சாட்டி, குற்றச்சாட்டு தாக்கல் செய்து, ரிமாண்டில் அவர்களைப் போட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசி முடித்த பிறகு மூன்று கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். நீங்கள் இப்போது முடித்தால்தான் ஒன்றரை மணிக்கு முடிக்க முடியும். ஆகவே, இத்துடன் நீங்கள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. சுவாமிதாஸ்: இப்படி பொய் வழக்குப் போடுவதே ஒருவருடைய தொழிலாக இருக்கிறது. அந்த வேலாயுதம் பிள் ளையை 31-ந்தேதி லாக்கப்பில் தள்ளி விட்டார்கள். அதோடு விட்டுவிடவில்லை. லாக்கப்பிலே தள்ளி நன்றாக உதைத்திருக் கிறார்கள். உதை தாங்காமல் அவர் போட்ட சத்தம், அழுத குரல் ஒரு பர்லாங் தூரத்திற்குக் கேட்டிருக்கிறது. பக்கத்திலே தான் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது. அடி தாங்காமல் இவர் போட்ட சத்தத்தினால் ஏதோ நடக்கிறது என்று நினைத்து, கொஞ்ச நேரத்திற்கு மாஜிஸ்ட்ரேட் வழக்கை நடத்தாமல் நிறுத்தி வைத்திருக்கிறார். இது நடந்தது ஆகஸ்ட் 31-ந் தேதி.

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 அக்டோபர் 30

இதைத் கேள்விப்பட்டு, நான் அந்த சப் இன்ஸ்பெக்டரிடம் போய் கேட்டேன். நீங்கள் இந்த மாதிரி செய்கிறீர்களே, நீங்கள் ஒரு கிராஜுவேட், பி.ஏ., படித்திருக்கிறீர்கள்; இப்படி முறைகேடான செயல்களை எல்லாம் செய்கிறீர்களே, இப்படிச் செய்யலாமா என்று கேட்டேன். அதுவும் மரியாதையுடன்தான் கேட்டேன்; மரியாதைக் குறைவாக எந்த வார்த்தையும் சொல்ல வில்லை; மரியாதையோடுதான் சொன்னேன். பின்னால் டி.எஸ்.பி. வந்தார். நடந்த விவரங்களை விசாரணை செய்தார். இந்த மாட்டரை நீங்கள் "பிரசிபிட்டேட்" பண்ண வேண்டாம்; சுமூகமாக முடித்து விடலாம் என்று என்னிடம் சொன்னார். அது முடிந்த பின்னால் நான் வீட்டுக்கு போய் விட்டேன். அன்று மாலையில் திரு. வேலாயுதம் பிள்ளையை கோர்ட்டில் ஆஜர்படுத்தி, விடுதலை செய்தார்கள்.

நான் வீட்டுக்குப் போன பின்னால், என்மீதே கேஸ் போட்டிருக்கிறார்கள். கேஸ் நெம்பர் ஐ.பி.சி. 506 மற்றும் மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் 75—இதன்படி கேஸ் போட்டிருக்கிறார்கள். இது எப்படி உருவாகியிருக்கிறது என்றால், எஸ்.ஐ. தானாகவே செய்திருக்க முடியாது. அவர் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அப்போதே என்னிடம் சொல்லியிருப்பார். அதனால் அந்த எஸ்.ஐ. கேஸ் போட்டிருக்க மாட்டார். என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் மாவட்ட எஸ். பி. அவரை தூண்டிவிட்டார். காரணம் கடந்த பட்ஜெட் செஷனில், சட்டசபையில் நான் அவரைப்பற்றி பேசியிருக்கிறேன். அதில் இருந்தே அவருக்கு என்மீது ஒரு காழ்ப்பு உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. எப்படியாவது என்னை மாட்டிவிட வேண்டுமென்பது அவருடைய எண்ணம். அதன் காரணமாக, இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி, என்மீது வழக்குப்போட்டு, என்னை மாட்டிவிட்டார்.

அதுமட்டுமல்ல, ஒன்றும் அறியாத போலீஸ்காரர்களை ஸ்டிரைக் செய்ய தூண்டிவிட்டவர் இந்த எஸ்.பி. தான். அவருடைய தூண்டுதல் பேரில்தான் அங்கே ஸ்டிரைக் செய்தார்கள். ஸ்டிரைக் ஏற்பாடுகளை மறைமுகமாக செய்தார். போலீஸ்காரர்கள் ஊர்வலம் போகிறார்கள். அதற்கு எஸ்.பி.தான் தயார் செய்தார். டியூட்டி நேரத்தில் ஊர்வலம் போக ஏன் அவர் அனுமதி கொடுத்தார்? அவர் அதற்கு உடந்தையாக இல்லை என்றால் டியூட்டி நேரத்தில் ஊர்வலம் போவதை அவர் தடுத்திருப்பார். ஆனால், அவர்தானே ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தவர். ஊர்வலத்தை தடுக்க முடியாவிட்டாலும், அவர் தூண்டிவிடவில்லை என்றால், ஊர்வலம் சென்றவர்கள் மீது ஏதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பார். அவர் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இதன் மீது அரசாங்கம் நன்றாக விசாரணை செய்ய வேண்டும்; பகிரங்க விசாரணை

1979 அக்டோபர் 30] [திரு. அ. சுவாமிதாஸ்]

நடத்த வேண்டும். அப்படி நடத்தினால்தான் மேலும், இந்த மாதிரி தகராறு வராது; பொய் வழக்கு வராது. ஆளும்கட்சி உறுப்பினர்கள் கூட பல மாவட்டங்களில் அடிபடுகிறார்கள்; மிதிபடுகிறார்கள்.

பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களில் நாங்கள் பங்கேற்றுக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் எதற்காக நாங்கள் மக்கள் பிரதிநிதியாக வர வேண்டும்? எதற்காக நாங்கள் எம்.எல்.ஏ.யாக வர வேண்டும்? தவறு நடந்தால் அதைச் சுட்டிக் காட்ட வேண்டும். புரட்சி நடத்தக்கூடாது. போராட்டம் நடத்தக் கூடாது. ஆனால், போலீஸ் ஸ்டேஷனில் தவறு நடக்கிறது என்றால் அதைச் சுட்டிக்காட்ட எங்களுக்கு உரிமை இல்லையா? அந்த உரிமை கூட இல்லாமல் நாங்கள் எதற்காக எம்.எல்.ஏ.யாக வர வேண்டும்? எதற்காக மக்கள் எங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? மக்கள் பிரதிநிதி என்ற முறையிலே எங்களுக்கு தவறுகளைச் சுட்டிக்காட்டும் உரிமை இருக்கிறது. ஆகவே, இது குறித்து ஒரு நல்ல, பகிரங்க விசாரணை நடத்தி, குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுகொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11—40)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பில் கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை ஒட்டி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தமட்டில், பல தலைவர்கள் இங்கே பேசும்போது, மக்கள் பால் இதன் அணுகுமுறை எவ்வளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்று நாட்டிலே பிரச்னைகள் ஏற்படக் கூடிய நேரத்தில், பிரச்னைகளின் தாரதம்மியத்தை வைத்துப் பார்க்காது அதற்குப் பதிலாக யாரோ தூண்டிவிடுகிறார்கள் என்ற சந்தேகத்தில் பிரச்னைகளை அணுகும்போது மக்களுக்கு அதனால் மிகப் பெரிய பாதகம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் இன்று ஒவ்வொருவராக, தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள் என்று போராடும்போது, கடைசியாக வக்கீல்கள் போராடும்போதும், தூண்டிவிடுகிறார்கள், தூண்டிவிடுகிறார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. வக்கீல்கள் போராட்டத்தின்போது, நீங்கள் போராடுகிறீர்கள், நீங்கள் சங்கம் வைத்திருக்கிறீர்கள், போலீஸ் காரர்களும் தங்களுக்கு என்று ஒரு சங்கம் வைத்துக்கொண்டு உங்களுக்கு எதிராகப் போராடினால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள்.

[திரு. சோ. அழகர்சாமி] [1979 அக்டோபர் 30

அவர்கள் சங்கம் வைத்ததற்குப் பின்னால், இன்று போலீஸ் காரர்களின் போராட்டம் என்ன நிலையில் இருக்கிறது என்பதை சரியாகப் பார்க்காமல், யார் பிரச்னைக்கு யார் போராடுவது என்று பார்க்காமல், யாரோ தூண்டிவிடுகிறார்கள் என்று சொல்லி மேலும், மேலும் போராடக்கூடிய தொழிலாளர்களானாலும் சரி அல்லது விவசாயிகளானாலும் சரி அல்லது யாராகயிருந்தாலும் சரி அவர்களை அடக்கக்கூடிய ஒரு மோசமான நடவடிக்கையை இந்த அரசு கடைப்பிடிக்கிறது என்ற காரணத்திற்காகத்தான் இந்தக் கண்டத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து பல பிரச்னைகள். எந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், தொழிலாளர்கள் போராட்டம் என்றால் மக்கள் பார்த்துக் கொள் வார்கள். ஆசிரியர்கள் போராட்டம் என்றால் வெண்படை பார்த்துக் கொள்வார்கள் என்றெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இன்று எங்கேயாவது ஒரு ஸ்ட்ரைக் நடக்கிறது என்றால், வேலை இல்லாதிருக்கிற படித்தவர்களை வைத்துக் கொண்டு அந்த ஸ்ட்ரைக்கை உடைக்க அவர்கள் பயன் படுத்தப்படுவார்கள் என்று சொல்கிறார்கள். போலீஸ்காரர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்றால் நானும் உண்ணா விரதம் இருந்தால் என்னவாகும் என்று உண்ணாவிரதம் இருக்க முதல் அமைச்சர் அவர்கள் தயாராக இருப்பது மாதிரி சொல்கிறார்கள். இந்த அரசின் அணுகுமுறை உழைக்கிற மக்க ளின் நலன்களுக்கு விரோதமாக இருக்கிறது என்று சொல்லும் போது, அந்தப் பிரச்னையில் நியாயத் தன்மையை உணர்வதற்கு பதிலாக யாரோ தூண்டிவிடுகிறார்கள் என்று சொல்வதைப் பார்க்கும்போது போலீஸ்காரர்களை நம்பாத நிலையில் அவர் களுக்கு உங்கள் மீது நம்பிக்கை இல்லாத நிலை ஏற்பட்டு இன்று மாநிலம் முழுவதும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. போலீஸார் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் வைத்துக் கொள்வதில் உங்களுக்கு என்ன கஷ்டம் வந்திருக்கிறது? அவர்களை யாரோ தூண்டிவிடுகிறார்கள் என்று சொன்னால் முதல் அமைச்சர் அவர்களுக்கு செல்வாக்கு இல்லையா? விவசாயிகள் போராட்ட மானாலும் சரி அல்லது மாணவர்கள் போராட்டமானாலும் சரி அல்லது போலீஸ்காரர்கள் போராட்டமானாலும் சரி யாரோ தூண்டி விடுகிறார்கள், தூண்டி விடுகிறார்கள் என்று சொல்வது அவ்வளவு நல்லதல்ல. தொழிலாளர்கள் பிரச்சினை கள் பற்றி திரு. அம்பிகாபதி அவர்கள் பேசும்போது விவரமாகச் சொல்வார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேஷசாயி பேப்பர் மில்ஸ் பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. சேலம் மார்னிஸ்டை தொழிலை எடுத்தீர்கள். அந்த முதலாளிகளின், நிர்வாகத்தின் கோரிக்கைகளை நிறை வேற்றியிருக்கிறீர்களே தவிர அங்குள்ள தொழிலாளர்களின் முன்னால் சர்வீஸையும் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்களா? அடுத்தபடியாக, தொழிலாளிகளுக்கு எதிராக சட்டம் போடு கிறீர்கள்.

1979 அக்டோபர் 30] [திரு. சோ. அழகர்சாமி]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

கீழத் தஞ்சையில் உள்ள கூலிச் சட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். செப்டம்பர் 30-ம் தேதி வரை ரூ. 7.20 அதற்குப் பிறகு ரூ. 6.60, முதல் நாள் ஒரு சம்பளம், மறுநாள் வேறு ஒரு சம்பளமா? மற்ற மாவட்டங்களுக்கு ஒரு கூலிச் சட்டம் இருக்கிறது. அதை அமுல் படுத்த ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. சட்டங்கள் போடுகிறோமே தவிர அவற்றை அமல்படுத்த ஏற்பாடுகள் கிடையாது. மாணவிகள் போராட்டத்தை எடுத்துக் கொண்டால், மாணவிகள் எதற்காகப் போராடினார்கள்? எஸ்.ஐ.இ.டி. கல்லூரி மாணவிகள் போராடினார்கள். பின்னர் செல்லம்மாள் கல்லூரி மாணவிகள் போராடிய போது அந்த மாணவிகளை எல்லாம் லாரியில் ஏற்றி போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்கு கொண்டு வந்து வைத்து இந்த மாதிரி கொடுமைப்படுத்துவானேன். இது அவசியமா? ஏன் அவர்களை பிரச்னையை முன்னமேயே உடனடியாக தீர்த்து வைத்திருக்கக் கூடாது? தமிழ்நாட்டில் புதுப் புது வேலைத் திட்டங்கள் வரும் என்று பட்ஜெட் கூட்டத்தில் சொன்னார்கள். இப்போது இருக்கிற வேலையே போய் விடுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். சர்வீஸ் கமிஷன் ஆபீஸில் 1-ம் தேதியிலிருந்து, திடீரென்று எங்களை வீட்டுக்குப் போகச் சொல்லக் கூடிய நிலை இருக்கிறது என்று எம்.எல்.ஏ.-க்கள் ஆபீஸ் முன் படை எடுக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்களிடமும் அணுகிச் சொல்லப்பட்டிருக்கிறது. திரு. அம்பிகாபதி அவர்களும் சென்று உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். வேலை தேடிக் கொடுக்கக் கூடிய அலுவலகத்தில் நூறு பேர்கள் 1-ம் தேதியிலிருந்து வேலையிலிருந்து நீக்கப்படுவார்களோ என்ற பயத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். வீட்டுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். 1977-ல் உண்ணாவிரதம் நடத்தினார்கள், டென்டல் ஹைஜீனிக்ஸ். இதைப்பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் முன்னால் எதிர்கட்சித் தலைவர்களுக்கு சொன்னார்கள். 1965-லிருந்து டிரெய்னிங் பெற்றவர்கள் 55 பேர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் ஸ்டைபன்ட் பெற்று டிரெய்னிங் பெற்றவர்கள். இவர்களில் பத்து பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது. மீதியுள்ளவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. இதில் பெண்களும் இருக்கிறார்கள். அன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம் இருந்த நேரத்தில், வருடா வருடம் 20 பேர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. 1977-ல் பத்து பேர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் உதவித் தொகையைப் பெற்று படித்தவர்கள். ஒரு வருடத்திற்கு ஆறு பேர்கள்தான் பயின்று வருகிறார்கள். நம்மிடம் பெரிய பல் மருத்துவமனை இருக்கிறது. அங்கெல்லாம் தேவைப்படும்

[திரு. சோ. அழகர்சாமி] [1979 அக்டோபர் 30

ஆட்களே கிடையாது. இவர்களுக்கு அங்கே வேலை கொடுக்க லாம். முன்னால் வேலை கொடுக்கப்படும் என்று சொல்லப் பட்டது நிறைவேற்றப்படவில்லை. இப்படி சொல்லுகின்ற, வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவது கிடையாது.

அங்கங்கே வகுப்புக் கலவரம் நடக்கிறது, இதையெல்லாம் ஏன் முன்கூட்டியே அறிந்து தடுத்து நிறுத்தக்கூடாது? பாலக் கோடு என்கின்ற இடத்தில் இந்தக் கலவரம் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் அங்கே போயிருந்தேன். முன் னாலேயே அங்குள்ள நிலவரத்தை அரசு நன்றாக தெரிந்திருக் கிறது. அங்கு சீரான நடவடிக்கையை முன்னாலேயே எடுக்காத காரணத்தால் மைனாரிட்டிகளுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது, இதை இல்லையென்று யாராவது மறுக்க முடியுமா?

அதேபோல்தான் ஊஞ்சணையில் ஜாதிச் சண்டை—அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அங்கே ஏன் முன்னாலேயே நடவடிக்கை எடுக்கவில்லை? முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு ஏற்படவில்லை. கலவரம் நடை பெற்ற பின்னால், அதை அடக்கு வது, தாக்குதலை நடத்துவது போன்ற மோசமான நடவடிக்கை களை எடுத்துக் கொள்வது என்பதைத்தான் இந்த அரசு கடை பிடித்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரி, அரிசனங்களுக்கு ஏற்படுகின்ற கொடுமை, பட்டுக்கோட்டை நகரத்தில் இரண்டாவது வார்டில் 100 ஆண்டு காலமாக வாழ்ந்துக் கொண்டிருப்பவர்கள், 100 வய துள்ள கிழவர் அங்கே குடியிருக்கிறார், 75 வயது 80 வயது உள்ளவர்கள் இருக்கிறார்கள், அவர்களைக் கேட்டால், இரண்டு மூன்று தலைமுறையாக அங்கேதான் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். 19 குடும்பங்கள் பூந்தோட்டம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அங்கு இனாம்தார் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது, இவர்கள் இருக்கின்ற இடங்கள், இப்போது வீட்டுமனைக்காக அதிகமான விலைக்குப் போகிறது. இதன் காரணமாக போலீஸ் பாதுகாப்பையும் பெற்று, இந்தப் பிரச்னை கோர்ட்டில் இருந்து கொண்டிருக்கும் நேரத்தில், இந்த 19 குடும்பங்களை வெளியேற்றி விட்டிருக்கிறார்கள், இன்றைக்கு அந்த 19 குடும்பங்களும் நடுத் தெருவில் நிற்கின்றது. இது பற்றிய போட்டோக்கள் இருக்கின்றன. அவைகளை சபா நாயகர் அவர்களிடம் கொடுக்கிறேன். 100 ஜனங்கள் இன்றைக்கு நடுத் தெருவில் நிற்கிறார்கள், அதை தடுத்து நிறுத்த எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கேயுள்ள இனாம் தார்கள் மிகவும் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சாதகமாக—ஏழைகளை பாதுகாப்பதற்கு நட

1979 அக்டோபர் 30] [திரு. சோ. அழகர்சாமி]

வடிக்கை எடுப்பதற்குப் பதிலாக—300 ஆட்கள் அங்கே பகல் 9 மணிக்கு பட்டுக்கோட்டையில் இந்தப் பகுதிக்கு சென்று இந்த 300 பேர்களும் சேர்ந்து அந்த பூந்தோட்டத்தை எல்லாம் அழித்து—ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டத்தை உண்டு பண்ணி பூந்தோட்டத்தை நாசமாக்கியிருக்கிறார்கள். இதை தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

அதே மாதிரி தான், இன்றைக்கு தொழிற் கல்வி நிலையங் களில் எல்லாம் ஆசிரியர்கள் ஸ்ட்ரைக், நடைபெற வேண்டிய பரீட்சைகள் எல்லாம் நடைபெறவில்லை. கடந்த 23, 24, 25-ம் தேதி நடைபெற வேண்டிய பரீட்சை நடைபெறவில்லை. சில இடங்களில் ஆசிரியர்கள் இல்லாமலேயே தேர்வுகள் நடை பெற்றிருக்கின்றன. இதை தவிர்க்கின்ற முறையில், இவர்களுக்கு என்ன குறை, யூனியன் மூலமாக என்ன சொல்லுகிறார்கள் என்பதை கேட்டிருக்கலாம். இவர்கள் எல்லாம் சம்பளம் அதிக மாக கேட்பது எப்படி நியாயம் என்று கேட்கிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடுவது எப்படி நியாயமாகும், எப்படி இவர்கள் கோரிக் கைகளை வைப்பது நியாயமாகும் என்று கேட்கிறார்கள். அப்படிப் பார்த்தால் ஒன்றுமே நியாயம் இல்லைதான், இந்தச் சட்டசபை கூடுவதே நியாயமில்லைதான், அமைச்சரவை, இருப்பதே நியாயமில்லைதான், இப்படிப் பார்த்துக் கொண்டு போனால் பழைய வெள்ளைக்காரன் காலத்திற்குப் போக வேண்டியது தான்.

இது மட்டுமல்ல, ஒரு போலீஸ் அதிகாரி வீட்டில் அடிமை களாக வேலை செய்வதற்கு 10 போலீஸ்காரர்களை நியமிக் கிறார்கள். பத்து பேர் வேலை செய்ய வேண்டும். அவர்கள் வீட்டில் பெண்கள் சொல்லுகின்ற வேலையெல்லாம் கூட செய்ய வேண்டிய நிலை. இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று தான் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடிமை வேலையிலிருந்து மீளுவதற்கு ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டு கேட்கவேண்டும் என்ற உணர்வு வருவதில் என்ன தப்பு இருக்கிறது? சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என்றால் அதை அங்கீகரிப்பதில் என்ன கஷ்டம்? மெஜாரிட்டி யாக இருக்கின்றவர்கள் எங்கள் சங்கத்தில் தான் இருக்கிறார் கள், ஆகவே, அங்கீகாரம் வேண்டும் என்று கேட்டால், அதை அங்கீகாரம் செய்வதில் என்ன கஷ்டம்? இதற்காக போராட வேண்டாம், உங்கள் கோரிக்கைகளை சொல்லுங்கள், நிறை வேற்றுகிறோம் என்று அவர்களிடம் சொல்லுங்கள், அதற்குப் பதிலாக போராடுகின்றவர்களை எல்லாம் உள்ளே போட்டு அடைத்து, திருநெல்வேலியில் கைது செய்து மெட்ராஸ்-க்கு கொண்டு வருவது, மறுபடியும் மெட்ராஸிலிருந்து வேலூருக்குக்

[திரு. சோ. அழகர்சாமி] [1979 அக்டோபர் 30

கொண்டு செல்வது, வெளியிலே என்ன பேசிக் கொள்கிறார்கள், நயினார்தாஸ் அடிக்கப்பட்டு குற்றுயிரும் கொலை உயிருமாகத் தான் இருப்பார் என்று பேசிக் கொள்கிறார்கள், ஏன் இவர்களை விடுவதற்கு தைரியமில்லை, பெரிய கொலைக் குற்றம் செய்தவர் களைக் கூட வெளியே விட்டிருக்கிறார்கள். இங்கே என்னவென் றால், வக்கீல் கூட சென்று பார்ப்பதற்கு அனுமதி கொடுக்க வில்லை. கொலைக் கேஸில் மாட்டிக் கொண்டவர்கள் கூட உள்ளே அவர்களது வக்கீல் சென்று பார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. வக்கீல் உள்ளே சென்று அவர்களைப் பார்த்து எப்படி உங்களுக்காக வாதாட வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று வக்கீல் சென்று கேட்பதற்கு, பார்ப்பதற்கு ஏன் அனுமதி அளிக்கக் கூடாது? பாளை சண்முகம் அவர்கள் நயினார்தாஸை போய்ப் பார்ப்பதற்கு அனுமதி கேட்டபோது அனுமதி கொடுக்கப்படவில்லை. அப்படியானால் அவர் எப்படி யிருப்பார் என்று எப்படி தெரியும்?

[முற்பகல் 11—50]

அது மட்டுமல்ல. புதுக்கோட்டையிலே உள்ள ஒரு பெரிய போலீஸ் அதிகாரியே, அங்குள்ள போலீஸ்காரர்களை அடித்திருக் கிறார். அப்படிப்பட்ட ஒரு மோசமான தாக்குதல், மோசமான ஒரு நிலைமை அங்கே ஏற்பட்டது. இது தேவை தானா இப்போது பிரச்னை தீர்ந்துபோய், அங்கே ஸீடியரைக் நிறுத்தப்பட்டிருக் கிறது. இன்றைக்கு அங்கே போலீஸ்காரர்களை வைத்திருக் கிறீர்கள். அவர்களை வைத்துக்கொண்டு தான் ஆட்சி நடத்தப் போகிறீர்கள். எனவே, இதிலே உங்களுடைய அணுகுமுறை, மோசமானது என்ற வகையிலே தான் இந்தக் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, உங்கள் கொள்கை பூராவும் மாற்றப்பட வேண்டும்.

அதே மாதிரியாக, நீங்கள் கொடுக்கக்கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூடிய காரியங்களைச் செய்ய வேண்டும். பரமக் குடியிலே பால நகர் என்ற ஒரு குடிசைப பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே சாதாரண ஏழை மக்கள் வாழ்கின்றார்கள். அங்கே தண்ணீர் தேங்கி நிற்கின்றது, ஆளும் கட்சியைச் சார்ந்த வர்களும் முயற்சி செய்து வருகின்றார்கள். அந்த இடத்தை தண்ணீர் தேங்காமல் மேடிட்டு தரும்படி பல தடவைகள் சொன் னேன். அப்படிச் சொல்லும்போது, முதலமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு இது குறித்து ஆவன செய்வதாகக் கூறினார்கள். அவர்கள் சொல்லி 6 மாதங்களுக்கு மேலாகின்றது. இன்னும் அங்கே ஒருவித வேலையும் நடக்கவில்லை. முதலமைச் சர் அவர்கள் கொடுத்து வாக்குறுதிக்கே இப்படி என்றால், மற்ற அமைச்சர்கள் கொடுக்கக்கூடிய வாக்குறுதிகள் எப்படி

1979 அக்டோபர் 30] [திரு. சோ. அழகர்சாமி]

நிறைவேற்றப்படும். இப்படி இவர்கள் கொடுக்கும் வாக்குறுதிகள் எதுவும் உடனடியாக நிறைவேற்றப்படுவதில்லை. கொடுக்கப்படும் வாக்குறுதிகளை செயலாக்குவதற்கு, அமுலாக்குவதற்கு எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. அதனால், தான் இந்த வேலை நிறுத்தம், ஸ்டிரைக் எல்லாம் ஏற்படுகிறது.

ஸ்டிரைக் செய்தால், அதைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறார்களே தவிர, தொழிலாளர்கள் ஸ்டிரைக்கை சும்மா பண்ணுவார்களா என்பதைப் பற்றி யோசிப்பதில்லை. விலைவாசிகள் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகின்றது. பருப்பின் விலை 6 ரூபாய், 7 ரூபாய் என்று விலை ஏறிக் கொண்டே போகின்றது. இதைப் பற்றி நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். விளைகின்றபோது வாங்கி வைத்திருந்து, விலை ஏற்றத்தின் போது விநியோகியுங்கள் என்று சொல்கிறேன்; அதைப் பற்றி கவனிப்பதில்லை. விவசாயியே விலையேற்றத்தால் பாதிக்கப்பட்டு, நான்கு மடங்கு கொடுத்து வாங்கவேண்டிய மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இதைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்றைக்கு விலைவாசி ஏற்றத்தால் போராட்டம் நடத்தப் படுகிறது. போராட்டம் செய்பவர்களை நீங்கள் போலீஸ்காரர்களைக் கொண்டு அடக்குகிறீர்கள். ஆனால், இன்றைக்கு, போலீஸ்காரர்களே போராட்டம் செய்கின்றார்கள். அவர்களை நீங்கள் ராணுவத்தைக் கொண்டு அடக்குகிறீர்கள். இந்த நிலைமைக்குக் காரணம், உங்கள் அரசாங்கத்தின் தவறான கொள்கைதான். இதைக் கண்டிப்பதற்காகத் தான் இந்த கண்டன தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இன்றைக்கு பஞ்சாயத்தைக் கலைத்திருக்கிறீர்கள். பஞ்சாயத்துக்கள் இருந்தால், மக்கள் தங்கள் குறைகளை அங்குள்ள பிரசிடெண்டுகளிடம் சென்று சொல்லலாம். சாதாரண குறைகளை ஒரு ஊரிலே லைட் வசதியில்லை. சாக்கடை வசதியில்லை என்று சொன்னால், அவர்கள் யாரிடம் போய் சொல்வது? அந்த ஸ்பெஷல் ஆபீசர்களிடம் போய் சொல்ல வேண்டும். அந்த ஸ்பெஷல் ஆபீசர் 48 பஞ்சாயத்துக்களுக்குத் தலைவராக இருக்கிறார். அவர் எப்படி எல்லா பஞ்சாயத்துகளையும் பார்க்க முடியும்? எனவே, அங்குள்ள பிரச்னைகளை அவரால் பார்க்க முடிவதில்லை. முன்பெல்லாம், மக்கள் சொல்லும் குறைகளை, அங்குள்ள பிரசிடெண்ட் அங்குள்ள கமிஷனரிடம் எடுத்துச் சொல்வார்கள். ஆனால், இப்பொது யூனியன்கள் கலைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், பஞ்சாயத்துக்களும் கலைக்கப்பட்டு விட்டன. அந்த அதிகாரங்களை எல்லாம்

[திரு. சோ. அழகர்சாமி] [1979 அக்டோபர் 30

ஸ்பெஷல் ஆபீசர்களிடம் கொடுத்திருக்கிறீர்கள். ஒழுங்காக நடத்துவார்கள் என்று கொடுத்தீர்கள். என்ன நடந்தது? ஒன்றும் நடைபெற வில்லை.

இதேமாதிரி, கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களின் தேர்தல் நடத்தப்பெறவில்லை. அதற்கும் ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறீர்கள். உடனடியாக தலைவர்கள் தேர்தலை நடத்தாவிட்டாலும், ஒரு ஆலோசனை போர்டு அல்லது ஒரு நியமன போர்டு வையுங்கள். அதிலே உங்கள் ஆளும் கட்சியிலே இருப்பவர்களையே போடுங்கள். அப்படி நீங்கள் போடக் கூடிய அந்த நியமன போர்டாரே அந்தச் சங்கங்களை நடத்தட்டும். இதனால் மக்களுக்கு ஒரு வசதி ஏற்படும். நஷ்டத்தையும் தவிர்க்கலாம். நான் ஒரு சங்கத்திற்கு தலைவராக இருந்தேன். 10, 15 லட்சம் ரூபாய் லாபம் இருந்தது. இப்போது அங்கே அதற்கு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். இன்று அது நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. சம்பளம் கொடுப்பதற்குக் கூட பணம் இல்லை. இதிலே நஷ்டம் ஏற்பட்டால், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை. வாங்கினார், விற்றார், இதிலே நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லிவிடுகிறீர்கள். ஆனால் பிரசிடெண்ட் மீது என்றால், சர் சார்ஜ் போடுகிறீர்கள். இதனால் இன்றைக்கு ஜனநாயகத்திற்கு எவ்வளவு ஆபத்து வந்திருக்கிறது. ஜனநாயக முறையில் நடத்தினால் தான் மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல முடிகிறது. மக்கள் அவர்களைக் கண்டிக்க முடிகிறது. நீங்கள் அதற்குப் பதிலாக ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டிருக்கிறீர்கள். பஞ்சாயத்துத் தேர்தலை, சொசைடிகளின் தேர்தலை ஏன் நடத்தக் கூடாது? தேர்தல் நடத்தாமல் இருப்பது சரிதானா ? அது கண்டிக்கத்தக்கது. இதைத் தான் நாங்கள் கண்டிக்கின்றோம். பஞ்சாயத்தைக் கலைத்தது மிகவும் மோசம். அதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம்.

அதே மாதிரியாக, முன்னாலே டிஸ்டிரிக்ட் போர்டிலே பணியாற்றியவர்கள் கவர்ன்மெண்ட் அதிகாரிகளாக ஏற்றுக்கொண்டீர்கள். அவர்களை ரெகுலரைஸ் பண்ணினீர்கள். அவர்களில் சிலர் ரிடையரும் ஆகிவிட்டார்கள். அவர்களுக்கு 2, 3 வருஷங்களாக பென்ஷன் கிடையாது. அதைக் கொடுப்பதற்கான துரித நடவடிக்கை இந்த அரசாங்கத்திலே எடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் ? அதிகாரிகள் வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்த வில்லை.

ஆசிரியர் போராட்டம் தொடர்ந்து ஐந்து ஆறு நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது.....

1979 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தச் சபை கலைவதற்கு முன்னால் அதுபற்றி அறிவிக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : போராட்டத்தை அவர்கள் நிறுத்தி மாணவர்கள் படிக்கவும் ஆசிரியர்கள் கோரிக்கை நிறைவேறவும் முயற்சிகள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கடைசியாக விவசாயிகள் பிரச்சினை. எங்கு பார்த்தாலும் போராட்டம். விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் சலுகை என்று அறிவித்தீர்கள். செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் பழைய கடனைச் செலுத்துபவர்களுக்குத்தான் இந்தச் சலுகைகள் என்று பிறகு சொன்னீர்கள். விவசாயி வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று இந்த மன்றத்திலேயே பல முறை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அந்தக் கடன்கள் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அவன் எப்படி திடீரென்று அவ்வளவு கடனையும் திருப்பிச் செலுத்த முடியும் ? 1976-ல் அவசர காலத்தில் மத்திய சர்க்கார் மூலம் 2,400 ரூபாய்க்கு கீழ் வருமானம் பெறக்கூடிய யாராக இருந்தாலும் வாங்கிய கடனைக் கட்ட வேண்டாம். இரண்டு ஹெக்டேர் நிலம்—ஐந்து ஏக்கர் புஞ்சை அல்லது 2½ ஏக்கர் நஞ்சை உள்ளவர்கள் வாங்கிய கடனைக் கட்ட வேண்டாம் என்று சொல்லப்பட்டது. பிரைவேட் லோன்சை வசூல் பண்ணக்கூடாது என்று சட்டம் இருக்கும் போது தாசில்தார் அவ்வாறு வசூலிக்கக்கூடாது என்று கொடுக்கும் மனுக்களைத் தள்ளுகிறாரே தவிர, கடனைத் தள்ளுவதில்லை. அப்படியானால், அந்தச் சட்டத்தை ஏன் வைத்திருக்கிறீர்கள் ?

அதற்குப் பிறகு ஒரு சட்டம் கடன் கொடுத்தவர்களுக்கு நிவாரணம் என்று வருகிறது. 100 ரூபாய் வாங்கியிருந்தால் 150 ரூபாய் ; 200 ரூபாய் வாங்கியிருந்தால் 250 ரூபாய். 1,000 ரூபாய் வாங்கியிருந்தால் 1,500 ரூபாய் என்று திருப்பிக் கொடுக்க வேண்டும். கடன் கொடுத்த தனியார்கள் நிவாரணம் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். இப்போது அந்தத் தனியார்கள் கடன் பத்திரங்களை எடுத்துக் கொண்டு, நோட்டை எடுத்துக் கொண்டு வக்கீல் வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் கொடுத்தவன் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்ததாக எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறான். அவன் ஏற்கனவே ஆயிரம் ரூபாய் கட்டியிருப்பான். மீதி 500 ரூபாய் கட்டவேண்டியதற்கு இன்று விவசாயிகள் இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் வரை கட்ட வேண்டியிருக்கிறது. இதுவரை நிறுத்தி வைத்த கடனை திருப்பிக் கட்ட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் விவசாயி எப்படிக் கட்ட முடியும் ? தனிப்பட்டவர்

[திரு. சோ. அழகர்சாமி] [1979 அக்டோபர் 30

கள் கூடனைத் தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

கூட்டுறவுக் கடன் பாக்கிக்கு ஜப்தி இருக்காது என்றார்கள். ஆனால் தொடர்ந்து ஜப்தி அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. நேற்று கூட முகவை மாவட்டத்தில் வடிவேல் என்பவர் வீட்டில் ஆள் இல்லாத நேரத்தில் பாத்திரங்களை ஜப்தி செய்திருக்கிறார்கள். வீராசாமி, பரணி கிராமம், பரமக்குடி தாலுகா, ராமசாமி, தேரடி கிராமம், செல்லையா, திருப்பத்தூர் கிராமம், இங்கெல்லாம் தாசில்தாரே ஜப்தி செய்கிறார். பல ஊர்களில் தொடர்ந்து ஜப்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என்னுடைய ஜில்லாவில் 300, அல்லது 350 பேர் குத்தகை கட்டுகிறவர்கள் கட்ட முடியவில்லை.

(நண்பகல் 12-00.)

குத்தகை பாக்கியைக் கொடுக்க முடியவில்லை என்றால் வரியை எப்படிக் கொடுப்பார்கள்? ஜப்தி செய்திருக்கிறார்கள். ஆறுமுகம் என்பவர், ஆத்தூரிலே இருக்கிறார். 1979, அக்டோபர், 12-ம் நாள் அவர் வீட்டிற்கு ஜப்தி செய்யப்போய் இருக்கிறார்கள்., வீட்டிலே பொம்பளையாள் தான் இருந்து இருக்கிறார்கள், ஆனால் ஆறுமுகம் என்பவர் சைக்கிளிலே போகும்போது ரோட்டிலேயே ஜப்தி செய்து சைக்கிளை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

செங்கை மாவட்டத்திலே தண்டாரம்பட்டு என்ற இடத்திலே ஒரு வி.எம். வீட்டிலேயே புகுந்து ஜப்தி செய்திருக்கிறார்கள். பண்டபாத்திரங்களை தூக்கிக்கொண்டு வந்தாகிவிட்டது. புதிய சட்டங்களை தூக்கி எறிந்துவிட்டார்கள்,. 1976 ஆம் ஆண்டிலே போடப்பட்ட 36-வது சட்டத்தை வைத்துக்கொண்டு ஊர் ஊருக்கு போய் ஏலம் போடுகிறார்கள். பண்ட பாத்திரங்களை தூக்கிச் செல்கிறார்கள். இந்த முறையிலே வசூல் செய்கிறார்கள். ஆகவே ஜப்தி மட்டுமல்ல, ஏலம் போடுவதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்.

நெல்லுக்கு விலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தஞ்சாவூரிலே 300 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் அங்கே

1979 அக்டோபர் 30] [திரு. சோ. அழகர்சாமி]

எல்லா நெல்லையும் அவர்கள் வாங்குவதில்லை. ஏ.டி.டி. 27 கொண்டுவந்தால்தான் வாங்குவோம், நெய் இச்சடி, அன்னபூரணா கொண்டு வந்தால் வாங்கமாட்டோம் என்று சொல்கிறார்கள், எங்கள் விவசாயச் சங்கத்தின் தலைவரே கொண்டுபோனாலும் வாங்கமாட்டோம் என்கிறார்கள். நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சரே சொல்கிறார். ஆனால் 90 ரூபாய் தான் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எப்படி அவர்களுக்குக் கட்டுபடியாகும் ? சட்டசபையிலே எல்லாம் சொல்வதோடு சரி, அவைகள் நிறைவேற்றப்படுவதில்லை. அதனால்தான் இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். எந்த நெல் கொண்டுவந்தாலும் வாங்குவதற்கான ஏற்பாடுகளை அந்த சென்டர்களில் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும்.

இந்த நேரத்திலே தனியார் கடன்கள், கூட்டுறவுக் கடன்கள், சர்க்கார் கடன்கள் வசூலிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். விவசாயி உரம் எப்படி வாங்கப்போகிறோம் என்று அலைந்து கொண்டு இருக்கிறான்., இந்த நிலையில் புதுக் கடன்கள்கூட இல்லை, பழைய கடன்களை வாங்குவதற்காக நடவடிக்கை எடுக்கலாமா ? நடவுகாலத்திலே விதை நெல்லுக்காக அவன் அலைந்துகொண்டிருக்கிறபோது ஜப்தி செய்கிறார்கள் என்றால் அதன் காரணத்தினால் தான் அவர்கள் மத்தியிலே இவ்வளவு கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை முதல்வர் தெரிந்து கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறோம்.

பருத்தி 400 ரூபாயாக இருந்தது. நூல் 126 ரூபாயாக இருந்து 30 சதவீதம் ஏறியிருக்கிறது. ஆனால் பருத்தி 250 தான் ஆகியிருக்கிறது ஏறக்குறைய பாதிக்கு வந்துவிட்டது. இப்படி இருப்பதால் அவர்கள் தலையிலே கையை வைத்துக்கொண்டு இருக்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. காட்டன் கார்ப்பரேஷன் மூலமாக செய்வோம் என்றார்கள்., ஆனால் அதுவும் சரியாகச் செய்யவில்லை. வியாபாரிகள் தான் வாங்கியிருக்கிறார்கள். அசெம்பிளியிலே நாங்கள் பேசுகிறோம், அது அப்படியே ரிக்கார்டிலேதான் இருக்கும்போல் இருக்கிறது. மேல்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. துரிதமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என்பதைக் கண்டிக்கிற முறையிலே கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். அந்த தவறான கொள்கைகளின் காரணமாக மக்களுக்கு விரோதமான கொள்கைகளின் காரணமாக சகல, பிரிவினருக்கும் விரோதமான கொள்கைகளின் காரணமாகத் தான் அந்தக் கொள்கைகளைக் கண்டிக்கின்ற இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1979 அக்டோபர் 30

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஏற்கெனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தோழர் திரு உமாநாத் அவர்களும் திரு ரமணி அவர்களும் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்துக்களோடு மேற்கொண்டும் இன்றைய அரசாங்கத்தினுடைய கொள்கைகள் சம்பந்தமாகவும் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அம்சங்களைக் குறித்தும் சில பிரச்சினைகளையும் நான் கூறலாம் என்று கருதுகிறேன்.

இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் ஜனநாயக சக்திகளை ஒன்றுபடுத்தக்கூடிய ஒரு காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்றால் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய அரசாங்கம் தன்னுடைய தொழிலாளர்கள் கொள்கையை ஜனநாயக அடிப்படையில் அமைக்கவேண்டுமென்பது அவசியம் என்பதை நான் மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். ஒரு எண்ணம் இருக்கிறது., தொழிலாளர்களுடைய உரிமைகளை வற்புறுத்தினால் முதலாளிகள் முதலீடு செய்ய வரமாட்டார்கள் என்று. தமிழ் நாட்டிலேயும் மற்ற இந்தியாவிலே உள்ள மாநிலங்களிலேயும் பல பேர்களும் சொல்லிக்கொண்டிருக்கிற வாதம். அப்படி என்றால் முதலாளிகள் முதலீடு செய்யவேண்டுமென்றால் அவர்களை பாராட்டி, சீராட்டி தொழிலாளர்களுக்கு உரிமைகள் கொடுக்காமல் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் அதைமீறி தொழிலாளர்களை நசுக்கினாலும் அதையும் சகித்துக்கொண்டு இப்படியெல்லாம் செய்தால் அவர்கள் மனமுவந்து முதலீடு செய்ய முன்வருவார்கள் என்றால் அந்த முறையிலே தொழில் வளர்ச்சி ஏற்படும் என்று சொல்லமுடியாது. அந்த முறையிலே ஏற்படும் தொழில் வளர்ச்சி என்பது இந்த நாட்டிலே ஜனநாயகத்தை வளர்க்க உதவாது. ஆகவேதான் நாங்கள் கூறுகிறோம். இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட தவறான ஒரு சித்தாந்தத்தில் செல்வாக்கிலே இருக்கக்கூடாது. கடந்த காலத்திலே ஏற்பட்ட அரசாங்கங்களுக்கும் இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டிருக்கிறது என்பதால் அவர்கள் தைரியமாக இன்றைக்குச் செல்ல வேண்டும். முதலாளிகள் தொழில் முதலீடு செய்வதற்காக வரும் நேரத்தில், எப்படி இயந்திரங்களையும், எப்படித் தண்ணீர் சப்ளையையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதைப்போல் அந்த இயந்திரங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், சிப்பந்திகள் ஆகிய அவர்களின் நியாய உரிமைகளை அவர்கள் மதித்தே ஆக வேண்டுமென்ற கொள்கையை ஏற்படுத்தினால்தான், இன்றைக்கு முதலாளித்துவம் வளர்ந்து வரும் இந்த நாட்டிலே உழைப்பாளி வர்க்க நலனுக்குப் பாதுகாப்பாக இருக்கும். இதை மீறி எத்த முதலாளியின் இரும்புக்கரமாவது தொழிலாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டால் தான் அப்படிப்பட்ட இடத்திலேதான் நாங்கள் வந்து முதலீடு

1979 அக்டோபர் 30] [திரு. என். சங்கரய்யா]

செய்வோம் என்றால் அப்படிப்பட்ட முதலாளி இன்றைக்குத் தமிழ் நாட்டிலே தேவையில்லை ; அப்படிப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி தேவையில்லை.

மற்றொன்றைக் கூற விரும்புகிறேன். முதலாளித்துவ வளர்ச்சி என்று கூறும் நேரத்திலே தனிப்பட்ட முதலாளிகள் அந்தத் தொழிலில் போடும் மூலதனம் குறைவு ; மத்திய சர்க்காராலும், மாநில சர்க்காராலும் நடத்தப்படும் பைனான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ், தொழில்களுக்குப் பண உதவி செய்யும் நிறுவனத்திடமிருந்து ஏராளமான கடனைப் பெற்று அவர்கள் இந்தத் தொழிலை நடத்துகிறார்கள். இதற்குப் பெயர் ''கேப்டன்ஸ் ஆஃப் இன்டஸ்ட்ரி'', அந்தத் தொழிலிலே தலைவர்கள் அவர்கள். அவர்கள் 'நான்ப்ளேயிங் கேப்டன்ஸ்'', கிரவுண்டில் விளையாடாத கேப்டன்ஸ். அவர்கள் என்ன செய்கிறார்கள் ? உழைக்கின்ற தொழிலாளர்களின் பெயரால் இந்தத் தொழிலை உண்டாக்குவது, அதில் இலட்சக்கணக்கானமக்கள் தங்கள் இரத்தத்தை வியர்வையாக மாற்றி பொருள்களை உற்பத்தி செய்தால் அந்த உழைக்கின்ற தொழிலாளர்களுக்குப் பாராட்டு இல்லை. ஆனால் யாரோ ஒருவரைத் தொழில் முனைவர் என்று சொன்னால் அது நாட்டில் உண்மையை மறைப்பதாகும். ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம், அரசாங்கத்தின் தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலன் குறித்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் முறையில்தான் உண்டாகும்.

அதுமட்டுமல்ல, மாநில மத்திய அரசாங்கங்களின் உதவியோடு நடத்தப்படும் பெரிய தொழில்களின் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ளலாம். கூட்டுச் சர்க்கார் —ஜாயின்ட் சர்க்கார் என்பது பெரிய மோசடி. ஏராளமான முதலீட்டை மாநில மத்திய சர்க்கார்கள் போட வேண்டும். ஆனால் அதில் தனிப்பட்ட முதலாளி மேனேஜிங் டைரக்டராக பொறுப்பு ஏற்று நடத்துகிறார்கள். அவர் இல்லாவிட்டால் நடத்த முடியாதா ? உண்மையிலேயே அதிக முதலீட்டைப்போட்டு மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் அந்தக் கேந்திரத் தொழிலை ஏற்படுத்தினால் அதை ஜாயின்ட் சர்க்கார் என்ற முறையில் ஏன் எடுத்துகொள்ள வேண்டும் ? அதைப்போலத்தான் சேஷசாயி பேப்பர் மில் ஜாயின்ட் செக்டார். அதிலே இன்றைக்கு அரசாங்கம் மைனாரிட்டராக இருக்கிறார்கள், அரசாங்கத்தின் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட அதன் நிர்வாகத்தை, அதன் கொள்கையைத் தீர்மானிக்க முடியாது என்று சொன்னால் எவ்வளவு தோல்வி மனப்பான்மையோடு இருக்கிறது பார்த்தீர்களா ?

[திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

விலைவாசி எடுத்துக்கொண்டாலும் கடந்த காலத்தில் 60 கோடி ரூபாயை மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் முதலீடு போட்டு இருக்கிறது. ஆனால் இரண்டு கோடி ரூபாய் போட்ட முதலாளி மேனேஜிங் டைரக்டராக இருக்க பத்தாண்டு களுக்குக் கொடுக்கிறோம் என்று எழுதிக்கொடுக்கப்பட்டது. இதுதான் இதில் உள்ள வேடிக்கை. ஆகவே, எதற்காக இதைச் சொல்கிறோம் என்றால் ஜாயின்ட் செக்டார் என்ற மோசடியை நீக்கிவிட்டு மத்திய மாநில அரசாங்கங்கள் அதிக முதலீடு செய் யும் அந்தத் தொழில்களை நாமே ஏற்றுக்கொண்டால் தொழி லாளர்களுக்கு நியாயமான உரிமை கிடைக்கும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கும் உத்தரவாதம் என்ன பாதை அதுதான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு மேற்கு வங்காளத்திலும் அப்படித்தான் சொன்னார்கள். ஜோதிபாசு அவர்கள் முதலமைச்சராக வந்து விட்டார்கள் இடதுசாரி முன்னணி ஆட்சிக்கு வந்துவிட்டது ஆகவே தொழில் செய்ய முதலாளிகள் அங்கே போக மாட்டார் கள், ஓடி விடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன் றைக்கு அப்படி ஓடி விட்டார்களா ? தொழிலாளர் சட்டத்தைக் கறாராக அமலாக்க வேண்டுமென்று சொன்னாலும் அதை ஏற்றுக் கொண்டு அங்கேதான் இருக்கிறார்கள். அந்தத் தொழில்களை எடுத்துக்கொண்டு ஓடி விடவில்லை. ஆகவே தொழிலாளர் களின் நலனுக்காகச் சரியாக, கறாராக இருக்கும் கொள்கையைப் பின்பற்றினால் முதலாளிகள் ஓடி விடுவார்கள் என்று பயப்பட வேண்டியதில்லை, எனவே அவர்களைத் தாஜா செய்கின்ற வகை யில் அதிக சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தில்லை. தொழிலாளர் பிரச்னை வராமல் பார்த்துக்கொள் கிறோம், நீங்கள் வாருங்கள் என்று அவர்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த அரசாங்கத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யோசனையாகத் தெரிவித்துக்கொள்கிறது.

ரமணி கூடச் சொன்னார், குரோம்பேட்டையில் சென்னை குரோம் லெதர் கம்பெனி பற்றி தாகப்பச் செட்டியார்தான் முதலாளி. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவிடமிருந்து பல கோடி ரூபாய்களைத் தொழில் நடத்துவதற்கென்று வாங்கி னார்கள். ஆனால் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அங்கே வேலை நடக்கவில்லை. வேலை நடக்க வில்லை என்றால் நிலைமை என்ன தெரியுமா ? லாக்-அவுட் செய்யவில்லை, லே-ஆஃப் கொடுக்கவில்லை.

[பிற்பகல் 12—10]

அங்கே எத்தனை மான 'ரா மெட்டீரியல்சும்' இருக்காது. முதலாளியும் வரமாட்டார். அவர்களுக்குச் சம்பளமும் கிடை யாது; சென்னைக்குப் பக்கத்திலே 10 மைலுக்குள்ளே இருக்கக்

1979 அக்டோபர் 30] [திரு. என் சங்கரய்யா]

கூடிய இடத்தில் 400 நிரந்தரத் தொழிலாளிகளும் 500 சாதாரணத் தொழிலாளிகளும் 6 மாதகாலமாக பட்டினி கிடக்கிறார்கள். பூந்தமல்லி கோர்ட்டிலே ஒரு வழக்கு போட்டு, 2 மாதகாலத்திற்கு தங்களுடைய சம்பள பாக்கியைக் கொடுப்பதற்காக அந்தத் தொழிற்சாலை முதலாளியினுடைய சொத்துக்களை ஜப்தி செய்து கொடுங்கள் என்ற உத்தரவை வாங்கினார்கள். ஆனால், அது மாவட்ட தலைநகரமான காஞ்சிபுரத்திற்குப்போய் அங்கே பைல்களிலே அடங்கிக்கிடக்கிறது தயவுசெய்து யோசனை செய்து பாருங்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்களை, தேச உடமையாக்கப்பட்ட சென்ட்ரல் பாங்கில் வாங்கி, எதையும் கொடுக்காமல், இப்பொழுது பாங்கின் ஆட்கள் மேற்கொண்டு கடன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். என்ன செய்வது? ஆசியாவிலேயே மிகப் பெரிய ஒரு டானரி, மிகச் சிறந்த டானரி. ஏராளமாக ஏற்றுமதி செய்து, பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சம்பாதிக்கக்கூடிய ஒரு தொழில், திறமை மிக்க தொழிலாளிகளை அவர்கள் வாட்டுகிறார்கள். மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்து, அதை 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' என்ற அந்த அடிப்படையிலோ அல்லது மத்திய சர்க்கார் உதவிகொண்டு மாநில சர்க்கார் ஏற்று நடத்தச் செய்தால் நிச்சயமாக கூறுகிறேன், அந்தத் தொழிலில் ஒரு வருமான அளவு வருகிற வரைக்கும் அந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு ஒத்துழைப்பு அளிக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து, மாநில சர்க்கார் அந்தத் தொழிற்சாலையை நடத்தவேண்டும். அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். தொழில் முனைவர்கள் செல்லப் பிள்ளைகளைப்போல் இன்றைக்கு நடத்தப்படுகிறார்கள். ஏதோ தொழில் முனைவர்களைத் தங்கள் செல்லப் பிள்ளைகளாக நடத்தி, பல கோடிக்கணக்கான ரூபாய்களை தேச உடமையாக்கப்பட்ட பாங்கியிலே வாங்கிக் கொடுத்து, ஆளும் வருவதில்லை, தொழிலாளியும் வருவதில்லை. சிறந்த தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிற்சாலை அடியோடு உற்பத்தி இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. என்ன கொடுமை பாருங்கள்? ஆகவேதான் கூறுகிறேன். இன்றைக்கு இந்தத் தொழிற்சாலை முதலாளிக்கு ஒரு நல்ல படிப்பினை கொடுக்கவேண்டுமென்றால், அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த வேண்டும், அந்தத் தொழிலாளர்களை வாழ்விக்கவேண்டும் இன்றைக்கு இந்தத் தொழில் நடக்கவில்லை, வேறு பல டானரிகள் ஏராளமாக லாபம் சம்பாதிக்கின்றன. தொழிலாளர்கள் சொன்னார்கள், அந்தத் தொழிற்சாலையில் சிறந்த மெஷினரிகள் இருக்கின்றன என்று. குரோம்பேட்டையிலேயுள்ள அந்தத் தொழிற்சாலையிலே உள்ள தொழிலாளர்களுக்கு மூதலமைச்சரவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து உதவி செய்து, அந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

அடுத்தபடியாக, குமரி மாவட்டத்தைப்பற்றி அங்கே உள்ள போலீஸ் அதிகாரிகளுடைய அட்டூழியங்களைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். அங்கே சி.ஐ.டி.யூ. போராடுகிறது. அதற்கு எதிராக அவர்கள் கருதுவது என்னவென்றால், பாவப்பட்ட மக்களுக்காக, சி.ஐ.டி.யூ. போராடுகிறது. முந்திரி உற்பத்தி செய்யக்கூடிய, தொழிலாளர்களுக்காகப் போராடுகிறது. என்ன ஆயிற்று தெரியுமா அங்கே. முன்பெல்லாம், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, போலீஸ் ஸ்டேஷனில் பெண்களை இரவு நேரத்தில் வைத்திருக்கக் கூடாது என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் வைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், முந்திரி தொழிற்சாலைகளிலே நியாயமான ஊதியத்தைக் கேட்டதால், பெண் தொழிலாளிகளை, கொண்டு போய் இரவு இரண்டு மணி வரைக்கும் அவர்களை காவல் நிலையத்தில் வைத்து, அவர்களைத் தாறுமாறாகத் திட்டி, அதைப்பற்றி, தங்களை அவதூறுபடுத்திய, அவமானப்படுத்திய அதிகாரியின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மனு அனுப்பியிருக்கிறார்கள் அவர்கள். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே உள்ள தலைவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், ஏன் இந்த நிலைமை? குமரி மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தை அழிப்பதற்காக அங்கே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள், பெரிய முதலாளிகளோடு, சேர்ந்துகொண்டு, ரப்பர் தோட்ட முதலாளிகளோடு, முந்திரித் தோட்ட முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு திட்டமிட்டு வேலை செய்கிறார்கள் என்றால் அதை விசாரிக்கவேண்டும், தீவிரமாகக் கமிஷன் போட்டு விசாரிக்க வேண்டுமென்று கேட்க நினைத்துக் கொண்டிருக்கும்போது நண்பர் சுவாமிதாஸ்— ஜனதா கட்சி உறுப்பினர்—அவரும் சொன்னார், குமரி மாவட்டத்திலேதான் எஸ்.பி., அவரைப்பற்றி விமர்சனம் செய்ததற்காக, தன்னை ஒரு வழக்கிலே மாட்டி வைப்பதற்காக, வழக்குப் போட்டிருக்கிறார் என்று சொன்னார். குமரி மாவட்டத்திலே அரசாங்கத்திற்கு இது ஒரு டேஞ்சர் சிக்னல், ஒரு எச்சரிக்கை. அப்படி குமரி மாவட்டத்திலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.....

திரு. அ. சுவாமிதாஸ் : அந்த எஸ்.பி. அங்கே இல்லை, பழைய எஸ்.பி.

திரு. என். சங்கரய்யா : எங்களுடைய தகவல்படி, இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய டி.எஸ்.பியே அதற்கு முன் நின்று இன்றைக்கு அந்தமாதிரி வழக்குகளை ஜோடித்திருக்கிறார். ஆகவேதான் கூறுகிறேன், ஒரு மாநில அரசாங்கத்தினுடைய ஆட்சி அங்கே நடக்கிறதா என்று கேட்கக் கூடிய அளவுக்கு தொழிற்சங்க இயக்கத்திற்கு எதிராக முதலாளிகளுக்கு ஆதரவாக

1979 அக்டோபர் 30] [திரு. என். சங்கரய்யா]

டணிபுரிந்து கொண்டிருக்கிற அந்த அதிகாரி பற்றி பரிசிலனை செய்து, தன்னுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறவர்மீது கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சிறைச்சாலைகளைப்பற்றி ஒரே ஒரு வார்த்தை. திருச்சியிலே இடம் பெற்றது. இரண்டு கைதிகள் இறந்ததைப் பற்றி ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே போகவில்லை. ஆனால், இன்றைக்கு சிறைச்சாலையிலே, சிறையினுடைய அதிகாரிகள் தன்னுடைய பொறுப்பிலே வாக்கூடிய உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கின்றவர்கள்.

ஒருவர் சொன்னார் ''கைதிகள் செத்தால் காக்காய் செத்த மாதிரி'' என்று ஒரு பழமொழி இருக்கிறதாம் சிறையில். அப்படி மனித உரிமைகளை பற்றிப் பேசுகிற நாம் ஒரு மனிதன் ஒரு தண்டனை பெற்று சிறைக்குப் போகிறான்; தண்டனை அனுபவிக்கிறான்; என்றால் அவன் உயிரோடு வர வேண்டாமா? காவல் நிலையத்திலோ சிறைச்சாலையிலோ ஒருவன் தூக்குப் போட்டுக் கொண்டு செத்தான் என்றால் தூக்குப் போட்டுக் கொள்வதற்கு வேறு இடம் இல்லாமலா சிறைக்குப் போகிறான். தூக்குப் போட்டுக் கொள்வதற்கு வேறு இடம் இல்லாமலா காவல் நிலையத்திற்குப் போகிறான். எடுத்த எடுப்பிலே பிரைமா ஃபேசி காவல் நிலையத்திலோ சிறைச்சாலையிலோ ஒரு மனிதன் இன்றைக்கு இறந்தான் என்றால் சந்தேகத்திற்கு இடமாக காரணம் இல்லாமல் இறந்தான் என்றால் அதை ஒரு கொலை என்றுதான் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். இது எந்த அரசாங்கம் இருந்தாலும் பின்பற்ற வேண்டிய ஒரு கொள்கை. எந்த அரசாங்கமாக இருந்தாலும் எந்த எதிர்க்கட்சியாக இருந்தாலும் பின்பற்ற வேண்டிய ஜனநாயக நடைமுறை என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்குக் கூட இதுகுறித்து நமது சிறைத்துறை அமைச்சரிடத்திலே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகளால் மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் பாதுகாக்க எந்த ஒரு அரசாங்கமும் தயங்கக் கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஒரு எண்ணம் இருக்கிறது. ஸ்தாபன ரீதியாக அமைந்திருக்கிற தொழிலாளர்கள் கேட்கிறார்கள். ஆனால் எந்த ஒரு ஸ்தாபனமும் இல்லாத கிராமப்புறங்களிலே இருக்கிற லட்சக்கணக்கான மக்களைப் பற்றித் தான் இந்த அரசு அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும்

[திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

என்று அவர்கள் கூறுகிறார்கள். உண்மையிலேயே நான் கிராமப் புறத்திலே உள்ள அடித்தளத்திலே உள்ள மக்களுக்கு நன்மைகள் செய்கிற காரியங்களை வரவேற்கிறேன். அதைத்தான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் விரும்புகிறது.

ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால் நகர்ப் புறத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு அநீதி அளித்துத்தான் செய்யப்பட வேண்டுமா? கிராமப்புறத்திலே இருக்கிற விவசாயத் தொழிலாளர்களின் அவதிகளுக்கு நகர்ப்புறத்திலே இருக்கிற தொழிலாளர்கள்தான் காரணமா? எவ்வாறு நகர்ப்புறத்திலே இருக்கிற தொழிலாளிகளை பெருமுதலாளிகள் சுரண்டுகிறார்களோ அதேபோல கிராமத்தில் இருக்கிற விவசாயிகளை நிலப்பிரபுக்கள் சுரண்டுகிறார்கள். ஆகவே நகர்ப்புறத்திலே இருக்கிற பெருமுதலாளிகளின் சுரண்டலில் இருந்தும், கிராமப் புறத்திலே இருக்கிற நிலப்பிரபுக்களின் சுரண்டலிலிருந்தும் தொழிலாளர்களையும், ஏனைய விவசாயிகளையும் ஒன்றுபடுத்தி போராட வேண்டிய போராட்டத்தை சர்க்கார் இது நகர்ப்புறம், இது கிராமப்புறம் என்று பிரித்து, பாகுபடுத்திப் பார்க்கக் கூடாது.

அந்த முறையிலேதான் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை பேசி, அவர்கள் ஒரு கமிஷனை நியமித்து தமிழ்நாடு பூராவும் ஒரு கூலி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நாங்கள் கூறுகிறோம் ரெவின்யூ அதிகாரி, போலீஸ் அதிகாரி இவர்களுக்கெல்லாம் அரசாங்கம் உத்தரவிட்டு இந்தச் சட்டத்தின்படி நடக்காத நிலப்பிரபுக்களை தண்டிப்பது, அவர்கள் மீது வழக்குப் போடுவது இவைபற்றியெல்லாம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் போனால் தமிழ் நாடு முழுவதும் கொண்டு வந்திருக்கிற கூலிச் சட்டம் என்பது காகிதத்திலே தான் இருக்கும்.

கிராமப்புறத்திலே உள்ள விவசாயத் தொழிலாளர்களின் பிரிதிநிதிகளை அரசாங்கம் தங்களுடைய இயக்கத்திலே சேர்த்துக் கொண்டு அதிகாரிகள் இவர்கள் சொல்லக்கூடிய முறையீடுகளைக் கேட்டு நடக்க வேண்டுமென்று முடிவு செய்தால் இந்தக் கூலிச் சட்டம் என்பது தமிழகத்திலே கிராமங்களிலே அமலுக்கு வரும். நாங்கள் அதை வரவேற்றோம். சட்டம் கொண்டு வந்தார்கள். வரவேற்றோம். அமல் படுத்த வேண்டுமென்று கோருகிறோம். அமல் படுத்த வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்கிறோம். தண்டோரா போடவேண்டும். இந்தச் சட்டத்தை மீறினால் அரசாங்கமே நடவடிக்கை எடுக்குமென்று அரசாங்க இலாகா அதிகாரிகள் கிராமப் புறத்திலே உள்ள நிலப்புரபுக்களிடத்திலே கூறவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

1979 அக்டோபர் 30] [திரு. என். சங்கரய்யா]

கிழக்குத் தஞ்சையிலே இருக்கிற ஃபேர் வேஜஸ் ஆக்ட், தமிழ் நாடு பூராவும் மினிமம் வேஜஸ் ஆக்ட் இருக்கிறது. இப் பொழுது என்ன வந்திருக்கிறது என்றால் கிழக்குத் தஞ்சை யிலே அறுவடையிலே 54 லிட்டருக்கு 6 லிட்டர் கூலி. தமிழ்நாடு முழுவதற்கும் போடப்பட்டதிலே, கிடைப்பதிலே 8-ல் 1 பங்கு தான் கூலி. 8-ல் 1 பங்கு கூலி அறுவடைக்கு என்பது அதிக மானது. இதையே கிழக்குத் தஞ்சைக்கும் கொண்டு வரவேண்டும். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல் இந்த 4 மாதங் களுக்குக் கூலி என்று கிழக்குத் தஞ்சையிலே இருப்பதை நீக்கி விட்டோம் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்படி உத்தரவு போடப்பட்டு இருந்தால் அந்த ஒரு பிரச்சனையும் கிழக்குத் தஞ்சையிலே தீரும். ஆகவே இந்த குறைந்த பட்சக்கூலி சட்டம் என்பது லட்சோப லட்சம் தொழிலாளர்களைப் பாதுகாக்கக் கூடியது.

(பிற்பகல் 12—20)

எங்களுடைய சந்தேகம் என்னவென்றால், கோவில் நிலங்களில் வேலை செய்யும் குத்தகை விவசாயிகளைப் பற்றி இந்த அரசாங்கம் கொண்டுள்ள கொள்கையைப் பற்றியதாகும். இந்த அரசாங்கத்தின் மீது பலவிதமான நிர்ப்பந் தங்கள் கொண்டுவரப்படுகின்றன. நிலப் பிரபுக்கள் பல்வேறு நிலைமைகளைக் காட்டி, இன்று அந்தக கோவில் நிலங்களில் பணி செய்யும் விவசாயிகளை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் இந்த அரசாங்கம் அந்த நிலங்களில் இருந்து குத்தகை விவசாயிகள் வெளியேற்றப்படுவதை தடுக்கவேண்டும். சென்ற ஆண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

குத்தகை வாரத்தில் ஈடுபடும் விவசாயிக்கு 75 சத விகிதம் சாகுபடி எடுத்துக்கொள்ளலாம். அதாவது 4 மூட்டை விளைந்தால், 3 மூட்டை எடுத்துக்கொள்ளலாம். அந்த முடிவு நல்ல முடிவு. உழுபவன் அவன். அவனுக்கு முக்கால்வா சி பங்கு கிடைக்கவேண்டும். அந்த அறிவிப்பு இன்னும் சட்ட மாக்கப்படவில்லை. அது உடனடியாக சட்டமாக்கப்பட வேண்டும். அது சட்டமாக்கப்பட்ட உடனே நிலத்தை விட்டு வெளியேற்றும் முயற்சிகள் நடக்கும். எக்காரணத்தைக் கொண்டும். Right of personal resumption கூடாது.

இன்றைக்கு நகர் புறங்களில் பல்வேறு வகையான சம்பளம் வாங்குபவர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் இருக் கிறார்கள். அவர்களுக்கு கிராமப் புறங்களில் நிலம் இருக்

[திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

கிறது. நிலத்தை மட்டும் நம்பி வாழ்பவர்களும், வேறு வருமானம் இல்லாதவர்களும் மாத்திரம்தான் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று நிலைமை இருக்கவேண்டும். இந்தப் பிரச்னையை மேற்கு வங்கத்தில் உள்ள அரசு நன்றாகச் செய்து இருக்கிறார்கள். Right of personal resumption. நிலத்தை தன் பெயருக்கு மாற்றவேண்டும் என்று சொன்னால், அவனுக்கு எந்தவிதமான வருமானமும் இருக்கக்கூடாது, அவன் அந்தக் கிராமத்தில் வாழவேண்டும், அவன் குடும்ப உறுப்பினர்கள் உடல் உழைப்பு அதில் செலுத்த வேண்டும், அந்தக் குடும்பத்திற்கும் வேறு வகையில் வருமானம் இல்லாமல் இருக்க வேண்டும், அப்படி இருந்தால் தான் அந்த நிலத்தை குத்தகை விவசாயிடமிருந்து மீட்க மனு போட முடியும். அதோடு, அவன் குத்தகை விவசாயி இல்லை என்று நிரூபிக்கும் பொறுப்பும் அந்த மிராசுதாரரைச் சேர்ந்தது என்று மேற்கு வங்க அரசின் சட்டம் கூறுகிறது. அதனால் தான் விவசாயி, தொழிலாளி அங்கே காக்கப்படுகிறான், அதனால் தான் மேற்கு வங்க அரசுக்கு ஆதரவாக கோடிக் கணக்கான விவசாய மக்கள், இடதுசாரி ஐக்கிய அணிக்கு ஆதரவாக உறுதியாகத் திரண்டு இருக்கிறார்கள். அந்த அரசாங்கமும் அவர்களுடைய நலனில் உறுதியாக நின்று, நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நம்முடைய அரசாங்கமும், தயக்கம் இன்றி குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்கவும், கோவில் நிலங்களில் சாகுபடி செய்பவர்களை வெளியேற்றாமல் தடுக்கவும், 75 சதவிகிதம் சாகுபடி குத்தகை விவசாயிக்கு என்று சட்டம் கொண்டு வந்தால், நிச்சயமாக அந்த விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி நாங்கள் சொல்கிறபோது, நாராயணசாமி நாயுடு அவர்கள் அங்கே விவசாயிகளுக்காகப் போராடுகிறார்களே, அவர் விவசாயி இல்லையா என்று கேட்கிறார்கள். நான் சொல்கிறேன், அது ஒரு நிலக்கிழார் சங்கம். நிலப் பட்டாதாரர்கள் சங்கம். அது நிலப்புரத்துவச் சங்கம். அவர்களுக்குத் தான் கூட்டுறவு சொசைட்டியில் 10,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள், டிராக்டர் வாங்க.

நம்முடைய வியாக்கியானப்படி, நிலத்தில் பாடுபடுகிற விவசாயிக்கு இந்தக் கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையில், ஒரு சீரான பார்வை வேண்டும். இன்றைக்கு நிலக்கிழார்களுக்கு கொடுக்கப்படும் கடன் ரத்து செய்யக்கூடாது ஆனால் சிறு விவசாயிகளுக்கு, மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ளபடி 2½ நஞ்சை நிலம், 5 ஏக்கர் புஞ்சை நிலம் இதைப்

1979 அக்டோபர் 30] [திரு. என். சங்கரய்யா]

பின்பற்றினால் கூட போதுப் கடனைத் திருப்பிக்கட்ட இயலாத விவசாயிக்கு கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய இந்த அரசாங்கம் யோசிக்கவேண்டும். இதைத்தான் நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இது ஒரு நியாயமான கோரிக்கை. இந்த வகையில் அரசாங்கம் ஆலோசனை செய்தால், இந்த நிலப் பிரபுக்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு இருக்கும் விவசாயிகள் உங்கள் பக்கம் திரும்புவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மூலையில் (வலது பக்கம்) அதிக சத்தம் கேட்கிறது. நண்பர் லத்தீப் அவர்கள் பேசுவதுதான் கேட்கிறது. அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: ஆகவே, அந்த ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கிற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் அழகர்சாமி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். சென்ற சட்டமன்ற கூட்டத்தில் ஒரு தவறான காரியத்தை நாம் செய்து விட்டோம். ஏற்கனவே கடன் பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக இரண்டு சட்டம் இருந்தது. பான்ப்ரோக்கர்ஸிடம் கடன்பட்டவர்களுக்கு பாதுகாப்பும், தனியாரிடத்தில் கடன்பட்டவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுத்து இருந்தோம். அந்த இரண்டு சட்டங்களையும் ரத்து செய்து விட்டோம். இன்று நிலைமை என்னவென்றால், அந்தச் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டவர்கள் இன்று கடன் கொடுக்கப்பட்டவர்களால் வழக்கு போடப்பட்டு, அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதை எதற்காக இந்த அரசாங்கம் ரத்து செய்தது என்று தெரியவில்லை. இங்கேதான் நாங்கள் அரசாங்கத்தின் நிலையை எதிர்க்கிறோம். விருப்பு வெறுப்பு இல்லாமல் சிந்தனை செய்து பார்த்தால், இந்தச் சட்டங்களை ரத்து செய்தது தவறு என்று தெரியும். ஆகவே, ஏற்கனவே கொடுக்கப்பட்ட வசதிகளைத் திரும்பவும் அளிக்கும் விதத்தில் ஏழைகள் தனியாரிடம் பட்டுள்ள கடனில் இருந்து நிவாரணம் பெற புதிய தொரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு சாதாரண விவசாயிகளிடத்திலே பாக்கி இருக்கிறது. பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை கூடாது என்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் இதிலே தவறு நடக்கிறது. அரசாங்கம் இதிலே உன்னிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில், அது மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து செய்ய வேண்டியது. இன்றைக்கு தொழிலாளர்கள், என்.ஜி.ஓ-க்கள் பஞ்சப்படி உயர்வு கேட்கிறார்கள் என்றால், கோரிக்கை வைக்கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் விலைவாசி உயர்வு தான். ஆகவே, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தினால் விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்; ஏழை எளிய மக்களைப் பாதுகாக்க முடியும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த நியாயவிலைக் கடைகளைத் திறந்திருக்கிறீர்கள். அதுபற்றி பல புகார்கள் வருகின்றன. தேவையான பொருட்கள் அங்கே இல்லை என்று புகார் வருகிறது. அங்கே எடை சரியாக இல்லை என்ற புகார் இருக்கிறது. விவசாயிகள் வேலை முடிந்துவந்து, வாங்கக்கூடிய நேரத்தில் கடைகள் திறந்திருப்பது இல்லை என்ற புகார் வருகிறது. அங்கே ஸ்டாண்டர்டு துணி உட்பட, தேவையான பொருட்கள் அனைத்தும் அங்கே இருக்கும்படி பார்த்துகொள்ள வேண்டும்; புகார்கள் வராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

விலைவாசியால் பாதிக்கப்பட்ட மக்கள் நியாயவிலைக் கடைகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அரசாங்கம் தேவையான பொருட்களை கொள்முதல் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்காருடன் கலந்து கொண்டு அதற்கான ஏற்பாடுகளையும் பண உதவிகளையும் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உணவுக்கு வேலை என்பதைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு வேலைகளை இலாகா மூலமாகத்தான் நடத்த வேண்டும். இன்றைக்கு அவைகள் எல்லாம் காண்ட்ராக்ட் மூலம் நடத்தப்படுகின்றன. அது சரியல்ல என்பது எங்களுடைய கருத்து. மேலும் பஞ்சாயத்து யூனியன்களில் இன்றைக்கு பணம் ரொக்கமாகக் கொடுக்க முடியவில்லை. இந்த மாதிரியான பணிக்காக மாநில சர்க்கார் பல கோடி ரூபாய்களை கொடுக்க ஒதுக்கி வைக்க வேண்டும். அதனால் நிச்சயமாக பலன் ஏற்படும். இந்த உணவுக்கு வேலை திட்டம் ஒரு நல்ல திட்டம். அதை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும். தேவையான பணத்தை ஒதுக்கி வைத்தால்தான் வேலை இல்லாத காலத்தில் நல்ல வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க முடியும். ஆகவே, இதில் வேற்றுமை பாராட்டாமல், விவசாயச் சங்கம், மற்ற சங்கங்களின் ஒத்துழைப்பையும் பெற்று இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 அக்டோபர் 30] [திரு. என். சங்கரய்யா]

மதுவிலக்கு கொள்கையைப் பொறுத்த மட்டில், அது ஒரு கொள்கை என்பதே தவறு என்பது எங்களுடைய வாதம். மதுவிலக்கு உலகத்திலே வெற்றியடையவில்லை. ஒரு நோயாளி கான்சர் ஆஸ்பத்திரியில் போனவுடன் கேட்கிறார்கள், நீ புகையிலை சாப்பிட்டாயா, குடித்தாயா என்று. நூற்றுக்கு 95 பேர்களுக்கு புகையிலை சாப்பிடுவதினாலேயே கான்சர் வருகிறது என்று சொல்கிறார்கள். அது தெரிந்தும் அந்த பழக்கத்தை நிறுத்திவிட்டார்களா என்றால் இல்லை. சிகரெட், பீடி பழக்கம் உள்ளவர்கள் அதை நிறுத்தவில்லை. கடினமாக உழைக்கின்றவர்கள் இன்றைக்கு களைப்பைப் போக்க மது அருந்தும் பழக்கத்தை வைத்திருக்கிறார்கள். எனவேதான் கடந்த காலத்திலே ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்தபோது அதை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். எங்களுடைய எதிர்ப்பை மதித்து, எங்களுடைய கருத்தை ஏற்று, அந்தச் சட்டத்தை ரத்து செய்யாவிட்டாலும், தவறுகளை உணர்ந்து, அந்தச் சட்டத்தை தளர்த்த முயற்சிக்கிறார்கள். குடித்தவர்களை எல்லாம் இன்றைக்கு விடுதலை செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். இன்னும் சொல்கிறேன். இந்தச் சட்டத்தைத் தளர்த்திவிடுங்கள். மதுவிலக்கு வெற்றியடைய மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்து, மதுவினால் ஏற்படும் தீமைகளை மக்கள் உணரச் செய்து, தகுந்த ஏற்பாடுகளை அதற்குச் செய்ய வேண்டும். மக்கள் உணர்ந்து திருந்தும் வரையில், மதுவிலக்கைத் தளர்த்த வேண்டும்; தண்டனை என்பது இருக்கக் கூடாது; அவர்களை சிறையிலே தள்ளுவது சரியல்ல. இந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை; வழக்குகளைப் போடக்கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இந்த விஷயத்தில் மக்களுடைய கவனம் திரும்பக்கூடாது. சாதாரண மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்கள் பாதிக்கப்படக் கூடாது, உழைக்கின்ற மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பிற்பட்ட வகுப்பு வருமான வரம்பு பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசின் சட்டத்தை ஆழ்ந்து பரிசீலித்தது. 9,000 ரூபாய் வருமானத்திற்கு மேற்பட்டவர்களுடைய பிள்ளைகளுக்கு சலுகை தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் ஒரு திருத்தத்தைக் கூறினோம். மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் 12,000 ரூபாய் வரையில் வருமான உள்ளவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்த சலுகைகளைக் கொடுக்கலாம்; அதற்குமேல் உள்ளவர்களுக்குத் தேவையில்லை என்று கூறினோம். இன்றைக்கும் அதைத்தான் சொல்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த உத்தரவினால் பிற்பட்டோர் நலன் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால்,

[திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருக்கிற இடம் அப்படியே இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இடம் அப்படியே இருக்கிறது. அந்த இடத்தின் எண்ணிக்கையை முன்னால் இருந்த அரசாங்கம் உயர்த்தவில்லை (குறுக்கீடு—25 ஆக இருந்ததை 31 ஆக ஆக்கியிருக்கிறோம்). அதை இந்த அரசு குறைக்கவில்லை. நேரடியாகவே நான் ஒன்றைக் கேட்கிறேன். பிற்பட்ட மக்களுக்கு 31 சதவீதம் என்பதை இந்த அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 12-30]

தாழ்த்தப்பட்டோர், ஷெட்யூல்ட் காஸ்ட்டுக்காக, 18 சதவீதம் என்று இருக்கிறது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். பிற்பட்ட வகுப்பினரில் பணக்காரர்கள் இல்லையா? பிற்பட்ட வகுப்பினரில் முதலாளிகள் இல்லையா? பிற்பட்ட வகுப்பினரில் தொழில் அதிபர்கள் இல்லையா? அவர்களுடைய குழந்தைகளுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படக்கூடிய பொருளாதாரச் சலுகைகள் கொடுக்கப்பட்டுத்தானாக வேண்டுமா? அவர்கள் குழந்தைகள் வசதியில்லாத குழந்தைகளோடு போட்டி போட வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிற்பட்டோருக்குள்ள எண்ணிக்கை அப்படியே இருக்கிறது. இப்போது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகள் எந்த அளவிற்கு வருகிறார்களோ அந்த அளவிற்கு அவர்கள் அரசாங்க அலுவலகங்களுக்கு வருவார்கள், பள்ளிக்கூடங்களுக்கு வருவார்கள். பேராசிரியர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். ஒரு உதாரணம் கூறி, ஒரு குழந்தை பாக்வேர்ட் என்று சொல்லப்படுகிறது. இன்னொரு குழந்தை நான்-பாக்வேர்ட் என்று சொல்லப்படுகிற நிலை இருக்காதா என்று கேட்டார்கள். ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகளில் ஒரு குழந்தை ஐ.ஏ.எஸ். ஆபீசராக வரலாம், ஒரு குழந்தை ஹோட்டல் சர்வராக வரலாம். இன்னொரு குழந்தை பஸ் கண்டக்டராக வரலாம். அப்போது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த பஸ் கண்டக்டருக்கு அவர் குழந்தைக்கு பாதுகாப்புவேண்டுமா அல்லது ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வந்துள்ளவரின் குழந்தைக்கு பாதுகாப்பு வேண்டுமா?

திரு. க. அன்பழகன் : திரு. சங்கரய்யா அவர்களின் வாதத்திற்கு ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். பிற்பட்ட வகுப்பினரில் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதே போல் முற்போக்குப் பிரிவினரிடையே அல்லது பொதுப் பிரிவிலேயுள்ளவர்களிடையேயும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க, மற்றவர்களுக்கு இல்லாத இலக்கணம் இந்த பிற்பட்டோருக்கு மட்டும் ஏற்படக் காரணம் என்ன?

1979 அக்டோபர் 30]

திரு. என். சங்கரய்யா : காரணம் என்னவென்றால், முற்பட்ட சமுதாயத்தில் உள்ள ஏழை மக்களுக்கு எந்தச் சலுகையும் கொடுக்க முடியாத நிலைதான் காரணம். கொடுக்கப்படுகிற சலுகைகள், ஷெட்யூல்ட் காஸ்ட்டுக்கும், பிற்பட்டோருக்கும்தான் கொடுக்கப்படுகின்றன. மற்றவர்களுக்கு கொடுக்கமுடியாமல் இருக்கிறது. முற்போக்கு அல்லது முற்பட்ட சமுதாயத்தில் உள்ள ஏழைகளுக்கும் இந்தச் சலுகையை ஏற்கெனவே வழங்கியிருக்கலாமே, அதற்கு நீங்கள் என்ன முயற்சி எடுத்தீர்கள் ?

*திரு. க. அன்பழகன் : நான் விவாதத்தை வளர்ப்பதற்காகக் கேட்கவில்லை. இருந்தாலும் சுருக்கமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முற்பட்டவர்கள், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்று தேர்ந்தெடுக்கிற குழுக்களில் உள்ளவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள் அல்லது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அல்லது விதவைகள் என்று பார்த்து தேர்ந்தெடுக்கிற ஒரு முறைக்காகத்தான் குழுக்கள் உள்ளன. அந்த முறையை மறந்துவிட்டு அரசு தான் நினைப்பது போல் ஒரு உத்தரவு போடுவது பாதகமானது என்ற உணர்வு ஏற்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : பேராசிரியர் அவர்களுக்கு நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஒரு வரையறை ஏற்படுத்தாமல் குழுக்கள் பார்த்து தேர்ந்தெடுக்கப்படலாம் என்றால் அப்போது ஊழல் செய்தார்கள். ஒருவருக்கு வேண்டுமென்று செய்தார்கள் என்றெல்லாம் புகார்கள் வரும். எனவே, ஒரு வருமான வரம்பு என்று போட்டுவிட்டால் போட்டிக்கு வரமாட்டார்கள் என்ற நிலை ஏற்படும். குறிப்பிட்ட வருமானத்திற்கு மேற்பட்டவர்கள் போட்டி போட முடியாது. போட்டி போடுகிறவர்கள் இடையே மெரிட் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி கிடைத்துவிட்டுப்போகட்டுமே.

*திரு. க. அன்பழகன் : மறுபடியும் நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். இது கல்லூரிகளுக்கு உள்ள அட்மிஷன் மட்டுமல்ல. அப்படியிருந்தாலும் கார்டியனுக்கு வருகிற வருமானத்தை வைத்து, குறிப்பிட்ட அளவிற்கு மேல் வருமானம் வருபவர்களின் பிள்ளைகளுக்கு கல்லூரிகளில் சேருவதற்கு ஆபத்து வருகிறது. அதைவிட உத்தியோகங்களுக்கு என்று வருகிறபோது, ரூபாய் 9,000க்கு மேல் ஆண்டு வருமானம் இருந்தால் அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். இதன் தொடர்பாக அரசு அலுவல்களைப் பெறுவதற்கு இருக்கிற எல்லாவிதமான உரிமைகளும் கூட பறிக்கப்படுகின்றன. இதுபற்றி முழு அளவிற்கு விளக்கங்கள் அளிக்க அரசாங்கம் இதை தனி விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால் முழு அளவிற்கு விவாதிக்க நான் தயாராயிருக்கிறேன்.

[1979 அக்டோபர் 30

திரு. என். சங்கரய்யா : நானும் முழு அளவிற்கு விவாதிக்கத் தயார். அவகாசம் கிடைத்தால் நானும் முழு அளவிற்கு விவாதிக்கத் தயாராயிருக்கிறேன். முற்பட்டவர்களுக்கு சலுகை இல்லை. அவர்களை விட்டு விட்டோம். அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிட்டோம். வசதியற்றவர்களுக்கு சலுகை கொடுப்பதில் என்ன தவறு? எண்ணிக்கைக் குறையாமல் இருக்கும்போது அந்தக் கொள்கையில் என்ன தவறு? அதை கடுமையாகச் சாடுவதற்கு என்ன அவசியம் இருக்கிறது? என்பதைத் தான் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. எங்களைப் பொறுத்த வரையில் ஆர்.எஸ்.எஸ். என்ற அந்த ஸ்தாபனத்தின் வகுப்புவாதக் கொள்கையை கடுமையாக எதிர்த்துப் போராடுகிறோம். ஜனதாக் கட்சி இன்று ஒரு மாறுபட்ட நிலை எடுப்பதற்கு ஆர்.எஸ்.எஸ். செல்வாக்கு அதில் நுழைந்ததுதான் காரணம் என்று எங்கள் கட்சி நிலையை விளக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வந்த முஸ்லீம்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும் இந்து இராஜ்யம் ஏற்படுத்த வேண்டுமென்ற பிற்போக்குச் சிந்தனையை எதிர்த்துப் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

திராவிடர் கழகத்தின் ஒரு போஸ்டர் பார்த்தேன். நண்பர் வீரமணி தலைமையில் உள்ளது. அந்த போஸ்டரில் என்ன போட்டிருக்கிறார்கள்? பிராமணர்கள் தமிழர்கள் என்று கருதுகிறாரா முதல்வர் அவர்கள், தமிழ் சமுதாயம் அதை ஏற்றுக்கொள்கிறதா என்று கேட்கிறார். நான் நினைக்கிறேன். நண்பர் வீரமணி அவர்கள் தலைமையிலுள்ள திராவிடர் கழகம், மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நெருங்கிய நட்பு கொண்டிருக்கிறது என்று. அப்படியென்றால் அவர்கள் சொல்கிறார்கள். பிராமணர்கள் தமிழர்கள் அல்ல என்று. திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிக் கருதுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தலைவர் அவர்களுக்குப் பதிலாக நான் பதில் சொல்வதைத் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். பிராமணர்களாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் வாழ்கிற, தமிழ் உணர்வு கொண்ட தமிழ் உணர்வை மதிக்கும் அத்தனைபேரும் தமிழர்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் சில தவறான கருத்துக்களைச் சிலர் சொல்கிறபோது, கருத்து வேறுபாடுகள் வருகிறபோது, இப்படி அடையாளம் காட்ட வேண்டிய நிலைமை சில பேருக்கு ஏற்பட்டு விடுகிறது.

1979 அக்டோபர் 30]

திரு. என். சங்கரய்யா : இப்போதாவது திராவிடர் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உடன்பாடு இல்லை என்பதை அறிந்து பெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. மு. கருணாநிதி : திராவிட முன்னேற்றக் கழகம் 1949 ஆம் ஆண்டு தொடங்கிய போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ன என்பதை விளக்கும்போது, அருமையாக குறிப்பிட்டிருக்கிறார்கள். கழகம் பிராமணீயத்திற்குத்தான் விரோதியே தவிர பிராமணர்களுக்கு விரோதி அல்ல என்பதை குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்மையில் நான் திருவாரூர் பொதுக்கூட்டத்தில் பேசும் போதும் பிராமணர்களெல்லாம் கெட்டவர்கள் அல்ல, பிராமணர்கள் அல்லாதவர்கள் எல்லாம் நல்லவர்களும் அல்ல என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் அளித்த விளக்கத்திற்கு நன்றி. ஒருவேளை மறுபடியும் பிராமணர்கள் பிராமணர் அல்லாதார் என்ற பூதம் தமிழ்நாட்டில் இளம்புகிறதோ என்று அஞ்சுகிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சினையாக ஆகி ....

திரு. மு. கருணாநிதி : பிராமணர், பிராமணர் அல்லாதார் என்ற பூதம் மறுபடியும் கிளம்புமோ என்று சங்கரையா அவர்கள் அச்சப்படுகிறார்கள். அப்படி கிளம்புமானால் சங்கரையா அவர்களும், ஆளும்கட்சியும் ஆதரவு தருகின்ற ஜனதா கட்சியின் நிழலில் வளருகின்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மூலமாகத்தான் அந்த பூதம் கிளம்புமோ என்று நான் அஞ்சுகிறேன். ஆர். எஸ். எஸ்ஸை வளரவிடாமல் தடுக்க நாம் அனைவரும் சபதம் மேற்கொள்ளவேண்டும்.

திரு.ர. ஜெபமணி : ஆர். எஸ். எஸ்., ஆர். எஸ். எஸ். என்று சொல்லக்கூடியவர்களை கேட்கிறேன். 77-ல் நடந்த தேர்தலில் ஜனதாக் கட்சியோடு அவர்கள் இருந்தார்கள் என்பதை தெரிந்து கொண்டு தான் ஆதரித்தீர்கள். அதை மன்னிப்போம் மறப்போம், ஆனால் இப்போது கேட்கிறேன். ஆர். எஸ். எஸ். வகுப்புவாதக் கட்சி என்றால், முஸ்லீம் லீக் எது. முஸ்லீம் லீக் பற்றி உங்கள் எண்ணம் என்ன? அவர்கள் வகுப்புவாதிகளா இல்லையா? அதை நீங்கள் அறுதியாக உறுதியாக சொல்லுங்கள். அல்லது தமிழர்களை ஏமாற்றுகிறேன் என்று ஏமாற்றாதீர்கள். தமிழ்நாட்டில் இருக்கின்றவர்கள் யாராக இருந்தாலும் தமிழர்கள்தான். தெலுங்கு பேசுகின்றவர்களும் தமிழர்கள்தான், மலையாளிகளும் தமிழர்கள்தான். கொங்கணியர்களும் தமிழர்கள்தான், சௌராஷ்டிரர்களும் தமிழர்கள்தான், இதையெல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளும்போது

[திரு. ர. ஜெபமணி] [1979 அக்டோபர் 30

என்ன வகுப்புவாதம் இருக்கிறது? ஆர். எஸ். எஸ்ஸிடம் என்ன வகுப்புவாதம் இருக்கிறது? ஆர். எஸ். எஸ்ஸை ஆதரித்தீர்கள் 77 லே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் போதும், சுருக்கமாகச் சொன்னால் போதும். உட்காருங்கள்.

திரு. எம்.ஏ. லத்தீப் : முஸ்லீம்லீகைப்பற்றி தங்கள் கொள்கை என்ன என்று கேட்டார்கள் முஸ்லீம்லீக்கைப்பற்றி ஜனதாக் கட்சி என்ன நினைக்கிறது என்பதை அவர் தெளிவாக்க வேண்டும். அவர் இதை ஆர். எஸ். எஸ். இயக்கத்தோடு இணைத்து மதிப்பிடு கிறாரா என்பதை அவர் விளக்கவேண்டும்.

திரு. ர. ஜெபமணி : அவர்கள் தங்களுடைய மதத்தை பாது காக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். நீங்களும் அதைப் போலத்தான் நினைக்கிறீர்கள். இருவருக்கும் நாங்கள் சமமான அந்தஸ்தை தருகிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆர். எஸ். எஸ். இந்து ராஷ்டிரம் என்ற ஒரு தத்துவத்தை இந்த நாட்டில் நிலைநாட்டவேண்டு மென்று சொல்கிறது. அது பெரும்பான்மையான மக்களுடைய சார்பாக.....

(திரு. ர. ஜெபமணி எழுந்தார்.....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங் கள். அவர் இன்னும் முடிக்கவில்லையே. உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்து ராஷ்டிரம் என்ற தத்துவத்தை ஜனதாக் கட்சியும், ஜெபமணி அவர்களும் ஏற்றுக்கொள்கிறார் களா? அப்படியென்றால், இந்து ராஷ்டிரத்தை ஏற்றுக்கொண்டி ருக்கின்றவர்கள், இந்த நாட்டில் வேறு சமுதாயத்தினர் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்களா? ஆர். எஸ். எஸ். சொல்லு வதைப்போல் ஒரு தத்துவத்தை முஸ்லீம் லீக் சொல்லுகிறதா? அப்படிப்பட்ட எந்த சமுதாயத் தத்துவத்தையும் முஸ்லீம் லீக் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. அப்படி சொல்லுகின்ற கட்சியும் அல்ல. சிறுபான்மை சமு தாயத்தின் சார்பில் இயங்குகின்ற ஒரு இயக்கம். பெரும் பான்மை சமுதாயத்திற்குத் தான் ஒரு இயக்கம் தேவை என்று ஜனதாக் கட்சிக் கருதுகிறதா? இந்து ராஷ்டிரம் என்ற தத்து வத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதற்கு விளக்கம் வேண்டும்.

1979 அக்டோபர் 30]

[பிற்பகல் 12.40]

திரு. ஜே. ஜெம்ஸ் : தலைவர் அவர்களே, ஆர். எஸ். எஸ். கூட இந்து ராஷ்டிரீயம் என்ற கொள்கையை கைவிட்டு விட்டார்கள். இது நண்பர் லத்தீப் அவர்களுக்குத் தெரிந்திருக்குமென்று நான் எண்ணி இருந்தேன். அது மட்டுமல்ல. இந்து ராஷ்டிரீயம் என்ற கொள்கையை ஆர். எஸ். எஸ் அவர்களுடைய பைலாவிலிருந்து நீக்குவதற்கும் ஏற்பாடுகள்கூட செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட பத்திரிகையிலே செய்தி வந்திருந்திறது. ஆர் எஸ். எஸ். இன் தலைவர் திரு பால்ராஜ் சாகிப் தியோரஸ் என்பவர் இந்து ராஷ்டிரீயத்தைப் பற்றி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதேமாதிரி, திரு ஜோஷி அவர்கள் இந்து ராஷ்டிரீயம் என்பது ஆர். எஸ். எஸ். இன் அடிப்படைத் தத்துவம்; அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவரை போராட்டம் ஓயாது என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. இதையும் நண்பர் ஜெம்ஸ் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(திரு. ர. ஜெபமணி எழுந்திருக்க முற்படல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிட வேண்டாம். இப்படியே தொடர்ந்தால் விவாதம் ஆகிவிடும். திரு. சங்கரய்யா பேசட்டும். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையிலே, ஆர். எஸ். எஸ். ஸ்தாபனம் இந்து ராஷ்டிரீயம் என்ற கொள்கையை கைவிடவில்லை என்பது எங்கள் நிர்ணயிப்பு. முஸ்லீம் லீக் என்பது ஒரு மைனாரிட்டி இன மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. நாட்டிலே பெரும்பாலான அரசியல் கட்சிகளின் நிலை என்ன என்பதையும் கூறும்போது, தமிழ் நாட்டிலே வகுப்புக் கலவரங்கள் சில இடங்களில் ஏற்பட்டது; அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கின்றது. இதிலே எந்த அரசியல் கட்சிக்கும் கருத்து வேறுபாடு இருக்காது என்று நான் கருதுகிறேன். ஆகவே, அரிசன மக்களின் நலனைக் காப்பாற்றுவதில், அவர்கள் சமுதாய உரிமைகள் காப்பாற்றப்படுவதில், அவர்கள் மேம்பாட்டிலே மேல்ஜாதிக்காரர்கள் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். அப்போர்ப்பட்ட

திரு. என். சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

சமுதாய மேம்பாட்டிற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் வன்மையாகப் போராடும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களை கலைத்ததிலே எங்களுக்கு உடன்பாடு கிடையாது. ஏற்கனவே சட்டமன்றத்திலே இந்த பஞ்சாயத்து தேர்தல்களை நடத்தவேண்டுமென்று சொன்னோம். பஞ்சாயத்துத் தேர்தல்களை அப்போதே நடத்தியிருக்கலாம். ஆனால், அதற்கான முயற்சியோ, ஏற்பாடோ அப்போது செய்யப்படவில்லை. இன்றைக்கு, ஜனவரி மாதத்தில் லோக் சபை தேர்தல் வரப்போகிறது. அது முடிந்தபிறகுதான் தேர்தல் நடத்தப்படும் என்ற நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அது வரை ரோடு இல்லை, லைட் இல்லை என்று சொன்னால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கமுடியாத ஒரு நிலைமை ஏற் பட்டிருக்கிறது. இது மிகத் தவறு. இதைப் போக்க வேண்டு மென்றால், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் எல்லா அரசியல கட்சிகளையும் சார்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, மக்களிடம் செல்வாக்கு உள்ளவர்களை அதிலே போட்டால், ஆங்காங்குள்ள மக்களின் பிரச்சனைகளை இந்த இடைக்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக நான் ஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். இன்று காலையில் இண்டஸ்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட் என்னும் அவ சரச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. அதனை இங்கே அறிமுகக் கட்டத்திலேயே எங்கள் கட்சியின் சார்பாக ஆட் சேபித்து இருக்கிறோம். இந்த சட்டத்தை மத்தியில் ஜனதா சர்க்கார் கொண்டு வந்தபோது நாங்கள் எதிர்த்திருக்கிறோம். வேண்டாம் என்று கூறினோம். எனவே, இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்னால், அந்தத் தொழிற் சங்க மையங் களில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களை, பிரதிநிதிகளை கலந்து கொண்டு இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவது நல்லது.

அதே போல், எஸ்சென்சியல் சர்வீசுக்கு அதாவது அத்தியா வசிய சர்வீசுக்கு ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். இதற்கு ஒரு ஆர்டினன்சைக் கொண்டு வந்திருக்கிறார் கள். அதை இந்த மாநில அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டும். அந்தச் சட்டத்தை இந்த சட்ட மன்றத்திலே கொண்டு வராமலேயே வாபஸ் வாங்க வேண்டும். அப்போதுதான் தமிழ் நாட்டில் உள்ள தொழிலாளர்கள் உழைப்பிற்கு மதிப்பு கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

1979 அக்டோபர் 30] [திரு. என். சங்கரய்யா]

இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆசிரியர்கள் போராட்டத்தைப் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாகவும், இந்தக் கூட்ட இறுதிக்குள் அதுகுறித்து ஒரு அறிவிப்பு தர இருப்பதாகவும் கூறினார்கள். இதிலே ஒரு சுமூகமான முடிவிற்கு வந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதேபோல், இன்றைக்கு போலீஸ்காரர்கள் விஷயத்திலேயும், ஏற்கெனவே தோழர் உமாநாத் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள், அதைப் போல் பல்வேறு மாநிலங்களில் நான்-கெஜட்ட் சங்கங்கள் எவ்வாறு இருக்கின்றதோ, அதே போல் போலீஸ்காரர்களிலும், கெஜட் பதிவுள்ளவர்கள், கெஜட் பதிவில்லாதவர்கள் என்ற வகையிலே, போலீஸ்காரர்கள் முதல் சப்-இன்ஸ்பெக்டர்கள் வரை ஒரு சங்கம் அமைத்துக் கொள்ள இந்த அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். அப்போது தான் அது உகந்ததாக இருக்கும். எனவே, இதிலே கவரவப் பிரச்னைகளைப் பார்க்காமல், போலீஸ்காரர்கள் கோரிக்கையை ஏற்று அவர்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும். இதிலே விருப்பு வெறுப்பின்றி பரிசீலனை செய்து, எந்தவிதமான அரசியல் மாச்சரியங்களையும் சம்பந்தப்படுத்தாமல் அவர்கள் பிரச்னையை முடிக்க வேண்டும்.

அந்த போலீஸ்காரர்களுடைய கிளர்ச்சி எப்படி ஏற்பட்டது? அவர்கள் குமுறிக் கொண்டிருப்பதற்கான காரணம் என்ன? என்பதை யோசிக்க வேண்டும். எனவே, அரசாங்கம் இதைப்பற்றி பரிசீலித்து இந்தப் பிரச்னையை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல் இன்னொன்றை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். எங்கள் ஊழியர்கள் தி.மு.க. ஊழியர்கள், ஜனதா கட்சி தொழிற்சங்க ஊழியர்கள், ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யு.சி தொழிலாளர்கள் ஆகியோர் சேஷசாயி பேப்பர் மில் பிரச்சினையில் போராடி சேலம் மத்திய சிறையில் இருக்கிறார்கள். அங்கே நியாயம் வழங்கப்படவில்லை. தொழிலாளர்கள் மத்தியில் ஆழமான அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக அரசாங்கம் தலையிட்டு முடிவு காண வேண்டும். அரசாங்கத்திற்கு சுப்ரீம் பவர் இருக்கிறது. பொறுப்பு இருக்கிறது. எல்லாவிதமான சட்டங்களுக்கும் அப்பாற்பட்டு ஒரு ரெசிட்யுவரி பவர் இருக்கிறது. சேஷசாயி பேப்பர் மில் பிரச்சினையை அரசாங்கம் சுமுகமாக முடிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விவாதத்திற்குப் பதிலளிக்கும்போதோ அல்லது அதற்கு முன்பாகவோ ஒரு சுமுகமான ஏற்பாட்டை இந்தப் பிரச்சினையில் கண்டு அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

[திரு என் சங்கரய்யா] [1979 அக்டோபர் 30

அரசியல் நிலைமைகளைப் பற்றி எதிர்பாராத விதமாக நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடன் ஏற்பட்ட விவாதத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகள் என்ன என்பதைப் பற்றி ஓரளவு கணிசமாக விவரித்திருக்கிறேன். ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனக்கு அடுத்தப்படியாக திரு. மாரிமுத்து அவர்கள் பேசப் போகிறார்கள். ஆகவே, ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். திருமதி இந்திரா காந்தி அவர்கள் மீது எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் எதுவும் கிடையாது. பண்டித நேரு, மோதிலால் நேரு தேசிய பரம்பரைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். 1969 ஆம் ஆண்டில் கிரி அவர்களை இந்திரா காந்தி அவர்கள் ஆதரித்த போது அன்றைக்கு இருந்த நிலையில் ஒரு பிற்போக்குக் கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்று கருதி நாங்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் இந்திரா காந்தியை ஆதரித்தோம்.

ஆனால் என்ன ஏற்பட்டது? இன்றைக்குப் பார்த்தால், சென்னை நகரிலும் கல்கத்தாவிலும் மனிதர்கள் இஷ்டபூர்வமாக நடமாடமுடியாது என்று இந்திரா காந்தி அவர்கள் ஒரு பேச்சில் பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மாகாண சர்க்கார்கள் இருக்க வேண்டுமா என்று கூடப் பேசியிருக்கிறார்கள் 1971—72 இல் ஆயிரம் மார்க்சிஸ்ட் தொண்டர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இந்த உண்மைகளை மறைக்க முடியுமா? ஆகவே 1972-ல் அந்தத் தேர்தலையே ரத்து செய்தார்கள். 1977 மார்ச்சில் சட்ட மன்றத் தேர்தல் முடிவு என்னவாயிற்று? உண்மையான பலன் தெரிந்தது. 1977-ல் உண்மை என்ன என்பது நிரூபணம் ஆயிற்று.

இங்கே, எங்கள் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மாண்புமிகு அண்ணாதுரை காலஞ் சென்ற பிறகு, சிறிது காலத்திற்குப் பின் தொழிலாளர்கள் கொள்கையில் தகராறுகள் ஏற்பட்டபோது தேர்தல் உடன்பாடு காணவில்லை. 1971 ஆம் ஆண்டில் தனியாகப் போட்டியிட்டோம். 1975 ஆம் ஆண்டில் எமர்ஜன்சி வந்தபோது பெருந்தலைவர் காமராஜ் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் பலபடியாக எமர்ஜன்சியை எதிர்த்து அதற்காக பல திட்டங்கள் அப்போது போடப்பட்டன. அதற்கான முறையிலே காரியங்கள் நடத்தப்பட்டன. சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நேரத்தில் தோழர் இராமமூர்த்தி அவர்கள் வெளியே இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். இராமமூர்த்தி மட்டுந்தான் எமர்ஜன்சி காலத்திலே வெளியிலே இருந்தாரா? மாண்புமிகு கருணாநிதி அவர்கள் வெளியிலே இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் அவ்வளவு பேரும் வெளியே இருந்தார்கள். அப்படியானால் அவர்களுக்கெல்லாம் இந்திரா காந்தி சலுகை கொடுத்தார்கள் என்று அர்த்தமா?

1979 அக்டோபர் 30]

(திரு. சுப்பு எழுந்தார்.)

ஐ யாம் நாட் ஈல்டிங்:

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகம் ரொம்பத் தீவிரமாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்று சொல்லவில்லை. எமர்ஜன்சியை அதிகமாக எதிர்த்தோம். அவர்களும் எதிர்த்தார்கள். ஆனால் மதிப்பிற்குரிய ராமமூர்த்தி, நம்பூதிரிபாத், சிந்தன் ஆகியவர்கள் உள்ளே இல்லை. வெளியே இருந்தார்கள். அந்த அளவுக்கு அவர்கள் பாதிக்கப்படவில்லை. நாங்கள் பாதிக்கவும் பட்டோம், எதிர்த்தும் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் திரு. சுப்புவின் பாயின்ட் ஆப் ஆர்டரா? இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும்? இது முறையல்ல. தாங்கள் எதையாவது பேசுவதற்கு எதையாவது எடுத்துச் சொல்வதற்கு தாங்கள், எல்லாம் தெரிந்தவர்கள் மற்றவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்ற முறையில் நடந்து கொள்வது சரியல்ல. அவர் 'நாட் ஈல்டிங்' என்று சொன்ன பிறகு தாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி இப்படிப் பேசுவது எப்படி என்று நினைத்து பாருங்கள். நீங்கள் பேசும்போது இப்படி வேறொருவர் பேசினால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்று சொல்லியிருக்கலாம். பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்று கன்வர்ட் பண்ணிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு சொன்னார் என்றவுடனே மற்ற உறுப்பினர்களும் எழுந்திருப்பது முறையல்ல.

திரு. என். சங்கரய்யா : திரு சுப்பு அவர்கள் உமாநாத், சிந்தன் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். பிடி வாரண்டில் அவர்கள் வீடுகள் ஜப்தி செய்யப்பட்டன. அவர்கள் எமர்ஜன்சியை எதிர்த்து தலைமறைவாகி தமிழ்நாட்டில் இருந்து போராடினார்கள்.

(பிற்பகல் 12.50)

தலைமறைவாக இருந்து தமிழ்நாட்டிலே போராடினார்கள். அதுதான் உண்மை. எதற்காக, அவசர காலத்திலே.....

[1979 அக்டோபர் 30

திரு. க. சுப்பு : தலைமறைவாக இருந்து போராடவில்லை நாங்கள் நேர்முகமாகப் போராடினோம் அதுதான் வித்தியாசம்.

திரு. என். சங்கரய்யா : நான் இதை, அவர் குறிப்பிட்டதினாலேதான் சொல்லவேண்டி வந்தது. இன்றைக்கு எதேச்சாதிகார சக்தி இந்திய அரசியலில் தலைதூக்க முயற்சித்தால், அதைத் தடுப்பது தான் இந்திய நாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் நல்லது என்ற முறையிலேதான் மாநில கட்டத்திலே சர்க்காருக்கும் எங்களுக்கும் உள்ள பிரச்சினைகள் அரசியல் பின்னணியில் மாநிலப் பிரச்சினைகள் என்று ஒதுக்கப்படுகின்றன. அகில இந்திய அளவிலே விதியை தீர்மானிக்கக்கூடிய முறையிலே ஜனநாயகத்திற்கு ஏற்றவாறு தேர்தல் கொள்கைகள் வைக்கப்படுகின்றன. அந்த முறையிலே ஜனநாயக சக்திகள் எல்லாம் சேர்ந்து செயலாற்றுகிற முறையிலே நம்முடைய அரசாங்கமும், ஆளுங்கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து மக்கள் மத்தியிலே ஏழை எளிய மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மத்திய தர மக்களுக்கும் தங்களுடைய கொள்கை சாதகமாக அமைந்திருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

4. அமைச்சரின் அறிக்கை.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களது கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே திரு. ஜே. என். இராஜு தலைமையில் அமைந்த தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி தமது 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் ஆசிரியர்களுடைய பல்வேறு நெடு நாளைய கோரிக்கைகளை பரிவுடன் கவனித்து நிதி நிலை இடம் தருவதற்கேற்ப அவற்றுள் பலவற்றை நிறைவேற்றி வந்திருக்கிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர் திரு. இராசு, செயலாளர் திரு. ஈஸ்வரன் முதலியோருடனும் மற்றவர்களுடனும் நான் நேரடியாக இவை பற்றி கலந்து விவாதித்துள்ளேன். இப்போது போராட்டம் நடத்தி வரும் தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி கொடுத்துள்ள பல கோரிக்கைகளை அரசு கவனத்துடனும் அனுதாபத்துடனும் பரிசீலித்து கீழே கண்ட முடிவுகளை அறிவிக்கிறது :—

(i) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. இதை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ள இயலாது. இது ஒரு பெரிய கொள்கை

ஆசிரியர் நலமும், திறமும் உயர அரசு அளிக்க இருக்கும் மேற் கண்ட சலுகைகளையும், திட்டங்களையும் சட்டப்பேரவை முன் அறிவிக்கிறேன்.

திரு. சென்னை முத்து அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய கல்வியமைச்சரவர்கள் சொன்னவற்றில் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கையின் மீது விளக்கம் கேட்கக் கூடாது. அதுதான் முறை, மரபு கூட.

[பிற்கபல் 1—00]

3. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களைத் தெரிவிக்க முன்வந்துள்ளேன். காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் கண்டனத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கண்டனத் தீர்மானங்களின் பேரிலே என்ன பேசியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி —பேசுகின்றார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவையிலேயிருந்து கேட்டிருக்க வேண்டும். அவர்கள் அவையிலே இல்லாதது எங்களுக்கெல்லாம் பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டப் பேரவைக் கூட்டம் 6 மாதங்களுக்குப் பிறகு கூடியிருக்கிறது. 6 மாதம் என்பது இந்திய அரசியலிலே ஒரு சிறிய காலம் என்று சொல்ல முடியாது. சட்டப்பேரவைக் கூட்டம் முடிந்த பிறகு எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் பி. எச். பாண்டியன் தலைமை]

அரசியலிலே என்னென்ன நிலைமைகள் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் பார்க்கும் போது வேகமான மாற்றங்கள் நாட்டிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனுடைய விளைவுகளை எல்லாம் நாம் பார்க்கிற பொழுது சட்டப் பேரவை உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக அடிக்கடி சட்டசபை கூடுவது நலம். 6 மாதத்திற்கு ஒரு தடவைதான் கூட வேண்டுமென்ற நிலைமையை மாற்றி, ஆண்

1979 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

டிற்கு 4 தடவையாவது கூடுகின்ற முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மத்தியிலே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பாராளுமன்றத் தேர்தல் ஜனவரி 3-ஆம்தேதியும், 6-ஆம் தேதியும் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மத்தியில் ஆட்சியிலே இருந்த ஜனதா கட்சி, 5 ஆண்டு காலம் தங்களுக்கு மக்களால் கொடுக்கப்பட்ட ஆட்சியை நடத்த வாய்ப்பை பயன்படுத்தாமல் 2½ ஆண்டுக் காலத்திலேயே ஆட்சியைக் கலைத்து விட வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, நல்ல ஆட்சியை அமைப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 2½ ஆண்டு ஆட்சியிலே நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பொருளாதார சீர்கேடுகளை எல்லாம் இன்றைக்கு மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய ஜனதா கட்சி உறுப்பினர் சுவாமி தாஸ், மாநில அரசு கலைக்கப்படுவதைப் பற்றிக் கூறினார்கள். தானே கவிழ்ந்தது பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் என்ன, என்னவோ கூறினார். அவர் பத்திரிகையைப் புரட்டிப் பார்க்க வேண்டும். சரண்சிங் ஆட்சிக்கு ஆதரவு கொடுத்ததை வாபஸ் வாங்கியது என்ன நியாயம் என்று கேட்டார். சரண்சிங் ஆட்சிக்கு அளித்த ஆதரவை வாபஸ் வாங்கியதை முதன் முதல் பாராட்டியவரே ஜனதா கட்சியின் தலைவர் சந்திரசேகர்தான். குருவுக்கு மிஞ்சிய சிடன் போல் ஆளுக்கு ஆள் ஒவ்வொரு விதமாகப் பேசியதால்தான் ஜனதா ஆட்சிக்கு அந்நிலை ஏற்பட்டது. அங்கே ஒரு 'டிசிப்ளினே' கிடையாது....

திரு. ர. ஜெபமணி : பாய்ண்ட் ஆஃப் ஆர்டர், டிசிப்ளின் கிடையாது என்றால் என்ன அர்த்தம் ? அதைக் கேட்கக் கூடாதா ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஐ எம் நாட் யீல்டிங்.

திரு. ர. ஜெபமணி : யாருக்கு டிசிப்ளின் கிடையாது?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஐ ஆம் நாட் யீல்டிங்.....

திரு. ர. ஜெபமணி: யாருக்கு டிசிப்ளின் கிடையாது? கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சியைத் தோற்கடித்த ஒரு கட்சியைச் சேர்ந்தவர் சொல்கிறார், கட்டுப்பாடு இல்லையென்று. (குறுக்கீடு) ஜனாதிபதி தேர்தல் நடந்தது இருக்கட்டும். ராஜ்நாராயணன் வீட்டிற்கு சஞ்சய் காந்தியை அனுப்பியது * * * அல்லது சரண் சிங் வீட்டிற்கு இந்திரா காந்தி எதற்காகப் போனார், * * *

[* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.]

[1979 அக்டோபர் 30

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பாய்ன்ட் ஆஃப் ஆர்டரில், ஏதாவது விளக்கம் கேட்கலாமே தவிர, ஒரு தனி பிரசங்கம் பண்ணிக் கொண்டே இருந்தால், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பிரசங்கம் செய்யலாம். மதிப்பிற்குரிய சுவாமிதாஸ் அவர்கள் சரண்சிங் அவர்களுக்கு அளித்த ஆதரவைப் பற்றி பேசினார்கள்.

திரு. மு. கருணாநிதி : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் ஜெபமணி அவர்கள் பேசும்போது இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். யாரோடு இணைத்துப் பயன்படுத்தினார் என்பதை எல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. * * *என்ற இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். அவைகள் அவைக் குறிப்பில் இருக்கலாமா என்று தாங்கள் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அந்த இரண்டு வார்த்தைகளையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தயவுசெய்து இம்மாதிரியான தலையீட்டை அனுமதிக்க வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சரண்சிங் கட்சிக்கு ஆதரவு கொடுத்ததைத் திரும்பப் பெற்றுக் கொண்டது, வாபஸ் பெற்றுக் கொண்டது தவறு என்று சொல்கிறார், திரு. சுவாமிநாதாஸ். ஜனதா கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. சந்திரசேகர் சரிதான் என்று பாராட்டியிருக்கிறார். நீங்கள் ஜனதா கட்சியைச் சேர்ந்தவரா சரண்சிங் கட்சியைச் சேர்ந்தவரா என்றுதான் உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்களிடம் நான் அறிந்துகொள்ள ஆசைப்பட்டேன். இப்பொழுது பதில் தேவையில்லை. (குறுக்கீடு) ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட விபத்து ஆளுக்கு ஆள் பேசியதால்தான்.

அடுத்து, நேற்றைய தினம் பேசுகிற போது மதிப்பிற்குரிய மார்க்ஸிஸ்ட் கட்சியினுடைய தலைவரும் சரி, துணைத் தலைவரும் சரி, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பெரிய சர்வாதிகாரம் நடந்ததாகக் குறிப்பிட்டார்கள். இப்பொழுதும் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் இப்பொழுது பெரிதாக ஆட்சேபிக்கவில்லை. நேற்றைய தினம் திரு. சங்கரய்யா பேசுகிறபோது சர்வாதிகார இந்திரா காங்கிரஸ், சர்வாதிகாரி இந்திரா காந்தி என்று சொன்னார். அதை நான் அந்த நேரத்திலே மிகப் பலமாக ஆட்சேபிக்காவிட்டாலும் ஒரு கருத்தைத் தெரிவித்தேன்.

[* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.]

1979 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இப்பொழுது நாங்கள் ஆட்சியில் இல்லை. அதிகாரத்திலே இருந்தால்தான் சர்வாதிகாரம் வரும். அதிகாரத்திலேயே இல்லையே. என்றோ நடந்த ஒன்றை வைத்துக் கொண்டு இன்றைக்கும் அப்படியே பேசுவது கடந்த காலத்தையே பேசிக் கொண்டிருப்பது எவ்வளவு சரியானது என்பதை யோசனை செய்து பார்க்க வேண்டும். அன்றைக்கு நடந்தது சர்வாதிகாரம் என்றால் இன்றைக்கு நடக்கிறது ஜனநாயகமா ? அன்றைக்கு நடந்தது சர்வாதிகாரமும் அல்ல. இன்றைக்கு நடப்பது ஜனநாயகமும் அல்ல. மத்தியில் நடக்கிறதுதான் ஜனநாயகம் என்றால் ஜனநாயகமே வேண்டாமென்று மக்கள் முடிவுக்கு வந்து விடுவார்கள். ஜனநாயகம் இருக்க வேண்டும். ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

1950 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி பிளவு படாத காலத்திலே ரணதிவே அவர்களுடைய தலைமையிலே ஒரு முடிவு எடுத்தார்கள். நாட்டிலே ஒரு பலாத்காரப் புரட்சியின் மூலம் மாறுதல் காணவேண்டுமென்று சொன்னார்கள். மதிப்பிற் குரிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. பலாத்கார புரட்சி முறையிலே ஆட்சியைக் கைப்பற்ற முடியும்; மாறுதல் செய்ய முடியும்; என்ற அவர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள, பலவிதமான கொலைகள், பல கொள்ளைகள் நடந்தன; பல ருடைய சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இதனால் நடந்தது என்ன? இதனால் கம்யூனிஸ்ட் கட்சி பலம் இழந்து விட்டது. அதனால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்ட நஷ்டம் மிக அதிகம். அன்றைய தினம் மக்கள் மத்தியிலே கொள்ளை அடிப் பவர்கள்; கொலை செய்பவர்கள்; பலாத்காரம் செய்பவர்கள் என்கிற பெயர் இருந்தது. அதை வைத்துக் கொண்டு இன்றைக்கு நான் அப்படிப் பேசினால் என்னைத்தான் பயித்தியக் காரன் என்று சொல்லுவார்களே தவிர, கம்யூனிஸ்ட் கட்சியை பலாத்காரக் கட்சி, கொலைகார கொள்ளைக்காரக் கட்சி என்று சொல்ல மாட்டார்கள்.

இந்த நாட்டிலே ஜனதா கட்சி என்று ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தது. அது ஆள முடியாமல் நாட்டினுடைய பொருளாதாரத்தை சீரழித்துவிட்டது. ஜனநாயகம் இல்லை. இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்தால்தான் நாடு உருப்படும் என்று மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் இந்திரா காந்தி சர்வாதிகாரி என்று பேசுவது எந்த அளவுக்கு மக்களிடத்திலே செல்லும் என்று நான் கேட்கிறேன். அந்த வார்த்தையை நீங்கள் பயன் படுத்த உரிமை உண்டு. ஆனால் 30 ஆண்டிற்கு முன்னால் நடந்ததை நாங்கள் சொல்ல நினைத்தால் நாங்களும் உங்களுக்கு இரண்டு அடைமொழிகள் போட முடியும். சொல்ல வேண்டியதை நாகரீக

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1979 அக்டோபர் 30

மாகச் சொல்லுங்கள். சர்வாதிகாரி இந்திராகாந்தி என்று சொன்னால் நாங்கள் வேறு இரண்டு அடைமொழிகளைப் போட்டு இன்னும் நல்ல முறையிலே சொல்வோம். ஆகையினால் அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ஆண்டவர்கள் யாரும் இனிமேல் ஆட்சிக்கு வர வேண்டாம். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்று மக்கள் கருதுவதாகத் தெரிகிறதே அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

*திரு ஏ. ஆர். மாரிமுத்து : இருக்கலாம், தேர்தல் தான் ஜனவரி 3—ம் தேதி வரப்போகிறதே. 10 ஆம் தேதி உட்கார்ந்து அதையெல்லாம் பேசுவோம். மக்கள் என்ன முடிவு பண்ணுகிறார்கள் என்பது அன்றைக்குத் தான் தெரிந்துவிடுமே.

அடுத்தபடியாக, இதைவிட இன்னும் வேடிக்கை என்ன வென்றால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்வாதிகாரத்தை ஒழிப்போம் என்று பேசியதாக பத்திரிகையில் வந்தது. ஒரே ஒரு தடவைதான் வந்தது. அதற்கு முன்னாலும் இல்லை. பிந்தியும் இல்லை. 50 மாத காலமாக—இன்றைக்கு வேண்டுமானால் அரசியல் உறவு முறிந்து இருக்கலாம். அது வேறு — ஜனநாயகம் என்றால் இந்திராகாந்தி என்று நீங்கள் 50 மாத காலமாகப் பேசி வந்தது தப்பா ? அப்படி என்றால் நீண்ட நாள் கழித்துதான்ஒருமுடிவுக்கு வர முடிகிறதா? தெளிவாக இன்னும்ஒரு முடிவுக்கு வரவில்லை என்றுதானே அர்த்தம். அதையே வைத்துப் பார்க்கிறபோது தெளிவான ஒரு கொள்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இது வரையிலும் கைக்கொள்ள வில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

[பிற்பகல் 1·10]

அடுத்து, இந்திய அரசியலிலே நிலையான ஆட்சி வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். அரசியல் சரித்திரத்தை நாம் பார்க்க வேண்டும். சுவிட்சர்லாந்தில் 20 ஆண்டுக்காலம் கூட்டாட்சி நடந்து இன்றுதான் முடிந்திருக்கிறது. 20 ஆண்டுக் காலம் கூட்டாட்சி அங்கே இருக்கின்ற நிலைமையில் முடிந்தது. இந்திய நிலைமையில் கூட்டாட்சி என்பது நீடித்து இருக்க முடியாது. இந்தியாவில் நிலையான ஆட்சி என்பது ஒரு கட்சி ஆட்சியாகத்தான் இருக்க முடியும். (குறுக்கீடு) நிலையான ஆட்சி என்பதைத்தான் ஸ்திரமான ஆட்சி என்று சொல்கிறேன்.

இன்றைக்கு ஜனதா ஆட்சியைப் பார்த்தோம். 4 கட்சிகள் சேர்ந்து ஒரே கட்சியாக இருந்தும், ஆட்சி நடத்த முடியவில்லை. பல்வேறு மாநிலங்களில் கூட்டாட்சி (குறுக்கீடு) கூட்டணி ஆட்சி

1979 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வந்தது. ஆனால் சரியாக நடக்க வில்லை. கேரளாவில் தான் 10 ஆண்டு காலமும் ஒரு கூட்டணி ஆட்சி நடந்திருக்கிறது. இதர மாநிலங்களில் நடக்கவில்லை. (திரு. ரா. ஜெபமணி எழுந்தார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பி. எச். பாண்டியன்) : திரு. ஜெபமணி உடகாருங்கள். இப்படி ஒவ்வொருவராக பேசிக் கொண்டிருந்தால் நேரமாகிவிடும். அவர் பேசி முடித்த பிறகு அதற்கு வேறு யாராவது பதில் சொல்லட்டும். நீங்கள் இப்போது உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : திரு. ஜெபமணி, கோபப்படாதீர்கள். அமைதியாக உட்காருங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்.) திரு. ஜெபமணி தயவு செய்து உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியவர் ஜெபமணி அவர்கள் தயவு செய்து கொஞ்சம் அமைதியாக உட்கார வேண்டும். அவர்கள் பேசும்போது திரு. மாரிமுத்து அமைதியாக இருந்தார் அல்லவா? அவர் தமது கருத்துக்களைக் கூறி முடித்த பிறகு, தாங்கள் எதேனும் விளக்கம் சொல்ல விரும்பினால் அப்போது விளக்கம் தருகிற வாய்ப்பைக் கேளுங்கள். இப்படி எழுந்து, எழுந்து பேசுவது சரியல்ல.

திரு க. சுப்பு : தலைவர் அவர்களே, ஒரே ஒரு வேண்டுகோள். இந்தப் பேரவையில் எங்கள் மீது ரொம்ப மைல்டாக இருந்ததற்கே நடவடிக்கை எடுத்து வெளியே போகச் சொன்னீர்கள். கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்காக பெரியவர் ஜெபமணி அவர்கள் பேசியதற்கு என்ன பண்ணப் போகிறோம்? பின்னாலே இருப்பவர்களை ஒரேயடியாக சிங்குலரில் "வாடா, போடா" என்று பேசியிருக்கிறார். அது நடவடிக்கைக் குறிப்பில் இருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை.

[1979 அக்டோபர் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெபமணி, உட்கார வேண்டும். (சூச்சல் குழப்பம்)

திரு. ஜெபமணி அவர்கள் பண்புள்ளவர், முதியவர், இந்த அவைக்கு வழிகாட்டியாக அவர்கள் அமைய வேண்டும். மற்றவர்கள் எதைச் சொன்னாலும் அதைப் பொருமையாக இருந்து கேட்டு, விளக்கங்கள் தர வேண்டும் என்று விரும்பினால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். இப்படி எழுந்து எழுந்து குறுக்கிட்டுப் பேசுவது நல்லதல்ல. அப்படி பேசுவது இந்த அவையின் மரபும் இல்லை. எனவே பெரியவர் திரு ஜெபமணி அவர்கள் அவைக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே: நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நாங்கள் கட்டுப் படுகிறோம். என்னுடைய வேண்டுகோள், அவர் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம் பெற்றிருந்தால், அது அவருக்கு மரியாதையாக இருக்கலாம். ஜனதா கட்சிக்கு அதுதான் ரைட் என்று இருக்கலாம். திரு .ஜேம்ஸ் தான் பேசச்சொல்லியிருக்கிறார் அவர் பேசுகிறார். இதே நிலைமையில் எல்லோரும் ஆரம்பித்தால் யார் பேச முடியும்? எங்களை எல்லாம் ரொம்ப சீக்கிரமாக ரொம்ப ஈசியாக வெளியேற்றினீர்கள். இன்று செய்த காரியத்திற்கு வெளியே அல்ல நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும்.

(திரு. ர. ஜெபமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசும்பொழுது அவர் குறுக்கிடவில்லை; அவர் பேசி முடியட்டும்; தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மதிப்பிற்குரிய ஜனதா உறுப்பினர் பெரியவர் ஜெபமணி அவர்கள் பெரும் தலைவர் காமராஜ் அவர்களிடமிருந்து பயிற்சி பெற்றவர்கள். கொஞ்சம் பொறுமையாக இருந்து கேட்க வேண்டும். நான் உண்மையைச் சொல்லிக்கொண்டு வருகிறேன்; எதையும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. ஜனதா கட்சி ஆட்சியல் இருந்தபோது அது இரண்டாக உடைந்தது என்பது உண்மை. நான் அந்த உண்மையைத்தான் சொன்னேன். காங்கிரஸ் கட்சி

1979 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஆட்சியில் இருக்கும்போது உடைந்த ஆட்சி கலைக்கப்பட வில்லை. அதனுடைய பதவிக் காலம் முழுவதும் ஆட்சியில் இருந்து விட்டுத்தான் போனது. மத்தியில் ஆட்சியில் இருக்கும் போதே ஒரு கட்சி உடைந்து, பாதியிலே போனது இப்போது தான் நடந்துள்ளது. அதைச்சொன்னால் கோபப்படுவது ஏன் என்று தெரியவில்லை. உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் 20 ஆண்டு காலத்திற்கு, மதிப்பிற்குரிய முதல மைச்சர், இந்தியாவில் ஒரே கட்சி ஆட்சி வராது என்று பேசி யிருக்கிறார். கூட்டணி ஆட்சிதான் மத்தியில் இருக்கும் என்பது அவருடைய வாதம். அது ஜனவரி மாதம் தேர்தலில்தான் தெரியும். மக்கள் எப்படி விரும்புகிறார்களோ தெரியாது. ஆனால் மதிப்பிற்குரிய முதலமைச்சர் கருத்து என்னவென் றால் மத்தியில் ஒரு நிலையான, ஸ்திரமான ஆட்சி அமைய வேண்டுமென்று கருதினால், ஒரே கட்சி ஆட்சிக்கு வரவேண்டும். மக்கள் எந்தக் கட்சியை விரும்புகிறார்களோ அந்தக் கட்சி வரட்டும். அப்படியானால் அது பலமான ஒரு கட்சியாக இருந் தால்தான் நிலையான ஒரு ஆட்சி இருக்க முடியும். பல கட்சி சேர்ந்து, கூட்டணி ஆட்சி அமைவதாக இருந்தால், இப்போது ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட நிலைதான் வரும். முதலமைச்சருக்கு எது எப்படி இருந்தாலும் பரவாயில்லை; தன்னுடைய கட்சி மந்திரி இரண்டு பேர் அங்கே இருக்க வேண்டும். இதுதான் அவருடைய எண்ணம். அந்த எண்ணத்தால் வந்ததுதான் இந்தத் தவறு. ஆக, ஸ்திரமான ஆட்சி வரவேண்டுமென்று அவர் சொல்வதில் அர்த்தமே இல்லை; இதிலும் தெளிவற்ற நிலைதான் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரப் : நிலையான ஆட்சி எது, வலுவான ஆட்சி எது ? இதை நாங்கள் எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். வலுவான ஆட்சி வருவதாக இருந்தால் மாநிலங்கள் எல்லாம் அடிமைப்பட்டுவிடும் என்பது எங்கள் கருத்து. ஆகையால் அங்கே நிலையான ஆட்சி இருக்க வேண்டும்; ஆனால் வலுவான ஆட்சி இருக்கக்கூடாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கூட்டணி ஆட்சி நிலையாக இருப்பதில்லை. 30 ஆண்டுக்கால சரித்திரத்தை வைத்து, கண்ட அனுபவத்தை வைத்து, யதார்த்தத்தை வைத்துச் சொல்கிறேன். அடுத்ததாக, நம்முடைய தமிழ் நாட்டுக்கு வருவோம்.

மதுவிலக்கு. மதுவிலக்கைக் கொண்டு வந்ததே காங்கிரஸ் கட்சிதான். மதுவிலக்கை கைவிட வேண்டும் என்பது எங்கள் கட்சியின் கருத்து அல்ல; எங்கள் கட்சி அப்படி கூறவும் இல்லை. மதுவிலக்கை சரியாக அமுல்நடத்த வேண்டும். இதுதான் எங்கள் நிலை. மதுவிலக்கை சரியாக அமுல்நடத்தப் போகிறோம் என்று

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1979 அக்டோபர் 30

சொல்லி, ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்து, இங்கே நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டத்தை நிறைவேற்றினால், அதன் பிறகு நாட்டிலே இருக்கிற நிலைமை என்னவாகும் என்பதை எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எல்லாம் சொன்னார்கள். புதிய சட்டத்திலே இருக்கிற குடிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும் சரத்தையாவது விட்டுவிட வேண்டும்; பழைய சரத்து இருந்தாலே போதும்; அதையாவது முதலமைச்சர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். முதலமைச்சர் அறவே, மதுவிலக்கை சரியாக அமுலாக்கி, இந்த நாட்டில் மதுவே இல்லாமல் செய்துவிடுவேன் என்று சபதம் செய்தார். அதனுடைய யதார்த்த நிலை என்ன? பொருளாதார கெடுதல்களை சட்டத்தைப்போட்டு, சீர் திருத்திவிடலாம்; தடுத்துவிடலாம். ஆனால்சமூகத் தீமைகளை எப்படி கடுமையான சட்டத்தைப் போட்டு தடுத்துவிட முடியும்? நிச்சயமாக முடியாது.

[பிற்பகல் 1— 20.]

மக்களுடைய மனமாற்றம் தேவை, சட்டம் அதற்கு துணையாக இருக்கவேண்டுமே தவிர சட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு சமுதாய தீமையை போக்குவது என்பது சாத்திய மற்றது. இப்போது நடந்திருப்பது என்ன? ஒருயடத்தில் திடீரென்று அறிவித்துவிட்டார்கள். குடிப்பவர்களை விட்டு விட்டு குடித்துவிட்டு கலாட்டா செய்பவர்களை மட்டும் கைது செய்யுங்கள் என்று சொல்கிறீர்கள். இப்போது இன்றுள்ள கடுமை கீழே போய்விட்டது. அப்படியானால் நன்கு யோசித்து ஸ்திரமான ஒரு முடிவை எடுக்கவில்லை, எடுக்க முடியவில்லை. முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பு வந்தவுடன் குடிப்பவர்கள் பகிரங்கமாகக் குடித்துவிட்டு சுற்றுக்கொண்டிருக்கிறார்கள். கலாட்டா செய்யக்கூடாது என்று சொன்னால் 'கலாட்டா' என்பதற்கு என்ன டெபனிஷன்? சட்டத்திற்கு விரோதமாக குடிப்பவர்களை கைது செய்து தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று கொண்டுவரப்பட்டதால் ஒன்றரை லட்சம் பேர்கள் மேல் வழக்குகள் போட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் மீது பரிவு கொண்டு அவர்களை விடுதலை செய்ய வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. ஸ்திரமான கொள்கை, ஸ்திரமான போக்கு இல்லாததினால்தான் இந்த மாதிரி நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, விலைவாசியேற்றம் இந்தியா முழுவதும் 17 சதவிகிதம் அளவிற்கு பொருட்களின் விலைகள் ஏறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில பொருட்களின் மீது விலை அதிகமாக ஏறியிருக்கிறது, சில பொருட்களின் மீது குறைவாக விலை ஏறியிருக்கிறது.

1979 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

விலைவாசியைக் குறைப்பதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது? விலைவாசியைக் குறைத்து மக்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? விலைவாசியைக் குறைப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது என் குற்றச்சாட்டு. உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். கடலை எண்ணெய் கிலோ ரூ. 7 என்று விற்றது. பிறகு கிலோ 12 ரூபாய் வரை விலை ஏறியது. விவசாயிகள் உற்பத்தி செய்து மார்க்கட்டுக்குக் கொண்டுவரும்போது நிலக்கடலை, பருப்பு மூட்டைக்கு ரூ. 230 (80 கிலோ) என்று வியாபாரிகள் வாங்கி வைத்துக் கொண்டு மூட்டை ரூ. 400 என்று விற்கிறார்கள். எண்ணெய் கிலோவிற்கு ரூ. 12 என்ற விலைக்கு விற்கிறார்கள். இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? வியாபாரிகள் குறைந்த விலையில் வாங்கி வைத்திருப்பதினால், எண்ணையை குறைந்த விலையில் விற்க வேண்டும் என்று ஏன் வியாபாரிகளைக் கட்டாயப்படுத்தக்கூடாது? கட்டாயப்படுத்தியிருக்க முடியும். ஆனால் கட்டாயப்படுத்தவில்லை. நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இதைக் கண்டிக்காமல் என்ன செய்வது?

அடுத்து, உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற சட்டசபைக் கூட்டத்தில் குறிப்பிட்டார்கள். ஹோட்டல்களில் பண்டங்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்போம் என்று. இன்று சாதாரண மக்கள் ஹோட்டல்களுக்கு சென்று பண்டங்களை வாங்கிச் சாப்பிட முடியாத நிலையில் விலை ஏற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுப்போம் என்று சொல்லிவிட்டு நிறுத்தி விடவில்லை. அப்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கேட்டால் அப்போர்ப்பட்ட குழு ஒன்றை நியமிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்றுதான் சொல்லி இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஹோட்டல்களில் பண்டங்களின் விலை கூடுதலாக இருக்கிறது. என்ன நடவடிக்கை எடுத்தாலும் எந்தவிதமான பயனும் இல்லை. என்னென்னவோ பேசுகிறீர்கள். விலையைக் குறைக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

[திரு ஏ. ஆர். மாரிமுத்து] [1979 அக்டோபர் 30

அடுத்து, விவசாயிகள் பிரச்னை. விவசாயிகள் பிரச்னை பற்றி பலமாகப் பேசப்பட்டது. எங்கு பார்த்தாலும் கூட்டங்கள், மகாநாடுகள் எல்லாம் போட்டு விவசாயிகள் கடன்சுமையில் ஆழ்ந்து கிடக்கிறார்கள், அவர்கள் விளைவிக்கக்கூடிய விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்றெல்லாம் பேசப்பட்டன. அதற்காக அரசாங்கத்தால் என்ன நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? ரூ. 40 கோடி விவசாயிகளுக்காக நாங்கள் சலுகை வழங்கினோம் என்று சொல்லலாம். அந்த நாற்பது கோடி ரூபாயில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட மெட்டிரீயல் பெனிபிட் என்ன என்பதைப் பற்றி அரசு சிந்தித்ததா? அதிகாரிகள் நாற்பது கோடி ரூபாய் என்று கணக்குப்போட்டுக் கொடுத்ததை வைத்துக்கொண்டு நீங்களும் 40 கோடி ரூபாய் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். பிரச்னைக்குள்ளே சென்று எந்த அளவிற்கு விவசாயிகளின் கடன் சுமை குறைந்திருக்கிறது, விவசாயிகளுக்கு கிடைத்துள்ள பயன் என்ன, அவர்களின் வாழ்க்கைத் தரம் அதனால் எந்தளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றெல்லாம் பார்க்க வேண்டாமா? ரூ. 40 கோடியில் தக்காவிக் கடன் ரூ. 13 கோடி. அந்த 13 கோடி ரூபாய் எப்போது கொடுத்தது, என்ன என்று யாருக்கும் தெரியாது. அது பற்றிய கணக்கு இருக்கிறதா இல்லையா என்று தெரியாது. தக்காவிக் கடனை வாங்கியவனே ரைட் ஆப் செய்து விட்டான். அவன் அப்பா காலத்தில் வாங்கியது. அவர்களே ரைட் ஆப் செய்து விட்டிருக்கிறார்கள். அதை இந்த சர்க்கார் அல்ல அடுத்த சர்க்கார் வந்தாலும் வசூலிக்க முடியாது. அது 'ரைட் ஆப்' ஆனதுதான். அந்த 13 கோடியையும் சேர்த்துத்தான் இந்த ரூ. 40 கோடி.

அடுத்தபடியாக, நீங்கள் கொடுத்தது ரூ. 27 கோடி நிவாரணம் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்கிய விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த 27 கோடி ரூபாயில் எவ்வளவு பேர்களுக்கு பலன் ஏற்பட்டது? பல கிராம கூட்டுறவு சங்கங்களிலும் விசாரித்ததில் பலபேர்களுக்கு இந்த பலன் வரவில்லை, சிலருக்கு 7 ரூபாய் 15 ரூபாய் என்று பலன் வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதற்கு மேல் எதுவும் பயன் கிடைக்க வல்லை என்று சொல்லுகிறார்கள். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், விவசாயிகளுடைய கோரிக்கை என்ன? இரண்டு தடவை மூன்று தடவை விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது, வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்கு வழியில்லை, விவசாயம் அழிந்து விட்டது, வரட்சியால் அழிந்து போய்விட்டது, வாங்கிய கடனை எப்படி செலுத்துவது, முதலே தேறவில்லை, கடனை கட்டுவதற்கு 'ரிபேயிங் கெப்பாஸிட்டி' இல்லை, அதற்கு சக்தியற்ற நிலையில் இருக்கிறோம், கடனை தள்ளுபடி செய்யுங்கள், வட்டியை தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் அதே நேரத்

1979 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தில் 27 கோடி ரூபாய்க்கு சலுகைகள் என்றால், 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் யார் வட்டி பாக்கி வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு சலுகை. அப்படி 1978 ஜூன் மாதத்திற்கு முன்னதாக யாருக்கு வட்டி பாக்கியிருக்கிறது என்று பார்த்தால் யாருக்கும் இல்லை. காரணம், முன்னால் உள்ள வட்டிபாக்கியை செலுத்தினால் தான் புதிதாக கடன் வாங்க முடியும். இதுதவிர டிபால்டராக யார் இருக்கின்றார்களோ அவர்களுக்குத் தான் இந்த சலுகை கிடைக்கும். இதைப் பார்த்தால் எப்படியிருக்கிறது என்றால், நாணயத்தோடு வட்டி பாக்கியை செலுத்தியவர்களுக்கு சலுகை கிடையாது. டிபால்டராக இருக்கின்றவர்களுக்கு இந்த சலுகை உண்டு. இப்படி டெபால்டர்களாக எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்று பார்த்தால் ஒவ்வொரு சங்கத்திலும் நான்கைந்து பேர்கள் தான் இருப்பார்கள். ஒரு சங்கத்தை எடுத்துக் கொண்டால் 300, 400 பேர்கள் இருப்பார்கள். இதில் பத்துபேர்கள் போக பாக்கியுள்ள 390 பேர்களுக்கு இந்த சலுகை கிடையாதே, அப்படியென்றால் எப்படி இந்த 27 கோடி வந்தது என்று ஒரு அதிகாரியிடம் கேட்டேன். ஒரு சதமானம் வட்டியில் குறைப்பைக் கணக்கிட்டு பத்து வருடங்களுக்கு என்று கணக்குப் பார்த்ததில் 27 கோடி ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். அப்படியானால் ஒரு தலைமுறைக்கு என்ற கணக்கு எடுத்துக் கொள்வது தானே, அப்படியானால், 50 கோடி ரூபாய் வருமே, 50 கோடி ரூபாய்க்கு சலுகை என்று சொல்லிக்கொண்டிருக்கலாமே என்று அதிகாரியிடம் கேட்டேன். அந்த அதிகாரி எந்த விதமான பதிலும் சொல்லவில்லை.

ஆக இன்றைக்கு விவசாயியைப் பொறுத்தவரையில், கடன் சுமையில் அழிந்து கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும், வாங்கிய கடனை திரும்ப செலுத்துவதற்கு எந்தவிதமான சக்தியும் இல்லை. போட்ட முதல் திரும்ப வரவேயில்லை, எங்கேயிருந்து செலுத்துவான் ? நீங்கள் 40 கோடி ரூபாய்க்கு சலுகைகள் என்று அறிவித்துவிட்டதால் 99 சதவிகித விவசாயிகளுக்கும் எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே இதை தயவு செய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதிகாரிகள் தருகின்ற கணக்கை மட்டும் வைத்துக் கொண்டு விவசாயிகளுடைய பிரச்னையில் முடிவு எடுப்பது மிக மிக தவறு என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நெசவாளர்களுடைய பிரச்னை, நூல் விலை மிக அதிகமாக போய்விட்டது. பருத்தியின் விலைக்கும் பஞ்சின் விலைக்கும் சம்பந்தமே கிடையாது, பருத்தி விலை குறைவாக இருக்கிறது, ஆனால் நூலின் விலை அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக நெசவாளர்களுக்கு போதிய அளவு கூலி கிடைக்கவில்லை. துணியின் விலை ஏறிவிட்டதால், துணி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1979 அக்டோபர் 30

ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு சுழல் போல் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நூல்ன் விலையை குறைப்பதற்கு இந்த அரசு இதுவரை எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கவில்லை. எடுத்திருக்க வேண்டாமா ? நெசவாளர் களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் குறைந்த விலையில் நூல் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடாதா ? இது வேண் டுமா இல்லையா ? முன்னால் இருந்த அரசாங்கம் இதுபோன்ற முயற்சிகளை எடுத்தது இல்லையா ? அதை முன்மாதிரியாக வைத்து இந்த அரசாங்கமும் எடுத்து இருக்க வேண்டாமா ? எப்போது இதைச் செய்வது ? செத்து முடிந்த பின்னால் செய் வதா ?

நெசவாளர்களுக்கு என்று ஒரு சட்டம் கொண்டு வரப் படவிருக்கிறது. இப்போது பொறுக்குக் குழுவில் இருக்கிறது. இது விவாதத்திற்கு வரும் என்று நினைக்கிறேன். யாருக்கு இதில் பாதுகாப்பு இருக்கவேண்டுமோ அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை, மாஸ்டர் வீவர்களிடமிருந்து யார் நூலை வாங்கிக்கொண்டுபோய் தன்னுடைய வீட்டில் நெசவு செய்து திரும்ப துணியாக கொடுக்கின்ற அந்த நெசவாளர்களுக்கு இந்த சட்டத்தில் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அப் படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இந்தச் சட்டம் வருவதால் அவர்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இதற்கெல்லாம் என்ன காரணம், இதில் தெளி வான ஒரு கொள்கையில்லை என்று தானே சொல்ல முடியும் ? இந்த மசோதா கொண்டுவரும்போது, தெளிவான முறையில் யோசித்திருந்தால் இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் அகற்றியிருக்க முடியும். இப்போது மசோதா கொண்டு வந்த பின்னால் ஆலோசித்து என்ன பலன் ?

அடுத்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், இப்படி பல்வே வகுப்பைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு போராட்டத்தில் இறங்கி யிருக்கிறார்கள். சமுதாயத்தில் எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட வருவாய்க்குள் (பிக்ஸட் இன்கம்) தங்களுடைய குறிப்பிட்ட சம்பளத்தை வைத்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்த முடியவில்லை. இதன் காரண மாக தங்களுடைய ஊதியத்தை உயர்த்தித்தர வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகிறார்கள். என்ன நிலைமை. இந்த ஐந்து மாத காலத்தில் 17 விழுக்காடு விலை உயர்ந்திருக்கிறது. இதைவைத்துக்கொண்டு என்ன பார்க்க முடிகிறது ? 500 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கு அதனுடைய மதிப்பு அதாவது 415 என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. ஐந்து மாதங்களுக்கு முன் 415 ரூபாய்க்கு வாங்கிய பண் டங்களை 500 ரூபாய்க்கு வாங்க வேண்டி உள்ளது.

1979 அக்டோபர் 30]

[பிற்பகல் 1—30.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, பேரவையை இன்னும் 15 நிமிடங்களுக்கு நீட்டிக்கிறேன். இதற்கு மேல் பசி தாங்காது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சியிலே 25 பிளஸ் 15, மொத்தம் 40 நிமிடங்கள் தான் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய பேசியிருக்கிறார்கள். விவரங்கள் தருகிறேன். 15 நிமிடங்களுக்கு மேல் பசி தாங்காது. எனவே, அதற்குள் நீங்கள் முடித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் இங்கே வரயிருக்கிறார்கள். அப்போது பேசினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலில் பேச ஆரம்பிக்கவேண்டும். நீங்கள் ஒத்துக்கொண்டால், எனக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை.

(எதிர்க்கட்சித் தலைவர் தன் இசைவைத் தெரிவித்தார்.)

அப்போது சரி.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. திருவொற்றியூர் 5 ஆம் எண் நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி நகர் வளர்ச்சித் துறையின் 30 4—1979 ஆம் தேதியிடப்பெற்ற 712 ஆம் எண்